கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



"ஸ்டாலினுக்கு உதவவில்லை!"

KALKI • 21.03.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



- நலம் பயக்கும் நவதிருப்பதி!
- நெல்லையின் தொல்லைகள்!
- வாழ்கிறார் வ.உ.சி.!
- நனவாகுமா, நாங்குனேரி டைடல்பார்க்?
- கேரளாவோடு போறோம்!

திருநெல்வேலி மாவட்ட ஸ்பெஷல்-II

SRIMATHI SUNDARAVALLI MEMORIAL RESIDENCY

"SUBHASHRAYA" - A HOME FOR ELITE SENIOR CITIZENS


CHENNAI - 600063

Heaven On Earth





RIGHT PLACE FOR ELDERS



Spiritualism



Peace



Honour



Comfort



Luxury



Health

With the Heart to Serve *We Welcome you*

Moppedu Road, Alapakkam, New Perungalathur, Chennai-600063

Phone No : 044-2279 2002-04 Fax : 044-2279 2009

E-mail : ssmeto@dataone.in Website : www.ssmhome.in


அடுத்த வாரம் கல்கி வழங்கும்
கோடைக்கால கொண்டாட்டம்!
பாலிடிக்ஸ் முதல் பப்ளிக் வரை...
உங்களை குஷியாக்கும் ஜாலி பாம்கள்... வெடிக்க இருக்கின்றன.
அதிரடியாய் 6 வார ஆரவாரம்
ஜாலி ஸ்பெஷல்
வெனிலா ஐஸ் விவரங்கள் வெகு விரைவில்..!
கல்கி



மீராவைத் தேடி!

பெரியாழ்வார் பரம பக்தரல்லவா? ஆண்டாளின் தெய்வீகக் காதலைப் புரிந்து கொண்டார். சுலபத்தில் சுபம். ஆனால் மீராவின் போராட்டம் நெடியது; கொடியது! கண்ணனை மனத்தில் வரித்தாலும், மேவார் ராணாவை நிஜத்தில் கைத்தலம் பற்ற வற்புறுத்தப்பட்ட ராஜபுதனத்துக் குறுநில இளவரசி அவள்!

பக்திப் பித்துப் பிடித்த இந்த அசாதாரணப் பெண்ணின் அபூர்வ கதையை மீரா பாடல்களாலேயே கோத்து, 'பைரே பான்வரி' என்ற மேடை நிகழ்ச்சியாக வழங்கினார் கௌரி ராம்நாராயண். பாடல்களை பாம்பே ஜெயஸ்ரீ பாடினார். உணர்ச்சியும் ரசனையும் ததும்பக் கேட்கவா வேண்டும்!

பெரும்பாலும் ஹரிகதை அல்லது எம்.எஸ். நடித்த மீரா திரைப் படம் மூலமாக மட்டும் நாம் அறிந்த மீரா வரலாற்றில் (எழுத்துப் பூர்வமான வரலாற்றுப் பதிவே கிடையாது என்கிறார்கள்), இடம் பெறாத சில புதிய நிகழ்வுகளைத் தேடிப் பிடித்து வழங்கியிருந்தார் கௌரி. அவை வெறும் ஆராய்ச்சிப் பதிவுகளாக அன்றி, உயிர்த் துடிப்புள்ள மீராவின் உணர்ச்சிப் பதிவுகளாகவே உரிய பாடல்கள் மூலம் வெளிப்பட்டன. மீரா பூமிக்குச் சென்று கண்ட காட்சி அனுபவங்கள் இணைப்பு உரைக்கு வலுச்சேர்த்தன. சொற்செட்டு இன்னும் கவனம் பெற்றிருந்தால் மேலும் மிளிர்ந்திருக்கும்.

மீராவின் உணர்ச்சிகளைத் தேடித் தேடித் தந்த பாம்பே ஜெயஸ்ரீயின் இசை, மேல் ஸ்தாயிகளில் தயக்கமின்றிப் பறக்க யோசித்தது சிறு உறுத்தல். ஆதரவு அளித்த இசைக்குழுவில் ஜெயஸ்ரீயுடைய சிஷ்யைகள் ஜொலித்தனர்;

அவரது அண்ணா சபேஷ், அம்ருதா முரளி மற்றும் புல்லாங்குழல் வாசித்த நவீன் அய்யர் ஆகியோர் தனித்துத் தெரிந்தனர்.

''மீராவின் கதை, ஒரு பெண் போராளியின் அமைதி யாத்திரை; மானுட மேன்மை, சகோதரத்துவம் போன்றவற்றை உயர்த்திப் பிடித்து, வன்முறையை நிராகரிக்கும் வரலாறு'' என்று சித்திரித்தார் கௌரி. இந்தச் சித்திரிப்பை பாம்பே ஜெயஸ்ரீயின் இசையும், மேடையும் பிரதிபலித்தன.

இந்நிகழ்ச்சி மூலம் திரட்டப்பட்ட தொகை 'சங்கல்ப்' என்ற பயிற்சி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. அதில் பயிலும் மாற்றுத்திறன் படைத்த குட்டி மீராக்களுக்கும், கண்ணன்களுக்கும் ஏற்றதொரு காணிக்கைதான் 'பைரே பான்வரி'.

– சாயா

ஞாபகம் இருக்கா ரீடர்ஸ்..?

அடுத்த இதழ் முதல் வட்ட மேஜைக்கு நீங்க எழுதற விமர்சனக் கடிதங்கள் பரிசு பெற வாய்ப்பு உண்டு.

'நச்', 'பளிச்' கடிதமா இருக்கணும். வாழ்த்தலாம்; வையலாம்; சென்டிமென்ட் சொட்டலாம்; நக்கல் நொறுக்கலாம்;

இதழில் மற்றும் இணையத்தில் (www.kalkionline.com) பிரசுரமாகும் கடிதங்களிலிருந்து முறையே இரண்டு முத்திரை கடிதங்களைத் தேர்ந்தெடுத்து **கிழக்கு பதிப்பகம்** வழங்கும் தலா ரூ.250/- மதிப்புள்ள புத்தகங்கள் பரிசாக அளிக்கப்படும்.

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்... வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

'நாஞ்சில் சினிலோக்'கின் கேமரா கவிதைகள்!



அக்கா மடி...
மெத்தையடி



சூரியனின் நமஸ்காரம்



எதிலும் நீந்தி வரப் பழகு...



ச்சும்மா
பறந்து பறந்து
அடிப்போம்ல...



ஓடிக்கொண்டேயிரு...


குதூகலத் துளிகள்...



பற்றுகளை உதிர்த்தால்தான்
பட்படன்னு வளரலாம்...


ங்களுக்கும் வேண்டும் இட ஒதுக்கீடு...

குறிப்பிட்ட கைத் தொழில்களுக்குச் சொந்தங் கொண்டாடும் கிராமங்கள் தமிழகத்தில் ஏராளம்... நெல்லைச் சீமையில், இப்படிப் பல கிராமங்கள் இருக்கின்றன. 'ஒரு சுற்று சுற்றிப் பார்த்து விடுவோமே' என்று புறப்பட்டோம்.

வாகைக்குளம். பித்தளை விளக்குகளுக்குப் பிரசித்தி பெற்றது. "ஒரு அடி உயர குத்துவிளக்கு லேர்ந்து, ஆறு ஆறரை அடி உயரம் வரைக்கும் செஞ்சு தர்றோம். ஒரு குத்து விளக்குக்குப் பதினாறு பாகம். அதெல்லாம் ஒண்ணா இணைச்சா குத்துவிளக்கு ரெடி. பழைய பித்தளைப் பாத்திரத்தை வாங்கி உருக்கி எடுத்து, எங்களோட தொழிலுக்குப் பயன்படுத்தி வர்றோம். இப்ப ஏதுங்க பித்தளைப் பாத்திரம்? அதான் முப்பது - நாப்பது வருஷமா சில்வர் பாத்திரங்கள் வந்துடுச்சே. இருந்தாலும், பித்தளைக் குத்துவிளக்குல இருக்கற தெய்வீக ஈர்ப்பு, மத்த குத்துவிளக்குல இருக்காது. அதனால எங்கப் பொழைப்பு ஏதோ இழுத்துப் பிடிச்சு ஓடிக்கிட்டு இருக்கு. இந்த ஊர்ல மட்டும் சுமார் இருநூறு குடும்பங்கள் இதுல ஈடு பட்டிருக்கு!" என்கிறார் நயினார் ஆசாரி.






ரசமத்துல்லா

முக்கூடல். பீடித் தொழிலுக்குப் பிரசித்தி பெற்றது. "தமிழ்நாட்டிலேயே பீடி உற்பத்தி நெல்லை மாவட்டத்துலதான் அதிகம். த.பி.சொக்க

சிறப்புத் தொழில்களுக்கு



லால், ராம் சேட், கணேஷ், காஜா, செய்யது, பாலகன், ஜோதிமான்... இப்படி ஏகப்பட்ட பிராண்டுகள். எத்தனை பிராண்டு இருந்தும், பிரம்மாண்ட உற்பத்தி இருந்தும், எங்க வாழ்க்கையில ஏற்றம் ஏதுமில்லை" எனக் கூறுகின்றனர் பீடி சுற்றும் பெண் தொழிலாளிகள். புகையும், வாழ்க்கையும்







✱ நயினார் ஆசாரி

அவர்களுக்கு விதிக்கப்பட்டது போலும். "இப்ப நான் ஒரு நாளைக்கு ஆயிரம் பீடி சுத்து ரேன். எனக்கு வயசு ஆக, ஆக இந்த எண்ணிக்கை கொறைஞ்

சீர்கேடு!

சிடும். இப்பவே எனக்குக் கண் எரிச்சலும், பார்வை மங்கலுமாய் இருக்கு. வேற என்ன செய் யறது? இதை விட்டா வேற வேலை கிடையாது எங் களுக்கு!" என்கிறார் காஞ்சனா. அவர் அருகில் அமர்ந்திருந்த சிறுமி, தொடர்ந்து இருமிக் கொண்டே இருந்தாள்.

அம்பாசமுத்திரம். தேங்காய் சிரட்டை கொண்டும், மரக் கடை சல் செய்தும் தயாரிக்கப்படும் கை வினைப் பொருட்களுக்குப் பிரசித்தி பெற்றது. குழந்தைகளின் நடை வண்டி, தொட்டில் கம்பு, கோலாட்டக்குச்சி, பம்பரம், விளையாட்டுச் சாமான்கள், மியூசிக் செட், பூச்சாடி, பெட்ரோமாக்ஸ் விளக்கு... போன்ற அழகு கலைப் பொருட்கள் அத்தனையும் இங்கு செய்யப்படுகின்றன. "இந்த மரவேலைப்பாடும் தமிழ்நாட்டிலேயே இங்குதான் ரொம்ப அதிகம். அம்பையில இருநூறு குடும்பங்களுக் கும் மேலா இதுல ஈடுபட்டுக்கிட்டிருக்கு. கன்னியாகுமரி யிலேர்ந்து காஷ்மீர் வரைக்கும் எங்க தயாரிப்புங்க விலை யாகுது! குறிப்பா, டூரிஸ்ட் ஸ்பாட்டுகளான ஊர்க் கடை கள்ல, இந்த மரவேலைப்பாட்டுக் கலைப் பொருட் கள் நல்லாவே சேல்ஸ் ஆகுது!" என்கிறார் பாபநாசம்.

பத்தமடை. பாய் தயாரிப்புக்குப் பிரசித்திபெற்றது. உயர் ரகப் பாய் நெய்து, அதில் திருவள்ளுவர் படத்தை யும் உள்ளடக்கி, அகர முதல எழுத்தெல்லாம்... குறள் எழுதி, அந்த முழு வடிவ உயர் ரகப் பாய்க்கென 2003-ல் ஜனாதிபதியிடம் பரிசும் வாங்கியவர் ரகமத்துல்லா. அவர் மனைவி, கதிஜா பீவி, பத்தமடைப் பேரூராட்சியின் முன்னாள் தலைவி, பத்தமடை உயர்ரகப் பாய் நெசவாளர்கள் பொதுநல சங்கத் தலைவி. "பத்தமடை பாய்ல சாதா ரகம், உயர் ரகம்னு ரெண்டு



யாருமே அப்பளக் கம்பெனி வேலைக்கு வர்ற தில்லை. எனக்கு நினைவு தெரிஞ்சு முப்பது நாப்பது வருஷத்துக்கு முன்னால, அப்பளம்னாலே அதுக்குக் கல்லிடைக் குறிச்சிதான்! இப்ப அப்படியில்ல. பெரிய பெரிய ஊர்ல எல்லாமே, அப்பளக் கம் பெனிங்க வந்துடுச்சி. கல்லிடைக்குறிச்சி யில இருக்கறது எத்தனை கம்பெனிங்கன்னு விரல் விட்டு எண்ணிடலாம். அந்தளவுக் குப் பல கம்பெனிகளை இழுத்து மூடியாச்சு. நூறு வருஷத்துக்கும் மேற்பட்ட தொழில் இது. ஐந்தா யிரம் பேர் வேலை பார்த்த ஊர்ல, இப்ப முன்னூறு பேரு தேறுவாங்க ளான்றதே சந்தேகம். மூலப் பொருட்கள் விலை உயர்வு, கூலி ஆள் தட்டுப்பாடு, ஸ்திரத்தன்மை யில்லாத சந்தை போன்ற தவிர்க்க முடியாத காரணங்களால் அப்பளத் தொழில் நொறுங்கிக் கொண்டிருக்கிறது!'' என்கிறார் சங்கரன்.



ரகம் இருக்கு. சாதா ரகப் பாய்களுக்கான கோரை கரூர், மதுரை, வந்தவாசி போன்ற பகுதிகள்லேர்ந்து வருது. ஆனா, உயர்ரகப் பாய் களுக்கான கோரை, வெளி யூர்லேர்ந்து வரலை. தாமிர பரணி ஆத்துத் தண்ணியால கெடைக்குது. குறுக்குத்துறை, கருங்காடு போன்ற ஊர்கள் லேர்ந்து வருது. உயர்ரகப் பாய் உற்பத்தியாலதான், பத்தமடை பாய்த் தொழில் இப்பவும் ஏதோ இழுத்துப் பிடிச்சு ஓடிட்டு இருக்கு. சாதாரணப் பாய்களை உற்பத்தி செய்யுற கம்பெனிகள் தமிழ்நாட்டில், அந்தந்தப் பகுதி யில், அதிகமாய் வந்துடுச்சு!'' எனக் கூறுகிறார் கதிஜா பீவி.

கல்லிடைக்குறிச்சி. ''ஒரு காலத்தில் கடல் கடந்தும் போனது இந்த ஊர் அப்பளம். இப்போது நொறுங்கிப் போய்க் கிடக்குது, அப்பளத் தொழில். அந்தளவு மார்க்கெட் டல். கூலி யாளுங்க பற்றாக்குறை. ஒரு குறிப்பிட்ட வயசுக்குக் கீழே உள்ள இளந்தலைமுறையில்

குறிப்பிட்ட சில தொழில்களுக்காகவே பிரசித்தி பெற்ற இந்த ஊர்களில், அத் தொழில்களே சுத்தமாய் நலிவுற்றுப் போயிருப்பது, நாம் நம் சுயத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறோம் என்பதன் அடை யாளம். இப் பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு மாற்றுத் தொழில் வாய்ப்புக்கும் வழியில்லை என்பதுதான் வேதனையிலும் வேதனையான நிலைமை!


வாசகர் யோசனை : **அம்மணி தீர்த்தாரப்பன்**





சோ எழுதிய

ஹிந்து மஹா சமுத்திரம்



வேதங்கள் தொடங்கி, உபநிஷத்துக்கள் வழியே வேதாந்த சிகரத்தில் ஏறி; சாத்திரம் கண்டு; புராணங்கள் வழங்கி, ஆலயங்கள் எழுப்பி; பக்தி வளர்த்து; சரித்திரம் எழுதி; நீதி பல வகுத்து; சட்டம் இயற்றி; சமூக சிந்தனையில் ஆழ்ந்து; விஞ்ஞானம்; கணிதம்; இலக்கியம்; வான சாத்திரத்தை அதன் கரையோரத்தில் நின்று பார்த்தவருக்கு ஏற்பட்ட பிரமிப்பை, மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

முதல் பாகம் ரூ.200.00

யுகங்களின் காலக்கணக்கு, பெயர்க்காரணம், யாகங்கள், தெய்வங்கள், உருவங்கள், வாஹனங்கள், வேதங்கள், உபநிஷத்துக்கள், தத்துவங்கள், எமதர்மன் உபதேசங்கள், மரணத்திற்குப் பின், வருணனின் உபதேசம், நாரதர் பெற்ற உபதேசங்கள், ப்ரம்ம ஸூத்ரம் - போன்ற பல தகவல்கள்.

இரண்டாம் பாகம் ரூ.250.00

ஷடங்கங்கள், ஸ்ம்ருதிகள், தர்மம், சட்ட தத்துவங்கள், அர்த்தசாஸ்திரத்தில் கூறப்படும் அரசு நிர்வாகம், பிரம்ம புராணம், பத்ம புராணம், விஷ்ணு புராணம், சிவ புராணம், நாரத புராணம், மார்க்கண்டேய புராணம், அக்னி புராணம், பவிஷ்ய புராணம், ப்ரும்ம வைவர்த்த புராணம், லிங்க புராணம், வராஹ புராணம், ஸ்கந்த புராணம், மத்ஸ்ய புராணம், கருட புராணம், ப்ரும்மாண்ட வாயு புராணங்கள், ஸ்ரீமத் பாகவதம் - போன்றவை அடங்கியது.

மூன்றாம் பாகம் ரூ.200.00

ராமாயணம், மஹாபாரதம், ஸ்ரீமத் பகவத் கீதை, யோக வாஸிஷ்டம், போன்றவை அடங்கியது.

நான்காம் பாகம் ரூ.150.00

மூன்று ஆச்சார்யர்கள் (ஆதி சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வாச்சாரியர்) வித்யாரண்யர், ஸ்ரீ வல்லபாச்சார்யர், ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் - ஆகியவர்களைப் பற்றியும் தெரிவிக்கிறது

ஐந்தாம் பாகம் ரூ. 250.00

அறுபத்து மூன்று நாயன்மார்கள், பன்னிரு ஆழ்வார்களைப் பற்றியது.

(அழகிய படங்களுடன், சிறந்த தாளில், நேர்த்தியான பைண்டிங் கொண்டது.)

அல்லயன்ஸ்


(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
(ப.எண்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மைலாப்பூர், சென்னை-4
தொலைபேசி: 24641314 www.alliancebook.com
email: srinivasan@alliancebook.com

ஆயிகுடி ஆறுதல்!

விபத்தால் வீழ்ந்த ராமகிருஷ்ணன் மனத்தால் எழுந்து நின்றதன் பின்னணிதான் நெல்லை ஆயிகுடி 'அமர் சேவா சங்கம்'. உடல் ஊனமுற்றோருக்கான ஆறுதல் களமாய் பொதிகை மலைச்சாரலின் அரவணைப்பில், மனத்தால் வீழ்ந்தோருக்கும் புதுத் தெம்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது இந்தச் சங்கம். "முப்பது ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்திருக்கும் அமர் சேவா சங்கம், உடல் ஊனமுற்றோர்களின் வாழ்வு உயரத் தன்னால் முடிந்த பங்களிப்பைத் தந்து கொண்டிருக்கிறது. ஆயிரம் குழந்தைகள் எங்கள் பள்ளியில் படிக்கிறார்கள். ஊனமுற்றவர்கள் கல்வியைக் கேடயமாகக் கொண்டு மட்டுமே உயர முடியும் என்பதால், சிவ சரஸ்வதி மழலையர் பள்ளி, சிவசரஸ்வதி நடுநிலைப் பள்ளி, இந்திரா காந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக் கழகம், மனவளர்ச்சிக் குறைந்த பிள்ளைகளுக்குச் சிறப்புப் பள்ளியை நடத்துகிறோம்" என்கிற ராமகிருஷ்ணன், "என்னைப் போல முதுகுத் தண்டு பாதிக்கப்பட்டோருக்கும் புதிய சிகிச்சை மையத்தைத் துவங்கியிருக்கிறோம்" என்கிறார்.

கிராமப் பொருளாதார முன்னேற்றத்திலும் இச்சங்கம் கவனம் செலுத்துவதால், சிறந்த பெண்கள் சுயஉதவிக் குழுக்களும் இவர் வசம் உண்டு. அந்தக் குழுவில் உடலால் பாதிக்கப்பட்டோருக்கு அதிமுக்கியத்துவம் தரப்படுகிறது.





ராமகிருஷ்ணன்

"வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றிக் கொள்ள அநேகமான வாய்ப்புகள் அனைவரையும் நோக்கி வருகின்றன. அதனைக் கண்டடைந்து, பயன்படுத்திக் கொள்வோருக்கு மனத்தில் நிம்மதியும் நிறைவும் கிட்டுகின்றன. எந்த ஒரு நல்ல முயற்சியையும் துணிந்து தொடங்குவது தான் நம் வேலை. தொடங்கி விட்டால், கைகொடுக்கப் பல பேர் வந்து விடுவார்கள். அப்படிப்பட்டோரின் கூட்டு முயற்சிதான், ஆயிகுடி அமர் சேவா சங்கம்" என்கிறார் அதன் நிறுவனரான ராமகிருஷ்ணன்.

வாசகர் யோசனை:
மாரியப்பன், ஆயிகுடி

கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை

கல்கி சதாசிவம் நினைவுச் சொற்பொழிவு; கல்கி சதாசிவம் நினைவு விருது வழங்கும் விழா



- 2009-ஆம் ஆண்டில் தமிழ் இதழ்களில் வெளியான கலைநயமும், சமுதாய நோக்கும் இணைந்த தலைசிறந்த விளம்பரத்துக்கான விருது வழங்குதல்,
- படிப்பில் சிறந்த, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்குதல்.

கல்சி சதாசிவம் நினைவுச் சொற்பொழிவு:

"The Pedestrian" (Citizen, Society and State)

ஆங்கிலப் பேருரை: **திரு கோபாலகிருஷ்ண காந்தி**

(மேற்கு வங்க முன்னாள் ஆளுனர்)

நாள் : **20.03.2010, சனிக்கிழமை**

நேரம் : **மாலை 6 மணி**

இடம் : **பாரதிய வித்யாபவன் அரங்கம், மயிலாப்பூர், சென்னை - 600 004**

அனைவரும் வருக!



'மார்கழி 16'

பதினாறு வயதுதான் மனசும், உடம்பும் பக்குவமடையத் தொடங்கும் பருவம். அந்த வயதில் ஒரு மனிதனை எந்தப் பக்கம் வேண்டுமானாலும் திருப்பி விடலாம். அப்படி பதினாறு வயதில் நிகழும், உணர்வுபூர்வமான விஷயங்களைத் தொகுத்துக்கொண்டு படப்பிடிப்பில் இறங்கியிருக்கிறோம்'' என்கிறார் இயக்குநர் மணி. ''ஏன் அதற்கு 'மார்கழி 16' என்று தலைப்பு?'' ''டீன் ஏஜ் என்பது குளிர்ச்சியான பருவம். அந்தக் குளிர்ச்சி அதிகமாயிட்டா மார்கழி குளிர் மாதிரி ஊசியாய்க் குத்துமில்லையா? அதனால் அந்த டைட்டில்'' என்கிறார்.

ஆர்வமுடன் குற்றாலம்!



'கௌரவர்கள்'


தந்தை பெரியாராக நடித்த சத்யராஜ், கர்ணன் போன்ற பாத்திரத்தில் விக் வைக்காமல் குறைந்த தலைமுடியோடு நடிக்கும் படம் - கௌரவர்கள். ''எனது முந்தைய படங்களைப் போல ரத்தம், வெட்டுக்குத்து இல்லாமல், கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து இப்படத்தை இயக்கியிருக்கிறேன்'' என்கிறார் சஞ்சய்ராம். ''நண்பனுக்காக உயிர் கொடுத்த கர்ணன் போன்ற கதாபாத்திரத்தில் நடிக்க சத்யராஜ் நிறைய ஹோம்-வொர்க் செய்ய வேண்டியிருக்கும்'' என்றார் ஓர் உதவி இயக்குநர்.

உலகளவில் பேசப்பட்ட பதினைந்துக்கும் மேற்பட்ட ஆவணப் படங்களையும், குறும்படங்களையும் இயக்கிய கே.ஆர்.விஷ்வா, இயக்கும் முதல் படம் 'காதலாகி'. கே.கிரியேஷன்ஸ் என்ற நிறுவனத்தைத் துவங்கி தயாரிப்பதும் இவரே... ''காதலுக்காக நண்பர்களும், நண்பர்களுக்காக காதலர்களும் கண்ணியமாகப் போராடும் கதை'' என்கிறார் விஷ்வா. வித்தியாச நாயகன் பிரகாஷ்ராஜ், இதில் 'ஆப்பிரிக்கக் குடிமகன்' வேடத்தில் நடிக்கிறாராம். ''படத்துக்கு இசையை எல்லோரும் ஆவலோடு எதிர்பார்க்கிறோம்'' என்கிறார் விஷ்வா. ஏனெனில் இசையமைப்பது, இசைப்புயலின் தங்கை ஏ.ஆர்.ரெஹானா!



'ஆர்வம்'


மூவி ட்ரீம்ஸ் நிறுவனம் தயாரிக்கும் படம் 'ஆர்வம்'. ''இந்தப் படத்தின் டெக்னீஷியன்ஸ் அத்தனை பேரும் புதியவர்கள். அதே நேரத்தில் புதுமை விரும்பிகள்'' என்கிறார் தயாரிப்பாளர் அனில்.டி. அவரது முதல் படம் இது. ''மதுரைக்கு அருகே நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தைக்கொண்டு பின்னப்பட்டிருக்கிறது கதை. இது ஐந்து வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம் என்பதால் சூடும் சுவையும் குன்றாமல் தர முடியும்'' என்கிறார் இயக்குநர் ஆதித்யன். படத்தில் முக்கியமான ஒரு கதாபாத்திரமாக குற்றாலமும் வந்து போவது குளிர்ச்சியான ஹைலைட்!



'காதலாகி...'



கல்கி



2010 மார்ச் 21
விரோதி பங்குனி 7
மலர் : 68
இதழ் : 34

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்


மறுக்கப்படும் வாய்ப்பு; திணிக்கப்படும் உரிமை!


நூற்றியெட்டு என்பது இந்தியப் பாரம்பரியத்தில் உன்னத எண்ணாகக் கருதப்படுகிறது. பெண்களுக்கு 33 சதவிகிதம் தொகுதி ஒதுக்கீடு வழங்குவதற்கென நமது அரசியல் சாசனத்தில் கொண்டு வரப்படும் 108வது திருத்த மசோதா, இந்நாட்டு மகளிரின் உன்னத எதிர்காலத்துக்கு வழிவகுக்கட்டும் என்று வாழ்த்துவதே முறையாகும். எனினும், இந்த வாழ்த்து, இந்த நாட்டின் மேன்மைக்கு அடித்தளமாக, அமைதியாக இயங்கிவரும் பெண்களை உத்தேசித்துத்தானேயொழிய, அவர்களைப் பகடைக்காய்களாக்கி, இந்த மசோதா மூலம் அரசியல் ஆதாயம் தேட முயற்சி செய்யும் அரசியல்வாதிகளுக்கு அல்ல!

ராஜ்ய சபையில் அநாகரிகமான, பலத்த எதிர்ப்புகளுக்கிடையே எப்படியோ மசோதா நிறைவேறிவிட்டது. மக்களவையிலும், தொடர்ந்து பல்வேறு மாநில சட்டமன்றங்களிலும் மசோதா நிறைவேறி சட்டமாகும் என்று எதிர்பார்க்கலாம்.

நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இன்று வரை இந்நாட்டுப் பெண்கள் பல துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளதை யாராலும் மறுக்கமுடியாது. அவர்களுள் பெரும்பாலோர் இன்னும் செல்லவேண்டிய தூரம் அதிகம் உள்ளது எனினும், ஏற்பட்டுள்ள கணிசமான முன்னேற்றம் பெருமிதத்துக்கு உரியது. பெண்களுக்கு என்று எவ்வித இடஒதுக்கீடும் இன்றியே அது சாத்தியமாகியிருக்கிறது.

அரசியல் என்பது முழுவதும் பொதுவாழ்க்கை சார்ந்த பணி.





அந்தப் பணியை மேற்கொள்வதற்கான உணர்வுபூர்வமான ஆயத்தமும் தன்னம்பிக்கையும் இயல்பில் உருவாகி உறுதிப்படும்போதுதான் பணி சிறக்கும். ஆயத்தமும் ஈடுபாடும் இல்லாவிட்டால், 'பெண்களுக்குத் தொகுதிகள் ஒதுக்கினோம். ஆனால் என்ன பயன்? அவர்களால் ஒன்றையும் சாதிக்க இயலவில்லை' என்கிற அவப்பெயர் வெகு எளிதில் வந்து சேரும். தொகுதி ஒதுக்கீடு முறையில் அரசியல் களத்துக்கு வரக்கூடிய பெண்கள், இந்த உண்மையை உணர்ந்து எச்சரிக்கை கொள்ளவேண்டும்.

மேலும், சுழற்சி முறையில் தொகுதி ஒதுக்கீட்டினைச் செயல்படுத்தும் விதத்திலேயே முரண்பாடு அமைந்துள்ளது. ஒரே தொகுதியில், ஒரு பெண் வேட்பாளர் அடுத்தடுத்து இரண்டு தேர்தல்களுக்குப் போட்டியிட முடியாது; ஆனால் ஆண் வேட்பாளர்கள் ஒரு தொகுதியில் இரு தேர்தல்களுக்குப் போட்டியிடலாம். இங்கேயே சமத்துவம் அடிபட்டுப் போகிறது!

சமூக ஆயத்தம் இல்லாத நிலையில், சட்டத்தை உத்தேசித்து நிறுத்தப்படும் பெண் வேட்பாளர்கள், ஆண் அரசியல்வாதிகளின் பினாமிகளாகவும், நிழல் வேட்பாளர்களாகவும்தான் பெரும்பாலும் இருப்பர். இந்த வற்புறுத்தலுக்குப் பதிலாக, அரசியல் கட்சிகள் தங்கள் வேட்பாளர் பட்டியலில் பெண்களை ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்துக்கு இடம்பெறச் செய்ய வேண்டும் என்று தேர்தல் சீர்திருத்தம் கொண்டுவருவதே ஆரோக்கியமாக இருக்கும். இந்தச் சதவிகிதத்தை மெள்ள மெள்ள அதிகரிக்கலாம். இந்தச் சீர்திருத்தம் மூலமாக, அரசியல் வாழ்வைத் தேர்ந்தெடுத்து உழைத்துவரும் பெண்களுக்குத் தற்போது மறுக்கப்படும் நியாயமான வாய்ப்புகள் கைவரும்; அதிகரிக்கும். ○



அவள் பெயர் தமிழரசி

வயது 18 மாநிறம்

✿ பட்டிக்காட்டுக்காதலையும், பாழ்பட்டுப்போனகூத்துகளையும் யதார்த்தமாய் திரையில் படம்பிடித்திருக்கும் ரெட்டைப் பதிவு.

✿ படம் பார்ப்பவர் மனத்திலெல்லாம் பச்சக்கென்று முக்காலி போட்டு அமர்கிறார் தமிழரசியாய் நந்தகி. பால்யத்தில் காதலிக்கு மின்மினிப்பூச்சிப் பிடிப்பது முதல், அவளைத் தேடி மகாராஷ்ட்ரா போவது வரை ஜெய் சூப்பர்ங்கண்ணா!

✿ தமிழரசியின் தாத்தா வீரசந்தானம், தம்பியாய் கால் ஊனமான சிறுவன், தியோடர்பாஸ்கரன் ஆகியோர் அழுத்தமானபதிவுகள்...

✿ திருநெல்வேலி அருவாவையும் தாண்டி அண்ணாச்சிகன்னா ஒரு யதார்த்தம் இருக்குன்னு காண்பிச்ச மீராகதிரவனுக்கு உள்ளங்கை நிறைய சர்க்கரை கொடுத்துப் பாராட்டலாம்.

✿ கள்ளிச் செடியையும், முள்ளுக்காட்டையும் கண்களோடு கைகுலுக்க விடுகிறார் பி.ஜி.முத்தையா.

✿ இசையில் வழக்கமா கும்மாங்குத்து குத்தும் விஜய் ஆண்டனி அடக்கி வாசித்திருப்பது ஆறுதல் + அருமை.

✱ அடிக்கடி கிராமத்தில் பீர் குடிப்பது, நிறைய இடங்களில் ஜெய்யை டீ ஷர்ட்டோடு காண்பிப்பது, மஹாராஷ்ட்ரா ரெக்கார்ட் டான்ஸில் தமிழ்ப் பாட்டுக்கு ஆடுவது போன்றவற்றைத் தவிர்த்திருக்கலாம்.

✿ எண்ணெய் அப்பிய தலைமுடி, சாயம்போன தாவணி, வசீகரிக்கும் கொள்ளை அழகோடு வரும் தமிழரசி, பழைய பள்ளிக்கூட காதலிகளை ரசிகர்களுக்கு நினைவூட்டுகிறாள்.

– பொள்ளாச்சி ராஜ்குமார்



அமானுஷ ஜோதிஷம்



அமானுஷத்தில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா?
அப்படியானால் இதனை மேற்கொண்டு படியுங்கள்!!

நமக்குத் தெரியாமல், நம்மை சுற்றி சில 'துர்சக்திகள்' இருக்கின்றன. விஞ்ஞானம் என்னதான் வளர்ந்தாலும், நன்மையும், தீமையும் கலந்துதான் நாம் வாழ்கின்றோம்.

இயற்கையுடன் ஒன்றி அமைந்துவிட்ட அமானுஷ்யங்களினால், அமாவாசை - பௌர்ணமி சமயத்தில் மனோரீதியான பாதிப்பு, என்னவென்றே இனம் புரியாத பயம், தூக்கமின்மை, மனதில் நிம்மதியின்மை, குழப்பம் எதனைக் கண்டாலும் எரிச்சல், யாரை கண்டாலும் வெறுப்பு, துக்கம், பசியின்மை, சரியாக சாப்பிடாமை, வீட்டிற்குள் இருக்கும்போது பிரச்சனை, வெளியில் வந்தால் சற்று தேவலாம் போல் இருத்தல், சிலர்க்கு வெளியில் வந்தாலும் பிரச்சனை தொடர்ந்து வருதல், கோவிலிற்குள் இருந்தால் நிம்மதி, கோவிலை விட்டு வெளியில் வந்தால் குழப்பம் டாக்டரிடம் சென்றால், சோதித்துவிட்டு ஒன்றுமில்லை என்பர். ஆனால் நமது பிரச்சனை நம்மிடமே தங்கி விட்டது போல் நமக்கு கவலை.

இதுபோல் இன்னும் சொல்ல முடியாத எவ்வளவோ பிரச்சனைகளினால் அவதியுறும் அன்பர்களே நாடுங்கள் நம்பூதிரியை...

பிரும்ம ஸ்ரீ பாலக்காடு ஸ்ரீ சூரியன் நம்பூதி, M.A., D.I.A., B.A. (ASTRO)

"**ஸ்ரீ சாஸ்தா ஜோதிஷாலயா**" 140/45, சுப்பிரமணிய முதலி தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 15.

போன்: **091 044 6517 1890, (0) 98401 02001, (0) 95001 52427, (0) 93815 0744**

Visit: www.namboodrijyothisham.com e-mail: suryaguru1964@gmail.com

குறிப்பு: வெளியூர் அன்பர்கள் (இந்தியாவிற்குள்) தங்கள் பிரச்சனைகளைத் தெளிவாக கடிதம் எழுதி ஜாதக நகலை இணைத்து ரூ. 500/-க்கான D.D. / M.O. அனுப்பி, வெளிநாட்டு அன்பர்கள் ரூ. 1000/-க்கான Western Union Money Transfer-ஐ அனுப்பி கடிதத் தொடர்பு கொள்ளவும்.

ஆல்ஃபா மைண்ட் பவர்

ஆழ்மனதின் சக்தி!

ALPHA™ MIND POWER

"Unwind Your Mind & Empower Yourself"

மனோ சக்தி நிபுணர் டாக்டர் **விஜயலக்ஷ்மி பந்தையன்**
அளிக்கும் இந்தியாவின் பழம்பெரும் சித்தர்களின் சக்தியுடன் கூடிய
ஒரு நாள் ஆல்ஃபா தியான பயிற்சி



- மன அழுத்தம் குறைக்க
- பண வரவை அதிகரிக்க
- உறவுகளைச் சீர்படுத்த
- குடும்பத்தில் அன்பு நிலவச் செய்ய
- நோய் தீர்க்க, நிம்மதியாக தூங்க,
- பரீட்சையில் அதிக மார்க் வாங்க,
- மகிழ்ச்சியுடன், தன்னம்பிக்கையுடன், வெற்றியுடன் வாழ

தபால் மூலம் கற்கலாம் ஆல்ஃபா மைண்ட் பவர் ஆடியோ சிடி மற்றும் பயிற்சி புத்தகம் ஆங்கிலம் மற்றும் தமிழில் தபால் மூலம் பெறலாம்.

ஒரு நாள் பயிற்சி மட்டுமே!

ஆர்.எஸ்.ஆர்.பிளாசா, 3வது தளம், 50, 51 ஆற்காடு ரோடு,
சாலிகிராமம், சென்னை - 600 093. இந்தியா
ஃபோன் : +91- 44 - 2376 0007, 2376 6555
மொபைல் : 98414 02000, 98412 72146, 98416 96664
e-mail : amp@alphamindpower.net www.alphamindpower.net

ஆல்ஃபா தியான அனுபவம் இதோ ஒரு கடிதம்

என் மகளின் திருமணத்துக்காக நான் எதிர்பார்த்த LIC மெச்சூரிடி தொகை குறித்த காலத்தில் கிடைக்காததால் சிரமப்பட்டேன். ஆல்பா தியானத்தில் பிரபஞ்சத்திடம் எனக்கு பணம் வேண்டும் என்று தினமும் கேட்டு வந்தேன். மேலும் பணத்துக்கான நல்வாக்கியங்கள் அடங்கிய CDயை தினமும் கேட்டு வந்தேன். எனது உறவினர் ஒருவர் என் அப்பாவுக்கு தரவேண்டிய பணம் என் கைக்கு கிடைத்து என் மகளின் திருமணம் மிகசிறப்பாகநடைபெற்றது. ஆல்ஃபாவை கற்றுத் தந்த குருஜீக்கு நன்றி!


\- பானுமதி, சென்னை

காணத்தவறாதீர்கள்!
ஏப்ரல் 6, மதியம் 12.05 மணிக்கு பொதிகை டி.வி.யில்
எமது நேரடி ஒளிபரப்பைக் கண்டு பயன்பெறுங்கள்.

அடுத்து வரும் பயிற்சி வகுப்புகள்

பெங்களூர் : 11.04.10 கோவா : 18.04.10
சென்னை : 25.04.10 கோவை : 09.05.10

'மூழ்கும் நதி'. அறுபது நிமிடப் படம். பொதுமக்கள் கூடும் திறந்தவெளிகளில் திரையிட முடியாது. அத்தனை நெருக்கடி. காவல் துறை அச்சுறுத்தல். அரங்குகளில், இல்லங்களில் வேண்டுமானால், 'மூழ்கும் நதி'யைத் திரையிட்டுப் பார்த்து, தாமிரபரணி அவலங்களை உணர்ந்து திகைத்துப் போகலாம். அதன் படைப்பாளியான பா.கதிர் பேசுகிறார்:



தப்பிக்குமா

"பொதிகை மலையில் உற்பத்தியாகும் தாமிரபரணி; பாபநாசம், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, சேரன்மாதேவி, திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, கொக்கை வழியாகப் புன்னைக்காயல் என்னுமிடத்தில் கடலில் கலக்கிறது. நூற்று இருபத்தைந்து கி.மீ. நீளத்துக்கும், வற்றாத ஜீவநதியாகவே அது ஓடி வந்தது... ஓடி வருகிறது... 'இனி மேலும் ஓடி வருமா?' என்பதுதான் பொதிகை மலையை விட உயரமாய் எழுந்து நிற்கும் கேள்வி.



* பா.கதிர்

தாமிரபரணி நதியைப் பொறுத்தே, நெல்லை மாவட்டத்தின் வளமும், பசுமையும் அமைகிறது. அதன் கரையோரங்களில் நிறையக் கோயில்கள், விளைநிலங்கள். நெல்லைச் சீமையில் மக்களோடு மக்களாக் கலந்துவிட்ட நதி. அந்த நதிக்கே பெரும் களங்கம் என்றால், எதனைக் கொண்டு அதனை சீர்ப்படுத்துவது?

கடந்த முப்பது ஆண்டுகளாக கழிவுநீர் நதியில் நேரடியாகவே கலந்து வருகிறது! தொழிற்சாலைக் கழிவுகளுக்கும், குடியிருப்புக் கழிவுகளுக்கும் என்ன போக்கிடம் என்று அரசு தானே முடிவு செய்து செயல்படுத்த வேண்டும்! ஆனால்?

போக்குவரத்துக் கழகப் பணிமனையின்

திருநெல்வேலி
மாவட்ட ஸ்பெஷல்



தாமிரபரணி?

தாமிரபரணி நதிநீரை அப்படியே கைகளில் அள்ளிக் குடிக்கலாம். அத்தனைத் தூய்மை. அம்புட்டு ருசி. அதெல்லாம் ஒரு காலம். இப்போது அதன் தூய்மையும், ருசியும் வெகுவாகக் குறைந்து போச்சு.

விவசாய உரக் கழிவுகள் வாய்க்கால்களில் பாய்ந்தோடி வந்து தாமிரபரணி நதிக்குள் கலக்கின்றன. இதனால் மீன் வளம் அறவே அற்றுப் போய் விட்டது'' என்கிறார் கதிர்.

''அடுத்து, மணல் கொள்ளை. ஆற்று மணலின் நிரந்தரப் படுகை குடிநீரைச் சுத்திகரிக்கும் வலைப்பின்னல் வலிமையுடையது. மணல் அள்ள, அள்ள அந்த வலைப் பின்னலும் அவுட்! குறிப்பாக, கங்கைகொண்டான் பகுதியில் பன்னாட்டு நிறுவனம் ஒன்றுக்கு, தாமிரபரணித் தண்ணீரைச் சுரண்டும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அந்த மினரல் வாட்டர் கம்பெனி, ஒருநாளைக்கு சுமார் பத்து லட்சம் லிட்டர் தண்ணீரை உறிஞ்சிக் கொள்ள அரசின் அனுமதியைப் பெற்றுள்ளது. ஐந்தாண்டுகளாக இயங்கி வரும் தண்ணீர்ச் சுரண்டலால், தாமிரபரணி நதியில் பெரும் வறட்சி ஏற்பட்டு வருகிறது.

ஒட்டுமொத்தக் கழிவுநீரும், அப்படியே தாமிரபரணியில் திருப்பி விடப்படுகிறது. சேரன்மகாதேவியின் பெரும்பான்மைத் தொழிற்சாலைக் கழிவுகள் சுத்திகரிக்கப்படாமல் வந்து நதியின் உள்ளே கலக்கின்றன. கடந்த முப்பது ஆண்டுகளாக குடியிருப்புப் பகுதிகள் வெகு அதிகமாகி விட்டன. அவற்றின் கழிவுநீர், கிளை வாய்க்கால்கள் மூலமாக வந்து, தாமிரபரணி நதியுடன் கலக்கின்றன. தெரிந்தே, சிலரால் கழிவுகள் ஆற்றில் கலந்து விடப்படுகின்றன. 'இதனால் என்ன கெட்டுப் போச்சு?' என்கிற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

மக்களுக்கும் நதிக்குமான ஆத்மார்த்தமான பிணைப்பு, தற்போதைய காலச் சூழலில் கடுமையாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் நதி நீர் ஆதாரத்தையொட்டிய விவசாயம் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டுச் செயல்கள் மிகவும் அன்னியப்பட்டுப் போய்விடும். இவ்வளவு ஏன்? இனிவரும் காலங்களில், தாமிரபரணியில் குளிக்க, நபர் ஒன்றுக்கு, பத்து ரூபாய் கட்டணம் என்கிற நிலை வந்தாலும் வரலாம். அதற்குள் இதற்கொரு விடிவைத் தேட வேண்டியது அரசின் தலையாய கடமை!'' என்கிறார் பா.கதிர்.

வாசகர் யோசனை: **வைகை ஆறுமுகம், வழுதூர்**



ஆங்கிலேயர்களின் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக வங்கக் கடலில் கப்பலோட்டிய தமிழன் என்பது மட்டுமல்ல வ.உ.சி.யின் மீது படிந்திருக்கும் பெருமைச் சித்திரம். அவர் நல்ல இலக்கியவாதி. தொல்காப்பியம் போன்ற பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து உலவ விட்டவர். தாம் ஆரம்பித்த சுதேசிக் கப்பல் கம்பெனியை இந்திய தேசத்தின் விடுதலைக் குறியீடாக உயர்த்திப் பிடித்தவர். திருநெல்வேலியில் உள்ள அவரது மணி மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள கடிதங்கள் அதற்குச் சாட்சியாக இருக்கின்றன. அந்தக் கடிதங்கள் அனைத்தும் 'சுதேசமித்திரன்' இதழில் வெளியானவை.

திருநெல்வேலி மாநகராட்சிக் கட்டடத்துக்கு எதிரே உள்ள மைதானத்தில் அமைந்திருக்கிறது வ.உ.சி மணிமண்டபம். பாரதியைக் கைதுசெய்தபோது, வ.உ.சி. வைக்கோல் போருக்குத் தீ வைத்து, தன் எதிர்ப்பைப் பதிவு செய்தது இந்த இடத்தில்தான். சுதந்திரப் போராட்டம் வீறுகொண்டெழக் காரணமான 'நெல்லைக் கலகம்'

திருநெல்வேலி மாவட்ட ஸ்பெஷல்



வாழ்கிறார்

ஆரமபமானதும் இங்கேதான்! தற்போது இந்த மணி மண்டபத்தின் ஒரு பக்கம் அரசாங்க நூலகமும், மறுபுறத்தில் வ.உ.சி.யின் நிழற்படத் தொகுப்புகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. கோவை சிறையில் வ.உ.சி. இழுத்த செக்கின் நிழற்படமும், அதன் மாதிரி வடிவமும் இங்கே இருக்கின்றன. சுதந்திரத்துக்காகத் தம் சொத்துகளை இழந்து, கடைசிக் காலத்தில் சென்னை பெரம்பூர் பகுதியில் மண்ணெண்ணெய் கடை வைத்துப் பிழைக்கும் நிலைமைக்கு, வ.உ.சியைக் காலம் வஞ்சித்தது என்பதுதான் பெரும் வேதனைக்குரிய விஷயம்! இன்றும் அவர் வசித்த அந்த வீதி வ.உ.சி தெரு என்ற பெயரில்தான் அழைக்கப்படுகிறது.

வாசகர் யோசனை:
இசக்கியப்பன், நெல்லை










திருநெல்வேலி மாவட்ட ஸ்பெஷல்



ஆற்றில்

திருநெல்வேலி, பாளையங்கோட்டையை இணைக்கும் சுலோச்சனா முதலியார் பாலம் கட்டப்பட்டதன் சுவாரஸ்யப் பின்னணி இது...

பெரும் செல்வந்தரான சுலோசனா முதலியாருக்குப் புத்திர பாக்கியம் இல்லை. அதனால் தம் தம்பியின் பிள்ளையைத் தத்தெடுத்து வாரிசாக்க விரும்பினார். இது சம்பந்தமாகச் சகோதரரின் குடும்பத்தில் பேசியிருக்கிறார். தம்பி மனைவிக்கு இதில் சம்மதமில்லை. எவ்வளவோ வற்புறுத்தியும் இணங்கவில்லை. முதலியாருக்குக் கோபம் வந்துவிட்டது. 'என்கிட்ட எவ்வளவு சொத்து இருக்குத் தெரியுமா?'ன்னு பெருமையில் பீலா விட்டிருக்கிறார். ''அநியாயம் பண்ணிச் சேர்த்த உங்களோட பாவச் சொத்து யாருக்கு வேணும்...? ஆத்துல கொண்டு போடுங்க'' என்று தம்பியின் மனைவி சொல்லவும் முதலியாருக்கு ரோஷம் மறுநாளே தாமிரபரணிக்குக் குறுக்கே பாலம் கட்டும் நல்ல காரியத்தில் இறங்கிவிட்டார்.

வாசகர் யோசனை: இ.எம்.எஸ். பாலகுமாரன், அம்டை

இராமானுஜத்துக்கு அடுத்தபடியாக உலகப் புகழ் பெற்ற இந்திய கணித மேதை டாக்டர் எஸ்.எஸ்.பிள்ளை, நெல்லை மாவட்டம் செங்கோட்டையில் பிறந்தவர். அவரது மைத்துனர், செங்கோட்டை சொக்கலிங்கம் பிள்ளை சொல்கிறார்: ''சென்னையில் மேற்படிப்பை முடித்து, அண்ணாமலை யுனிவர்சிட்டியில் லெக்சரரானபோதுதான் முன்னூறு ஆண்டு காலமாக ஹார்டி, லிட்டில்புட் போன்ற தலைசிறந்த வல்லுநர்களால்கூட தீர்க்கமுடியாத கணக்குகளுக்கு விடை கண்டுபிடித்துக் கணிதத் துறையில் உலகளவில் அதிர்வுகளை உண்டாக்கினார் எஸ்.எஸ்.பிள்ளை. கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த சமயம் அமெரிக்காவிலுள்ள பிரபல பிரின்சிட்டன் யுனிவர்சிட்டியிலிருந்து ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் மூலம் அழைப்பு வந்தது. அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளப் போய்க்கொண்டிருந்தபோதுதான், விமான விபத்தில் உயிரிழந்தார். நாடாளுமன்றத்தில் அப்போதைய பிரதமர், 'பிள்ளையின் மறைவு உலகத்துக்கே பேரிழப்பு' என்று சொல்லி அஞ்சலி செலுத்தினார்.''



● எஸ்.எஸ்.பிள்ளை

வாசகர் யோசனை: இ.கஸ்தூரி, அகஸ்தியர்பட்டி

போட்ட காசு!


* ஜான் பீட்டர்



பாளையங்கோட்டை சாராள்டக்கர் மகளிர் கல்லூரியின் எதிரே கம்பீரமாய்க் காட்சி தருகிறது பேராசிரியர் ஜான்சன் நினைவு நூலகம்.

மறைந்த தம் கணவரின் நினைவாக சொந்த இல்லத்தையே நூலகமாக்கியிருக்கிறார் பேராசிரியர் ரகோமி. ஓய்வூதியத்தின் பெரும்பகுதியை நூலக வளர்ச்சிக்குச் சளைக்காமல், தொடர்ந்து செலவிட்டு வரும் அவர், அமெரிக்காவில் பணிபுரியும் பிள்ளைகளோடு இருக்கிறார். ஆண்டுக்கு ஒரு தடவை இங்கே வருகை தந்து விழா நடத்துகிறார். நூலகத்தின் ஆக்கப்பூர்வ வளர்ச்சிக்கு வலுவான முதலீடும் ஊக்கமும் அளித்துவிட்டுச் செல்கிறார்.

இங்கே நூலகராய்ப் பணியாற்றுபவர் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் ஜான் பீட்டர். வாசகர்கள் உள்ளே நுழைந்ததும் சாக்லெட் கொடுத்து இன்முகத்தோடு வரவேற்பது இவரின் சிறப்பு. ஆங்கிலக் கலப்பில்லாமல் தூய தமிழில் தெளிவாய்ப் பேசுகிறார் இவர். இங்கே, மாதந்தோறும் தவறாமல் இலக்கிய நிகழ்ச்சிகள் நடக்கின்றன. தமிழறிஞர் வளன் அரசு வாசகர் வட்டத் தலைவராக இருந்து வழி நடத்துகிறார்.

வாசகர் யோசனை: **பி.ஜி.பி.இசக்கி**

மணி பாகவதர்!

''சென்னை, நியூடோன் ஸ்டுடியோவில் எம்.கே.தியாகராஜ பாகவதரைச் சந்திச்சேன். அந்த நட்பு கடைசிவரை தொடர்ந்தது. 'சிவகவி' படத்துல அவரோட நடிச்சுருக்கேன். இந்த வருஷம் அவரோட நூற்றாண்டு விழா. பாகவதரோட நடிச்சதை என்னால மறக்க முடியாது. இப்ப நெல்லை சங்கீத சபாவுல வாரத்துல மூணு நாட்கள் சங்கீதம் சொல்லித் தர்றேன்!'' என்கிறார் நெல்லை குறுக்குத்துறை பகுதியில் வசித்து வரும் மணி பாகவதர்.

வாசகர் யோசனை: **ஸ்ரீநி, நெல்லை**


* மணி பாகவதர்


புத்தகத்தில் குட்டி போடும்
மயிலிறகு போல...
மனசுக்குள் ஒளிந்திருப்பதுதான்
இளமையின் மகத்துவமோ!
யூத் சீக்ரெட்!

● **மீனா ரெங்கநாதன், மேற்கு மாம்பலம்**

இளமையின் ரகசியம்...?

முதுமையின் அவசியம்!

● **அ.ராஜா ரஹ்மான், கம்பம்**

யாருக்கு அடிமையாக இருப்பது பெருமை?

அடி'My' என்னும் ஈகோவை கோடு போட்டு, அப்புறம் பெருமையோடு எஜமானனாக இருக்கலாம்.

● **என்.கோமதி, நெல்லை**

தந்தை சொல் கேட்டு மணிமுடி துறந்த பீஷ்மர், ராமர், இந்த இருவரில் யார் சிறந்தவர்?

இவர்கள் இருவரையும் விட 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதை எடுத்துக் காட்டி சிறந்தவர், ரகு வம்சத்தில் வந்த மன்னன் யயாதியின் மகன் 'புரு'. தந்தை யயாதியின் வேண்டுகோளுக்கு இணங்கி, தனது இளமையை அவருக்குத் தாரை வார்த்து, பதிலாக அவரது வழுக்கையான வயோதிகத்தைப் பெற்று, தன் 'முடி'யைத் துறந்தவன், மகன் 'புரு'... ஆச்சரியம்! இது போலப் பார்த்தால் இன்றும் நாம் 'புரு'வத்தை உயர்த்துவது 'புரு'வால்தான்!

● **ஆர்.ராஜலட்சுமி, ஹரூப்ளி**

கஞ்சத்தனத்துக்கும், சிக்கனத்துக்கும் என்ன வித்தியாசம்?

கஞ்சமாய் செலவழிக்காதவன் Miser. கொஞ்சமாய்ச் செலவழித்துச் சேமிப்பவன் Wiser!

● **கே.ஆர்.ரவீந்திரன், சென்னை**

காதலியாக இருக்கும்போது இனிப்பவள், மனைவியாக மாறியதும் கசப்பது ஏன்?

காதல் 'வாழ பழமாக' இருந்தவள், கல்யாணத்துக்குப் பின் உங்கள் வாழ்க்கையின் ஒரு 'பாகக் காய்' (Better-half) ஆவதால், விருந்தாய் இனித்த காதலி மனைவி என்ற மருந்தாய்க் கசக்கிறாள்!

● **எம்.அசோக்ராஜா, திருச்சி**

ஆழம் தெரியாத சுரங்கம் காதலா? காமமா?

அன்புச் சுரங்கம் காதல்... அதள பாதாளம் காமம்!

● **பா.அசோக், விருதுநகர்**

பெண் புத்தி பின்புத்தி என்றால். ஆண் புத்தி?

முன் புத்தி... திருமணத்துக்கு முன் புத்தி!

● **எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்**

பழைய கேள்விதான். புதிய பதில் தேவை. எல்லாவற்றையும் இரண்டாகப் படைத்த இறைவன் இதயத்தை மட்டும் ஏன் ஒன்றாகப் படைத்தான்?

'மவனே ரெண்டுல ஒண்ணு பார்த்துடறேன் பாரு' என்று சொல்வது இதயம்தானே!

● **எம்.ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி**


செல்ஃபோன், மனைவி ஒப்பிடலாமா?

பேச செல்ஃபோன். பேச்சு கேட்க மனைவி. செல்கள் பல வைத்துக் கொள்ளலாம். ஆனால் மனைவி ஒன்றுதான். செல்லில் ரோமிங் உண்டு. மனைவி வந்த பிறகு ரோமிங் தவிர்த்து ஏக பத்தினி 'ராம்கிங்' காக இருக்க வேண்டும்!


● **ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி**

பரமன் பத்து அவதாரங்களோடு நிறுத்திக்கொண்டதேன்?

அடிக்கடி அவதாரம் எடுத்தால் பரமனையும் நாம் பாமரனாக்கி விடுவோம். பழகப் பழகப் 'பரம்'பாலும் புளிக்கும்! ○



ஒவ்வொரு வரிசையாகக் காகிதத் தட்டுகளில் பிஸ்கட் கொடுத்தவாக்கில் அந்தக் கிளிப் பச்சைச் சேலை நகர்ந்துகொண்டிருந்தது. கிளிப்பச்சை கூட இல்லை. அதைவிட இள நிறம். நாற்றுப் பச்சை. வைக்கோல் படப்புப் பக்கம் இரண்டு தூறல் விழுந்தவுடன், சாவி நெல் முளைத்து நிற்குமே அந்த நிறம். அதோடு அதன் மேல் சாய்ந்தாற்போல வெயில் விழுவதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். யார் என்று தெரியவில்லை. ரொம்பத் தெரிந்தவர் மாதிரியும் படுகிறது. இந்த நடையை, தோளின் திரும்பலை ஏற்கெனவே பார்த்திருக்கிறது போல. எட்டி எட்டி ஒவ்வொரு நாற்காலியாகக் கொடுக்கிறது போதாது என்று, அவ்வப்போது ஒரு கை தோளைப் பிடிக்கிறது. ஒரு பெண்ணின் உச்சந்தலையைத் தடவுகிறது. மடியில் இருக்கிற பிள்ளையின் கன்னத்தை நிமிண்டுகிறது. இவ்வளவு செய்யும் போதும் இழுத்துச் செருகின சேலை விலகவில்லை. இன்னார் என்று முகம் தெரியக் காணோம்.. இந்தப் பக்கம் வரும்போது தெரியும் போல.




வண்ணதாசன்



சிதம்பரத்துக்குப் பார்க்கப் பார்க்கக் கொள்ளவில்லை. அவன் கடைசியில் உட்கார்ந்திருக்கிறான். இது வேறு வரிசை. அது இடதுபக்கம். இது வலது பக்கம். வலப்பக்கம் பூராவும் ஆண்கள் இருப்பது கூடப் பரவாயில்லை. பிஸ்கட் கொடுப்பதுவும் ஒரு தாடிவைத்த பையன் மூலம்தான் நடந்தது. ஆண்களுக்கு ஆண்தான் பிஸ்கட் தேநீர் கொடுக்கவேண்டும் என்று சட்டம் இருக்கிறதா?

இயற்கை வேளாண்மை, பி.டி. கத்திரிக்காய் அது - இது என்று நடக்கிற கூட்டத்தில், இப்படித் தனித்தனியாக உட்கார்த்தி வைப்பது இயற்கையா, செயற்கையா? சிதம்பரத்துக்குக் கோபமும் எரிச்சலுமாக வந்தது. எல்லாம் வரும்தான். அதற்காக அந்தப் பக்கம் பார்க்காமல் இருக்க முடியுமா?

இந்த சூரி எங்கே போனான் என்று தெரியவில்லை. சூரிதான் இந்த ஆவணப் படத்தை எடுத்திருக்கிறான். மேடைக்குப் பின்னால் தொங்குகிற ஃப்ளெக்ஸி பேனரில் இருக்கிற கத்திரிக்காய்களையும், வெண்டைக்காய்களை



வாய்க்கால்கள்!

யும் வரைந்திருக்கிறவன் சிதம்பரம். வருகிற வழிநெடுக வைத்திருக்கிற கேலிச் சித்திரங்களை வரைந்தவனும் அவன்தான்.

முதல் கத்திரிக்காய் சிரிப்பதும், நான்காவது கத்திரிக்காய் அழுவதும் நன்றாக வந்திருப்பதாக எல்லோரும் சொல்கிறார்கள் என்று, கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சூரி வந்து சொல்லிவிட்டுப் போனான்.


சூரி மாதிரித்தான் இருக்க வேண்டும். என்று சிதம்பரத்திற்குத் தோன்றிற்று. சூரியால் யாருடன் வேண்டுமானாலும் பேசிவிட முடிகிறது. எந்த அலுவலகத்திற்குள்ளும் தயக்கமின்றி நுழைந்து திரும்புவது அவனுக்குச் சுலபம்.

போன தேர்தலில் தோற்றவர்கள், இந்த தேர்தலில் ஜெயித்தவர்கள் என்று யாராக இருந்தாலும், ரயில்வே ஸ்டேஷனில் நின்று இரண்டு நிமிடம் பேசுகிறார்கள். "என்ன அண்ணாச்சி, அப்படியா அண்ணாச்சி, வரட்டுமா அண்ணாச்சி" என்று ஒரு சிரிப்பு, அல்லது பிடித்த கையை விடாமல் ஒரு குலுக்கல்.

இந்த ஆவணப்படத்தில்கூட, மூன்று அரசியல்வாதிகள், இரண்டு இயக்குநர்கள், ஒரு மாதர் சங்கப் பிரதிநிதி, ஒரு நவீன நாடக ஆசிரியர், பத்திரிக்கையாளர்கள் இருவர் என்று நிறையப்பேர் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

சூரியை நினைத்துப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. அவனிடம் இந்தக் கருப்பு டீ ஷர்ட்டைத் தவிர வேறு உடையே கிடையாதோ என்னவோ? குளிப்பானோ - மாட்டானோ என்கிற மாதிரித்தான் இருக்கும் அவனைப் பார்க்க. ஆனால் குளிப்பான். ரசித்துக் குளிப்பான். சூரியை முதலில் பார்த்ததே அப்படி அவன் குளித்துவிட்டு வருகிற சமயம்தான். சுத்தமல்லிக் குளம் பெருகி, மறுகால் விழுந்துகொண்டிருந்தது. சுள்ளென்று வெயில். ஆள் நடமாட்டமே இல்லை. வளைந்த கண்ணாடிப் பாளம் மாதிரி விழும் தண்ணீரில் சூரி குளித்துக் கொண்டிருந்தான். நான் குளக்கரையில் உட்கார்ந்திருக்க, என் பின்னால் எருமைகள் மேயும் அந்தப் புகைப்படத்தை அப்போதுதான் அவன் எடுத்தான். என் பாசிப் பச்சை நிறச் சட்டை அவனுக்குப் பிடித்திருந்தது. "சட்டை எங்கே எடுத்தீங்க?" என்ற கேள்வியுடன்தான் சூரியின் முதல் பேச்சே ஆரம்பித்தது. கை குலுக்கும்போது என் கையைப் பிடித்துக்கொண்டு, " பூ மாதிரி இருக்கு. மம்பட்டி இருக்கிற திசை கூடத் தெரியாது போல" என்று சிரித்தான். என் கையை விட்டுவிட்டு, தன் கைவிரல்களை அகல விரித்து, உள்ளங்கையைத் தன் பக்கமாகத் திருப்பிப் பார்த்தபடி, "தட்டான் சிறகு மாதிரிச் சொர சொரண்ணு இருக்கா?" என்று சூரி என்னிடம் கேட்டான்.

ஒரு குறிப்பிட்ட வீட்டைச் சொல்லி, "அந்த வீட்டுக்கு முன்னால ஒரு வேப்பமரம்



சிவசைலத்துக்கு அருகே இருக்கிறது கடனாநதி அணை. மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் ஒரு குட்டிக் கடல் போல அலைத் ததும்பி நிற்கும் இந்த அணையால் சுற்றுவட்டாரப் பகுதிகள் அனைத்துமே பசுமையைப் போர்த்திப் பரிமளிக்கிறது. சிவசைலத்துக்குப் போவோர் கடனாநதியிலும் நீராடுவதைக் கடமையாகக் கொள்ளலாம்.

- செல்லம்மாள், ஆழ்வார்க்குறிச்சி

நிக்கும், பார்த்திருக்கீங்களா?'' என்று கேட்டு விட்டு, அந்த வேப்பமரத் தூரில் பட்டை வெடித்திருப்பது பற்றிச் சொல்ல ஆரம்பித் தான். சூரி சொல்கிற வீட்டு வேப்பமரத்தை நான் பார்த்தது இல்லையெனினும், சூரி சொல் லச் சொல்ல வேறு ஒரு பட்டை வெடித்த மரம் எனக்குத் தெரிய ஆரம்பித்தது.

சூரி இப்போது பட்டைகளின் வெடிப்பு வழியாக ஊர்ந்து செல்லும் கடுத்தான் எறும்புகள் நகர்வதைப் பற்றித் தன்னை மறந்து வர்ணிக்கத் துவங்கியிருந்தான். சூரி யைப் பற்றி இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டு இருக்கிறபோதே சூரியின் குரல் கனத்து, அந்த அரங்கு முழுவதையும் நிரப்பியது.

''நண்பர்களே'' என்று சூரி சுருக்கமாகத் துவங்கும்போது, உடனடியாக எல்லோரும் நண்பர்கள் ஆகிவிடும்படியான குரல் இருக் கும். என் பெயரைச் சொல்லவில்லையே, உன் பெயர் விட்டுப் போயிற்றே, அவர் பெயரை எதற்காகச் சொல்ல வேண்டும் என்று யாருக்கும் எந்த ஆவலாதியும் இராது. சொல்லப்போனால் முன்னைவிடவும் மேடையில் இருப்பவர்கள் தங்களை நெகிழ்த்தியாக வைத்துக்கொள்வார்கள். லேசாக ஒரு மலர்ச்சி கூட ஒன்றிரண்டு பேர் முகத்தில் வந்திருக்கும்.

''முதலில் தமிழ் வாழ்த்து'' என்று சூரி சொல்லி நிறுத்துகையில், உட்கார்ந்திருக்கிற எல்லோரும் அனேகமாக எழுந்துவிட்டனர். கடைசி பிளாஸ்டிக் நாற்காலி கூட நகர்ந்து விட்டது. ''அப்புறமாப் பேசுதேன்'' என்று செல்ஃபோனை துண்டித்த ஒருவருக்கு, இன்னொரு அழைப்பு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. நிற்கிற எல்லோருடைய உதடுகளும் ''நீராருங் கடலுடுத்த'' என்று மவுனமாக உச்சரிக்கத் தொடங்கிவிட்டன. ஒலிபரப்பில் ஏதோ கோளாறு. தமிழ் வாழ்த் துத் துவங்காமல், 'ஸ்ஸ்ஸ்' என்று சீறுகிறது.

நிறுத்தச்சொல்லி சூரி மேடையை விட்டு இறங்கும்போது, கடைசி வரிசைப் பக்கமிருந்து அந்தப் பெண் வேகமாக மேடைக்கு வந்துகொண்டிருந்தார்.

முளைப்பாரி நகர்வதுமாதிரி சேலை விசிறலுடன் அவர் வருவதைப் பார்த்ததும், சூரி மறுபடியும் வந்து சிரித்தபடி, ''இப்போது தமிழ் வாழ்த்து. சங்கர சிந்தாமணி பாடுவார்'' என்று சொல்வதற்குள் மறுபடியும் அந்த நாற்றுப் பச்சை.

சங்கர சிந்தாமணியா? அதென்ன சங்கர சிந்தாமணி? இது சிந்தாமணி அக்கா அல் லவா? சந்தேகமே இல்லை. சிந்தாமணி அக்காவேதான். இன்னும் கோணல் வகிடு தான் எடுக்கிறார்கள். அங்கங்கே கொஞ்சம் நரைத்திருக்கிறது. முன்பு கோபிப்பொட்டு வைப்பார்கள். இப்போது சற்று அகலமாக ஒட்டுப் பொட்டு. உருவிவிட்டமாதிரி அதே நீளமான மூக்கு. மூக்குத்தி போட்டால் உங் களுக்கு நன்றாக இருக்கும் என்று சிதம்பரத்திற்குச் சொல்லத் தோன்றியிருக் கிறது. ஆனால் சொன்னதே இல்லை.

சங்கரன்கோயில் பிரியாணியைப் போலவே செங்கோட்டை பிரியாணியும் தென் காசி வட்டாரத்தில் படுபிரபலம். கேரளா பார்டருக்கு அருகே இருக்கும் ரஹமத் புரோட்டா ஸ்டால் பிரியாணி என்றால் குற் றாலத்தில் குளிப்பது போல அவ்வளவு சுகமாகவும், சுவை யாகவும் இருக்கும் என்கிறார்கள் செங்கோட்டை வாசிகள். குற்றா லத்தில் குளித்துவிட்டு செங் கோட்டையில் டிபனை முடித்துக் கொள்ளலாம்.

- திலகம், திருக்கருங்குடி.





அதே அகலச் சிரிப்பு. பார்க்கிறதுக்கு வாயோ, உதடுகளோ அப்படி ஒன்றும் பெரியதாகத் தெரியாது. ஆனால் சிந்தாமணியக்கா சிரிப்பு ரொம்ப அகலமாக இருக்கும். சிங்கப் பல் தெரியும். சிங்கப் பல்லை விட, சிந்தாமணியக்கா சிரிப்புக்கு இன்னோர் அழகு - பல்வரிசைக்கு மேல் விளிம்பு கட்டினது போலத் தெரிகிற ஈறு. பொதுவாக இப்படி ஈறு தெரிந்தால் பார்க்கிறதுக்கு நன்றாக இராது இல்லையா. சிந்தாமணியக்காவுக்கு எத்தனையோ மாயம். அதில் இந்தச் சிரிப்பும் சேர்த்தி.



"வேடந்தாங்கல் பறவைகள் எங்கிருந்து வருகின்றன?"
"முட்டையிலிருந்து."
-ஆர். அனந்தராமகிருஷ்ணன், திருநெல்வேலி

சிதம்பரத்துக்குப் பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முந்திப் போய்விட்ட மாதிரி இருந்தது. அது பொங்கலுக்கு முந்திய வெள்ளையடிப்பு நேரம். சிதம்பரம் கையில் மேஜை டிராயர்கள், ரேடியோ வைக்கிற மர ஸ்டாண்ட், பரணில் கிடந்த நடை வண்டி, தாத்தாவுடைய கணக்குப் பிள்ளை மேஜை எல்லாவற்றையும் அம்மா கொடுத்து,

"பின்னால போயி, எல்லாத்தையும் வாய்க்காலில் ஒரு முக்கு முக்கி எடுத்துட்டு வா" என்று சொல்லி அனுப்பியிருந்தாள். மேஜையில் பாச்சா நாற்றமும் அடிக்கிறது. பாச்சா உருண்டை வாசனையும் அடிக்கிறது எப்படி என்று தெரியவில்லை.

சிதம்பரம் ரொம்ப காலமாக இந்த வீட்டில் தான் இருக்கிறான். பிறந்ததில் இருந்தே என்று கூடச் சொல்லலாம். எல்லோரும் வளர்ந்து கொஞ்சம் பெரிய பிள்ளைகள் ஆன பிறகு, "வேற வீடு வாடகைக்குப் பார்த்துருவமா" என்று அப்பா கேட்கிறபோது எல்லாம் அம்மா, "இந்த வீட்டுக்கு என்ன குறைச்சல்? இது மாதிரி வசதி வேறு எங்கேயும் வராது" என்று சொல்லிவிடுவாள். அம்மா வசதி என்று சொன்னது வீட்டுக்குப் பின்னால் ஓடுகிற இந்த வாய்க்காலாகத்தான் இருக்கும். இதைத் தவிர தெரு முக்கில் ஒரு அடி - பைப் உண்டு. இன்னொரு கார ணம் வினோதமானது. நெல்லையப்பர் கோவில் யானை இந்தத் தெரு வழியாகத் தான் குளித்துவிட்டுப் போகும். அம்மாவுக்கு யானையைப் பார்க்கப் பிடிக்கும்.

தெரு வாசல் நடையிலேயே நின்று, அது அரசடிப்பாலம் முக்குத் திரும்புகிறவரை பார்த்துக்கொண்டிருப்பாள். இந்த வீட்டைப் பிடித்துப்போனது போல, அம்மாவுக்கு சிந்தா மணி அக்காவையும் பிடிக்கும். தோட்டத் துக்குப் போகிற வழியில் உள்ள குச்சு வீட்டில்தான் அக்கா வாடகைக்கு இருந்தாள். சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸிலோ எங்கேயோ வேலை. அக்கா வீட்டில் இருந்தால் ட்ரான் ஸிஸ்டர் பாட்டுக் கேட்கும். அல்லது மண் ணெண்ணெய் ஸ்டவ் வாசம் அடிக்கும். அந்த வாசனை தேய்ந்து காணாமல் போகிற சமயம் வாய்க்கால் வந்திருக்கும்.

படித்துறைக்கல் ஓரமாக நத்தை நகர்ந்து செல்லும். குளிப்பாட்டி மஞ்சணத்தி மூட்டில் கட்டிப்போட்டிருக்கிற கன்றுக்குட்டி மேல் வெயில் மினுங்கும். டொப்டொப் பென்று நெட்டிலிங்க மரத்தில் இருந்து கொட்டைகள் விழும்.

சிதம்பரம் இரண்டு கைகளிலும் இரண்டு மரச் சாமான்களைத் தூக்கியபடி வாய்க்காலுக்

குப் போகும்போதுதான் சிந்தாமணி அக்கா முதன் முதலில் இவனுடன் பேசினாள். ''என்ன பொங்கல் வந்துட்டுதா?'' என்று கேட்டதற்கு சிதம்பரம் சிரிக்க மட்டும் செய்தான். பதில் ஒன்றும் சொல்லவில்லை. சிந்தாமணி அக்கா அப்போதுதான் அவளுடைய பிரத்யேகமான அந்த ஈறு தெரிகிற அகலச் சிரிப்பைச் சிரித்தாள். கணக்குச் சரிதானே? சிதம்பரத்தின் சிரிப்புக்குப் பதிலாக இன்னொரு சிரிப்பு. ஒரு சிங்கப் பல் லேசாகக் கீழுதட்டைக் குத்தி, லேசாகப் பள்ளம் விழுந்தது அந்த இடத்தில். அந்தச் சிரிப்பு அப்படியே பதிந்து போயிற்று சிதம்பரத்துக்கு.

சிதம்பரம் நிமிர்ந்து பார்க்கும்போது, சிந்தாமணி அக்கா தமிழ் வாழ்த்து முடிந்து, அதுவரை மூடியிருந்த கண்களையும் குவிந்திருந்த கைகளையும் விரித்தும் விரிக்காமலும் மேடையிலிருந்து இறங்கினார். முன் வரிசையில் காலியாக இருந்த ஒரு நாற்காலி ஒன்றில் அவரை உட்காரச் சொன்னார்கள். அவர் அதை மறுத்துவிட்டு நகர்ந்தபோது, மூன்றாவது அல்லது நான்காவது வரிசையில் உட்கார்ந்திருந்த ஒரு பெண், சிந்தாமணி அக்காவை இழுத்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டது.

சிந்தாமணி அக்காவின் கையில் ஒரு சிவப்பு அல்லியும் வெள்ளை அல்லியும் தண்டோடு இருந்தன.

சிதம்பரத்தின் அம்மாவும் அப்படித்தான். எப்போதாவது டீ.வி. பார்க்க சிந்தாமணியக்கா வீட்டுக்கு வந்தால், அக்காவை இழுத்துத் தன் பக்கத்தில் வைத்துக் கொள்வாள். அதுவரை அம்மா பக்கம் இருந்த சிதம்பரம் எழுந்திருந்து வேறு இடம் போவான். ''நீ சும்மா இங்கியே இரு'' என்று அக்கா சிதம்பரத்திடம் சொல்வாள். ''அது எப்படி இருக்க முடியும்? கூச்சமாக இராதா? குட்டிப் பூனையைக் கவ்விக்கிட்டுப் போற மாதிரி எப்பவும் எதுக்கு ஒரு தலைகாணியைத் தூக்கிக்கிட்டே போறே?'' என்று சிதம்பரம் கையில் இருக்கிறதை விளையாட்டாகப் பிடுங்குவாள். இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒன்று கேட்டால் சிதம்பரம் என்ன சொல்ல முடியும்?

இதற்கு முன்பு ஒரு தடவை, ''குட்டி உனக்கு நீச்சல் அடிக்கத் தெரியுமா?''என்று சிதம்பரத்திடம் சிந்தாமணியக்கா கேட்டாள். சிதம்பரம் என்று சொல்லாமல் குட்டி என்று கூப்பிட்டது ரொம்பப் பிடித்திருந்தது. ஆனால் நீச்சல் தெரியுமா என்பதற்குப் பதிலாக, படம் வரையத் தெரியுமா என்று கேட்டிருக்கலாம். தெரிந்ததை விட்டுவிட்டுத் தெரியாததைக் கேட்டால் என்ன செய்ய முடியும் அவன்?

சிதம்பரத்தைப் பார்த்து, சிந்தாமணி அக்கா வாய்க்காலில் கிடக்கிற அல்லிப் பூவைக் காட்டியபடி கேட்டாள். ''உனக்கு நீச்சல் தெரியாதுன்னு சொல்லுதே. உன்கிட்டே யாராவது வந்து, எனக்கு அந்தப் பூவைப் பறிச்சுக் கொடுன்னு கேட்டா என்ன பண்ணுவே? இப்போ நானே உங்கிட்ட அப்படிக் கேக்கிறேன்னு வையேன். எனக்கு நீச்சல் தெரியாதுன்னா சொல்லுவே? நமக்காக இல்லாவிட்டாலும் மத்தவங்களுக்காகவாவது சிலதை நாம படிச்சுக்கிடணும்''

சிந்தாமணியக்கா இதைச் சிரித்துகொண்டேதான் சொன்னாள். ஆனால் சிதம்பரத்துக்கு அழுகை அழுகையாக வந்தது. சிதம்பரம் ''சரி'' என்று மட்டும் சொன்னான். ''என்ன சரி?'' என்று சிந்தாமணி அக்கா திருப்பிக் கேட்டாள்.

சிதம்பரம் பதில் சொல்லாமல் கண்ணைத் துடைத்துக்கொண்டே வீட்டுக்குப் போய்விட்டான். சிந்தாமணி அக்கா நிற்கச் சொன்னாள். நிற்கவில்லை.

''குட்டி, குட்டி'' என்று வாசலில் சத்தம்

கேட்டது.சிதம்பரத்திற்கு அது சிந்தாமணி அக்காதான் என்று தெரியும். ஆனாலும் வெளியே வரவில்லை. அம்மா அடுப்படியில் ஜோலியாக இருந்தாள் போல. சம்பந்தமே இல்லாமல் சிதம்பரத்திற்கு இப்போது பனங்கிழங்கு அவிக்கிற வாசனை அடித்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. இரண்டாம் கட்டில் கொஞ்சம் போலத்தான் வெளிச்சம் இருக்கும்.

சிதம்பரம் அங்கேயே இருந்தான். படுக்கை எல்லாம் சுருட்டி வைத்திருந்த அசையிலிருந்து தொங்குகிற ஜமுக்காளத்தில் இருந்து பிரிந்து ஒரு நூல் கனமாக அசைவது பிடித்திருந்தது.

''நான் எந்த ஊர் பேங்குல வேணும்னா பணம் எடுப்பேன்!''
''எல்லா பேங்குலேயும் அக்கவுண்ட் இருக்கா?''
''திருட எதுக்கு அக்கவுண்ட்?''
- பி.பாலாஜி கணேஷ், கோவிலாம்பூண்டி



சிந்தாமணி அக்காவுக்கு எப்படிக் கரெக்டாகத் தெரியுமோ? நேராக இரண்டாம் கட்டு வாசலில் நின்று, ''குட்டி இங்கேதான் இருக்கியா?'' என்று சிரித்தாள்.

சிந்தாமணி அக்காவின் கையில் ஒரு சிவப்பு அல்லியும் வெள்ளை அல்லியும் தண்டோடு இருந்தன. தண்ணீர்ப் பாம்பு மாதிரி, நீண்டு வழுவழுத்த தண்டுகள். சிந்தாமணி அக்கா வேறு ஒன்றும் சொல்லவில்லை. ''எனக்கு நீச்சல் அடிக்கத் தெரியும்லா குட்டி'' என்று சிரித்துவிட்டு, ''வாங்கிக்கோ'' என்று இரண்டு கைகளிலும் பூவை நீட்டினாள்.

சிந்தாமணி அக்கா அப்படி அல்லிப் பூக்களை நீட்டியதும், தான் வாங்கியதும் நேற்று நடந்ததுபோல இருந்தது சிதம்பரத்துக்கு. எதற்கு நேற்று? இன்று நடப்பது போல இருக்கிறது. தன்னுடைய கைகளில் இன்னும் அந்தப் பூக்கள் அப்படியே வாடாமல் இருப்பதுபோலத் தோன்றியது. இப்படியே எழுந்து சிந்தாமணி அக்காவிடம் நேரே போய் அவற்றைக் கொடுத்துவிட்டால் என்ன?

சிதம்பரம் ஒரு நிமிடம் சூரியைத் தேடினான். அவன் மேடையில் இருந்த ஒருவரிடம் குனிந்து பேசிக்கொண்டிருந்தான். அவர் தோளில் கிடந்த பச்சைத் துண்டால் முகத்தை ஒற்றிக் கொண்டார். தலையைக் கூட படியச் சீவிக் கொள்ளவில்லை. கலைந்து கிடந்தது. நெற்றியில் உலர்ந்து தெரிந்த திருநீறுக்கும் சவரம் செய்யாத தாடிக் கருப்புக்கும் ஒரு பொருத்தம் இருந்தது.

வெள்ளைச் சட்டையும் காவி வேட்டியுமாக இருந்த அவர்தான் அடுத்துப் பேசப் போகிறார் போல. முகத்தில் வெள்ளை விழுந்து, கண் இமை, உதடு எல்லாம் சிவந்து போயிருந்தது. சிரித்துக் கொண்டேயிருந்தார். சூரியும் அவரும் மாறி மாறிச் சிரிப்பினாலேயே பேசிக் கொள்வது மாதிரி இருந்தது.

இதுவரை யார் பேசினார்கள், என்ன பேசினார்கள் என்றுகூட சிதம்பரம் கவனிக்கவில்லை. அவருடைய சிரிப்பையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சூரியிடம் அவர், சிந்தாமணி அக்காவைக் காட்டி எதையோ சொல்வது தெரிந்தது. சிந்தாமணி அக்கா தான் உட்கார்ந்திருக்கும் இடத்தில் இருந்து, ''மாட்டேன், மாட்டேன்'' என்று கையைக் காட்டிக் கொண்டிருந்தாள். மாட்டேன் என்கிறபோதும் சிந்தாமணி அக்காவுக்குச் சிரிப்புத்தான். சரி என்கிறதற்கும் முடியாது என்பதற்கும் எப்படி அப்படி ஒரே விதமாகச் சிரிக்க அக்காவுக்கு முடிகிறதோ? ●



* புலி நடமாடும் ஓடை

"பெண்டிங்கியா கொண்டபனா, யூஜினா சிங்கம்பட்டியானா, இவையெல்லாம் என்ன?'' - நம்மிடம் கேட்டுவிட்டுப் புன்னகைகிறார் களக்காடு - முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் துணை இயக்குநர் மற்றும் வன உயிரினக் காப்பாளர் பத்திரசாமி. "நாங்க சொல்றதைவிட நீங்க சொன்னாதான் ஸார் நல்லா இருக்கும்'' என்று அவருக்குக் கொக்கிப் போட, ''பனை மரமும், கள்ளி மரமும் தான் ஸார் அது'' என்று அதிரடியாகச் சிரிக்கிறார். ''ஆனால், உலகத்திலேயே வேறெங்கும் இல்லாத மிக அபூர்வமான மரவகைகள் இவை. களக்காடு - முண்டந்துறை காடுகளில் மட்டுமே பார்க்கலாம்'' என்றவர் அடுத்து ஆச்சர்யத்தைத் தூக்கிப் போட்டார். ''இருவாட்சி பறவை தெரியுமா?''

* பத்திரசாமி



''பாடப் புத்தகத்துல படிச்சுருக்கோம்.''

''இங்க நீங்க நேரடியாகவே பார்க்கலாம். அதனால்தான் களக்காடு - முண்டந்துறை புலிகள் காப்பகக் காடுகளை பல்லுயிர்ப் பெருக்கமுள்ள காடுகள் என்று உயிரியல் வல்லுநர்கள் அறிவிச்சுருக்காங்க'' என்கிறார்.

''முண்டந்துறைக் காடுகள் புலிகளுக்கு ஃபேமஸ். அதைப் பத்திச் சொல்லுங்க.''

''களக்காடு - முண்டந்துறைக் காடுகளை, புலிகள் காப்பகமா அறிவிச்சது 1988-லதான். ஆனால், அதுக்கு முன்னாடியே, அதாவது 1972-ல வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் அமலுக்கு வர்றதுக்கு முன்னாடியே, முண்டந்துறைக் காடுகள் வன உயிரினப் பாதுகாப்பகமா செயல்பட ஆரம்பிச்சுருச்சு. கிட்டத்தட்ட 895.3 சதுரகிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்தக் காடுகள்ல, 400 சதுரகிலோமீட்டர் பசுமை மாறாக் காடுகள். இந்தப் பகுதிகள்லதான் பல்லுயிர்ப் பெருக்கங்களும் ஜாஸ்தி. புலிகள் நடமாட்டமும் ஜாஸ்தி'' என்றவரிடம், ''புலிகள் பற்றி சுவாரஸ்யமான தகவல்கள் ஏதாவது சொல்

முண்டந்துறை

லுங்க'' என்றோம். ''ராயல் பெங்கால், சமத்ரா, ஜாவா, பாலி, இந்தோ சீனா... போன்ற எட்டு வகையான புலிகள் உலகத்துல இருந்துருக்கு. ஆனா இப்போ இருக்கறது அஞ்சு வகைகள்தான். அதுவும் அதிகமா இருக்கறது இந்தியாவுலதான்'' என்றவரிடம், ''இதுல இந்தியப் புலிகள் எந்த வகை'' என்று கேட்டதும், ''ராயல் பெங்கால். இவை வெஸ்ட் பெங்கால்ல இருக்கற சதுப்பு நிலக் காடுகள்ல வாழ்கின்றன. இந்தப் புலிகள்தான்



* சிங்கவால் குரங்குகள்

மேன் ஈட்டர். வருடத்துக்கு எட்டிலிருந்து பன்னிரண்டு மனிதர்களை இவை வேட்டையாடுகின்றன'' என்று கிலியூட்டுகிறார்.

''வேற என்னென்ன விலங்குகள் இருக்கு?''

'களக்காடு - முண்டந்துறை' புலிகள் காப்பகம்தான். ஆனா, புலிகளைக் காப்பாத்தணும்னா, சாதாரண விஷயமில்லை. உலகம் முழுக்க நாற்பதாயிரத்துக்கும் மேல வாழ்ந்த புலிகள் இன்னைக்கு



புலிகள்!

ஆயிரக்கணக்கில்தான் இருக்கு. அதனாலதான் புலிகளின் உணவுக்குப் பயன்படும் மிலார்கள், மான், காட்டு எருமை போன்றவையும் குறையாமல் பார்த்துக் கொள்கிறோம். 2006-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஆறுலேர்ந்து எட்டு புலிகள் இருக்கலாம்னு சொன்னாங்க. இப்ப அது பதின்மூன்றாகப் பெருகி இருக்கலாம்'' என்கிறார் பத்திரசாமி.

''புலிகள் பொதுவா இலையுதிர்க் காடுகளில்தான் வாழும். ஆனால், முண்டந்துறை போன்ற பசுமை மாறாக் காடுகளில் வாழ்வது ஆச்சரியம்தான். புலிகள் தவிர கருஞ்சிறுத்தைகளும் இங்கே உண்டு. அதைத் தவிர, வேறெங்கும் பார்க்க முடியாத ராஜ நாகம் இங்கே சர்வ சாதாரணமாய் கண்ணுல தட்டுப்படும். 70 டிகிரி சரிவா இருக்கற இந்தக் காடுகளோட உச்சியிலதான் மாமிச உண்ணியான புலிகள் இருக்கு. அடுத்த அடுக்குல மாமிசம், தாவர உண்ணியான கரடி போன்றவையும். கீழடுக்குலதான் தாவர உண்ணிகள் உள்ளிட்ட பிற உயிரினங்கள் வாழ்கின்றன'' என்ற பத்திரசாமியிடம், ''புலிகளை கண்ணால பார்த்துத் தானே கணக்கெடுப்பீங்க?'' என்று வினவ, ''புலிகளை நேர்ல பார்க்கறது. கடவுளைப் பார்க்கற மாதிரிங்க. அதோட பக்மார்க் (காலடித்தடம்) நகக்கீறல் இதை வெச்சுத்தான் கண்டுபிடிப்போம். நீரோட்டம் அதிகமுள்ள பகுதிகள்ல புலிகள் நடமாட்டம் இருக்கும்'' என்றவரிடம், ''தண்ணீருக்கும் புலிக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கடைசிக் கேள்வியைப் போட்டோம். அதற்குப் பத்திரசாமி, ''காடுகள்ல அலைஞ்சு திரிஞ்சு இரை தேடுவதைவிட தண்ணிக் குடிக்க வர்ற மிருகங்களை இரையாக்கிக்கறது ஈஸியில்லையா?'' என்று காடு அதிரச் சிரிக்கிறார். பெயர் தெரியாத பறவைகள் படபடத்துப் பறக்கின்றன.

“களக்காடு-முண்டந்துறையின் இன்னொரு ஸ்பெஷல் ராஜநாகம். இந்த வகை நாகங்கள் உலகில் வேறெங்கும் கிடையாது.”



வாசகர் யோசனை:
எஸ்.ஆதிலட்சுமி,
பாளையங்கோட்டை

தெய்வ சிந்தனை!



சாதாரணமாக எல்லா ஜனங்களுக்குமே தெய்வ சிந்தனை இருக்கத்தான் வேண்டும். மனித ஜீவன் அந்தப் பெயருக்கு லாயக்காக இருக்கவேண்டுமானால் தனக்கு ஜீவசக்தியைக் கொடுத்த சுவாமியைச் சிந்தித்து, அவன் அருள் வழிகாட்டுகிறபடிதான் ஜீவனம் நடத்தவேண்டும். இந்த (தெய்வ)சிந்தனை நாமே பண்ணுவதாக இருந்தால், நம்முடைய சித்தம் ஓடுகிற தாறுமாறான ஓட்டத்தில் உருப்படியாக ஒன்றும் தேறாது. அது மாத்திரமில்லாமல் நமக்கு சுவாமியைப் பற்றிச் சொந்த அனுபவமாக என்ன தெரியும்? நமக்குத் தெரியாதவரைப் பற்றி நாம் என்னத்தைச் சிந்திக்க முடியும்? இங்கே, அப்படித் தெரிந்து கொண்ட பெரியவர்கள் பாடிய ஸ்தோத்திரங்கள் - தமிழ் முதலான ப்ரதேச பாஷைகளில் இருக்கிற துதிகளுந்தான் - நமக்குக் கை கொடுத்துத் தூக்கிவிட ஓடி வருகின்றன. பல காலமாக அவற்றை, சுவாமியை சொந்தத்தில், நேரில் தெரிந்து கொண்ட எத்தனையோ பேர் சொல்லிச் சொல்லி அவற்றுக்குத் தெய்வீக சக்தி கூடிக்கொண்டே வந்திருக்கும். அவற்றைச் சொல்வதே, அதாவது, 'ஸ்தோத்ர பாராயணம்', 'துதி ஓதுதல்' என்பதே நம்முடைய சித்தத்தை சுவாமியிடம் சேர்த்து வைக்கும்.

நம் தேசம் செய்த பாக்கியம், இம்மாதிரி ஸ்துதிகள் ஒவ்வொரு தெய்வத்தையும் குறித்துக் கணக்கு வழக்கு இல்லாமலிருக்கின்றன. நம் தேசத்திலும் இந்தத் தமிழ் நாட்டில் பிறந்தவர்களின் பாக்கியம் இங்கே தோன்றிய நம் முன்னோர்கள் நம்முடைய தமிழ் பாஷையில் துதிகளை அப்படியே கொட்டி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் ஜனங்கள் அவரவரும், தாங்களே படித்துப் பாராயணம் பண்ணலாம். குருமுகமாகக் கற்றுக் கொண்டுதான் பண்ணணும் என்று கண்டிப்பு இல்லை. அநுபவம் கண்ட குரு எடுத்து வைத்துப் பண்ணினால் அது ரொம்ப விசேஷந்தான்; சந்தேகமேயில்லை. ஆனால் அப்படிக் கட்டாயமாக விதி இல்லை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்


தஞ்சை பரத்வாஜ்
நடக்குமென்பார்; நடக்கும்

மேஷம் : நீண்ட நாள் வழக்குகள் முடிவுக்கு வரும். நிலுவையில் இருந்த பாக்கிகள் வசூலாகும். சுபவிஷயங்கள் கைகூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நில வும். வாகன யோகமும் சொத்து சேர்க் கையும் உண்டு. எதிர்பாராத தகவல்கள் கிடைக்கும். உடல்நலம் மேம்படும்.

ரிஷபம்: மனபயம் அகலும். கடன் தொல்லைகள் விலகும். கொடுக்கல் வாங்கலில் கூடுதல் கவனம் தேவைப் படும். குடும்பத்தில் குழப்பம் ஏற்படா திருக்க விட்டுக் கொடுத்துப் போவது நலம். உடல்நலனில் எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும்.

மிதுனம்: உல்லாசம் பொங்கும். கடன் பிரச்னைகள் மங்கும். திடீர் தனயோகம் கிட்டும். சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடி வுக்கு வரும். வீடு, மனை விவகாரங் களில் வெற்றி கிட்டும். செலவுகள் கட் டுப்படும். உடல் ஆரோக்கியம் கிட்டும்.

கடகம் : பாராட்டும், பரிசுகளும் தேடி வரும். கௌரவப் பணிகளும், சுபச் செய்திகளும் கதவைத் தட்டும். மன நிலை, பண நிலை திருப்திகரமாகத் திகழும். குடும்பத்தில் குதூகலம் பெரு கும்.

சிம்மம்: வீடு, மனை வாங்க உகந்த வாரம். வராத கடன் பாக்கியும் வசூலாகும். செய்தொழிலில் மேன்மை கிட்டும். பண வரவு அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாக முடிவடையும். உடல்நலன் மேம்படும்.

கன்னி: மறைமுக விரோதிகளால் தொல்லை ஏற்படும். வலியச் சென்று உதவினாலும் வம்பிலே முடியும். நீண்ட காலக்கடன் பிரச்னைகள் தொல்லை தரும். பணிகளில் தவறு ஏற்படும். உடல்நலன் பாதிப்படையும். எங்கும், எதிலும் எச்சரிக் கையாய் இருப்பது நலம்.

துலாம்: வீடு, மனை விவகாரங்களில் சாதகமான பலன் ஏற்படும். கடன்கள் கட்டுக்கடங்கும். சுபச்செலவுகள் பெருகும். மறைமுக எதிர்ப்புகள் விலகி ஓடும். மனநிம்மதி கூடும். மகிழ்ச்சி நிறையும்.

விருச்சிகம்: குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். உடல்நலன் பாதிக்கப்படும். சொத்துச் சேர்க்கை ஏற்படும். வழக்குகள் சாதகமாக முடிவடையும். கடன் சுமை குறையும். ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும்.

தனுசு: தடைகள் விலகும். உடல்நலன் சீர்பெறும். நண்பர்கள், உறவினர்கள் வழி யில் நன்மை கிட்டும். புண்ணியஸ்தல யாத்திரை சித்திக்கும். வாகன சுகம் கிட்டும்.

மகரம்: அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். பணவரவு பெருகும். கடன் தொல் லைகள் குறையும். செய்தொழிலில் இலா பம் கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெரு கும். தடைகள் நொறுங்கும். உடல்நலன் உன்னதமான நிலையில் இருக்கும்.

கும்பம்: திடீர் தனயோகம் கிட்டும். கடன்கள் தீரும். உடல்நலன் மேம்படும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். சாதனைகள் சாத்தியமாகும். ஸ்திர சொத்துச் சேர்க்கை ஏற்படும். நாடிய உதவிகள் கிடைக்கும். மனநிம்மதி பெருகும்.


மீனம் : பணத் தட்டுப்பாடு குறையும். பொன், பொருள், பூமி இவற்றில் ஆதாயம் கிட்டும். இடமாற்றம் ஏற்படும். வழக்குகள் வெற்றி பெறும். கடன்கள் தீரும். ஆரோக்கியம் மேம்படும். வாகன யோகம் கிட்டும். மனமகிழ்ச்சி கூடும்.-

14.03.2010 முதல் 20.03.2010 வரை

மனித உடல்களைத் தாக்கும் ஃபீவர்களில் வைரஸ், மலேரியா, டைபாய்ட் என பலவிதமானவை உண்டு. ஆனா, பரீட்சை டைம்ல வர்ற எக்ஸாம் ஃபீவர் மனசுக்கானது.

அதென்ன 'எக்ஸாம் ஃபீவர்?' டாக்டர் எம்.பி.ரகு சொல்கிறார்:

''பொதுவாகவே ஒரு குழந்தையின் குணாதிசயங்கள் பெற்றோர்களால், பள்ளியால் மற்றும் விளையாட்டுக்களால் உருப் பெறுகின்றன. இந்த எக்ஸாம் ஜுரம் என்பது பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களிடம்தான் அதிகம். தேர்வு சமயங்களில் காணப்படும் இது, ஒரு வகையான psychological பாதிப்பு'' என்கிறார்.



''ஒவ்வொரு குழந்தைக்குள்ளும் தனித் திறமை ஒன்று நிச்சயம் ஒளிந்திருக்கும். பத்தாம், பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் 99 சதவிகித மார்க் வாங்குவதால் மட்டுமே ஒரு குழந்தை புத்திசாலி அல்ல. நம் நாட்டில் பரீட்சை நேரத்தில் குழந்தைகளைவிடப் பெற்றோர்கள்தான் அதிகக் கவலைப் படுகிறார்கள். அந்த மன அழுத்தம் நிச்சயம் குழந்தைகளைப் பாதித்து, அவர்களிடம் ஒரு மனத் தவிப்பை ஏற்படுத்தி

விடுகிறது. இதுவே எக்ஸாம் ஜுரம் எனச் சொல்லக்கூடிய ஒரு மன நிலைக்குத் தள்ளிவிடும். பெற்றோர்கள் தங்களது குழந்தைகள் மீது அளவுக்கதிகமான எதிர்பார்ப்புகளைத் திணிக்கக்கூடாது. ''நீ படிக்கறதைப் படி. நிச்சயம் எக்ஸாம்ல நல்லாதான் எழுதுவே'' என அடிக்கடி தன்னம்பிக்கையை வளர்க்கும் விதத்தில் பேச வேண்டும்.

''பரீட்சைக்கு எவ்வளவுதான் நன்றாக ஒரு மாணவர் தயார் செய்திருந்தாலும், படித்ததெல்லாம் மறந்து போய்விடுமோ... தெரியாத கேள்விகள் வந்துவிட்டால்... கணித பாடத்துக்குச் சரியாக ஃபார்முலாக்கள் எழுதாமல் விட்டுவிட்டால்... இப்படி எதிர்மறையான எண்ணங்களை வளர்த்துக்கொள்வதுடன், பரீட்சை


ஃபீவர் வரும் முன்னே... எக்ஸாம் வரும் பின்னே!

நெருங்குவதற்குச் சில நாட்களுக்கு முன்பிருந்தே மனப் பதற்றத்தை வளர்த்துக்கொண்டு, சத்தான உணவுகளை உண்ணாமல், உடலளவிலும் மனத்தளவிலும் பாதிக்கப்படுகிறார்கள்'' என்கிறார்.

இதிலிருந்து விடுபட வழி?

''மாணவர்கள் மனத்தினை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். தியானம், மூச்சுப் பயிற்சி இவற்றைச் செய்வது, பரீட்சை நேரங்களில் மாணவர்களது மனம் புத்துணர்ச்சியுடன் இருக்க உதவும். எக்காரணம் கொண்டும் காலை உணவைத் தவிர்த்துவிட்டுச் செல்வது கூடாது. பரீட்சை சமயங்களில் எண்ணெய், நெய் பதார்த்தங்களைத் தவிர்த்துவிட்டுக் காய்கறி, பழங்களைச் சாப்பிட வேண்டும். நிறைய தண்ணீர் குடிப்பது, குறைந்தபட்சம் ஆறு முதல் ஏழு மணி நேர

✱ டாக்டர் எம்.பி.ரகு



நிம்மதியான இரவுத் தூக்கம், ஃபாஸ்ட் ஃபுட்களைத் தவிர்த்தல், எல்லாவற்றுக்கும் மேலாகப் பெற்றோர்களின் நம்பிக்கை வார்த்தைகள் இவை எல்லாம் எக்ஸாம் ஜுரத்தை நெருங்க விடாது'' என்கிறார் டாக்டர் ரகு.

- நளினி சம்பத்குமார்



கல்யாண கைலாயம்!

தாமிரபரணி நதி தீரத்தில் எழுந்தருளியிருக்கும் நவகைலாயங்களில் முதன்மைக் கைலாயம் பாபநாசம். (மற்றவை பெட்டிச் செய்தி) இது சூரியனுக்குரிய ஸ்தலம். அகத்திய மாமுனிக்குத் தன் திருக்கல்யாண கோலத்தில் சிவபெருமான் காட்சி தந்து அருளிய பூமி. இந்த ஊரின் பெயருக்கு ஏற்றபடி இங்கு வந்து ஈசனை வணங்கி, தாமிரபரணியில் நீராடினால் நம் பூர்வ கர்ம பாவங்கள் தீரும் என்பது ஐதீகம்.

* பொதிகையில் பிறப்பெடுக்கும் தாமிரபரணி, சமவெளியை அடையும் இடத்தில் அமைந்திருக்கிறது பாபநாசம் கைலாசநாதர் கோயில்.

* கோயிலின் முன்பு வரை வடக்கு நோக்கிப் பாயும் நதி, பிறகு கிழக்கு நோக்கித் திரும்பிவிடுகிறது. இதனால்தான் கோயிலின் எதிரே இருக்கும் படித்துறையில் நீராடினால் பாவம் தீரும் என்கிறார்கள்.

* நதியின் மேற்குக் கரையிலிருக்கும் ராஜகோபுரம் ஏழு நிலைகளை உடையது. இதன் உயரம் எண்பது அடி.

* ஸ்தலவிருட்சம் களா மரம். மூன்று கிளைகளால் ஆன இம்மரத்தின் கீழ் இருக்கும் லிங்கத்துக்கு முக்களாலிங்கர் என்று பெயர்.

* மூன்று பிராகாரங்களைக் கொண்ட இத்திருக்கோயிலின் முதல் பிராகாரத்தில், பெரிய கணபதி ஆலயமும், சாஸ்தா சந்நிதி

அகத்தியர் தாமிரபரணியில் மிதக்கவிட்ட ஒன்பது மலர்கள், கரை ஒதுங்கிய இடங்கள்தான் நவ கைலாயம்!

யும் உள்ளன.

✱ இரண்டாவது, மூன்றாவது பிராகாரங்களில் முறையே காசிலிங்கம், அகஸ்தியர், புலஸ்தியர் சந்நிதிகளும், அதிகாரநந்தி, சூரியன், சுரதேவர் சந்நிதிகளும் உள்ளன.

✱ விக்கிரமசிங்கன் என்னும் பாண்டிய வயிராசலிங்கம், பரஞ்சோதிலிங்கர் என்ற திருநாமங்களும் உண்டு.

✱ நாரதமுனிவர் வழிபட விரும்பிய ஊர் பாபநாசமாம்.

✱ மூலவர் திருமேனி முழுவதும் ருத்ராட்

"சிவபெருமான் தரும் திருக்காட்சியை நான் பார்க்கவேண்டும்" என்று தன் குருவான அகத்திய முனிவரிடம் வேண்டுகிறார் உரோமச முனிவர். அவர் தாமிரபரணியில் ஒன்பது மலர்களை மிதக்கவிட்டு, "இவை எங்கெங்கு கரை சேர்கிறதோ அங்கே சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபடு. உனக்கு சிவனின் திருக்காட்சி கிட்டும்" என்றாராம். அதன்படி அமைந்ததுதான் நவகைலாயம். மலர்கள் கரைசேர்ந்த இடங்கள்: 1. பாபநாசம், 2. சேரன் மகாதேவி, 3. கோடகநல்லூர், 4. குன்னத்தூர், 5. முறப்பநாடு, 6. தென்திருப்பேறை, 7. ராஜபதி, 8. ஸ்ரீவைகுண்டம், 9. சேர்ந்தப்பூமங்களம்.

மன்னன் காலத்தில் கட்டப்பட்டிருக்கின்றது இத்திருக்கோயில். இதற்குச் சாட்சியாக மீன் சின்னங்களும், கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

✱ இரண்டு பகுதிகளாக அமைந்துள்ள இக்கோயிலின் ஒரு பகுதியில் பாபநாசம் பெருமாள் காட்சியளிக்கிறார், இவருக்கு சத்தினால் ஆனது!



✱ உட்சுற்று மண்டபம், வசந்த மண்டபம், கூத்தர் மண்டபம், வாகன மண்டபம், திருமண மண்டபம் என ஐந்து மண்டபங்கள் உள்ளன.

✱ திருமண மண்டபத்துக்கு எதிரே நவ கிரகங்கள் காட்சியளிக்கின்றன.

✱ சிவராத்திரியில் பாபநாசம் வந்து வழிபடுவது விசேஷமானது!


✱ நவக்கிரகங்களில் இது சூரியனுக்குரிய ஸ்தலம் என்பதால் அவருக்கான பரிகார பூஜைகளும் நடக்கின்றன.

வாசகர் யோசனை:
சூரியநாராயணன்,
நெல்லை

சிரிக்க வெச்சேன்... சிங்கப்பூர் போனேன்!

கல்லூரி நாட்களிலேயே எனக்கு 'கல்கி' அறிமுகமாயிடுச்சு. தொடர்ந்து முப்பத்தாறு வருஷமா வாசிச்சு வர்றேன். புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை என்கிட்ட தீவிரப்படுத்தினது 'கல்கி'யோட படைப்புகள்தான். 'பி.ஜி.பி.இசக்கி...' 'நெல்லை குரலோன்' அப்படினு ரெண்டு பேர்லயுமே 'கல்கி'க்கு வாசகர் கடிதங்கள், கேள்விகள் எழுதி வந்தேன். அந்த ரெண்டு பேரும் வெவ்வேறு நபர்களா; இல்லே ஒரே நபரான்னு கல்கி ஆபீஸ்லயே சந்தேகம் வந்துருச்சு.

1992-ல் 'கல்கி' இதழோட பொன் விழா ஆண்டு. 'சிரிக்க வையுங்கள்.. சிங்கப்பூர் செல்லுங்கள்!'னு ஒரு போட்டி. 'வாசகர் யோசனை'னு இன்னொரு போட்டி. ரெண்டுக்குமே நான் எழுதிப் போட்டேன். 'நெல்லை குரலோன்'ங்கற பேர்ல 'வாசகர் யோசனை'ப் போட்டியில் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா ரொக்கப் பரிசு வாங்கினேன். 'சிரிக்க வையுங்கள் சிங்கப்பூர் செல்லுங்கள்!' என்கிற போட்டியில் 'பி.ஜி.பி. இசக்கி' என்கிற பேர்ல நான்தான் அதிக பாய்ன்ட் எடுத்து தேர்வு செய்யப்பட்டிருந்தேன். 'கல்கி' ஆபீஸ்ல இந்த இரண்டு பேர்ல எழுதுற வாசகர் ஒரே நபர்தான்னு அப்பத்தான் சந்தேகம் நிவர்த்தியாச்சு. 'கல்கி' நடத்திய போட்டியில் ஜெயிச்சுக் கிடைச்ச சிங்கப்பூர் போற வாய்ப்பால், எனக்கும் என் மனைவிக்கும் இன்ப அதிர்ச்சி.



✱ இசக்கி - குடும்பத்துடன்...

அந்த சிங்கப்பூர் டூர் நெறைய தடங்கல்களுக்கு அப்பால், 1995-ல்தான் போய் வர நேர்ந்தது. அந்தப் பயண அனுபவங்கள் நான் எழுதி, 'கல்கி'யில் தொடர்ந்து இரண்டு வாரம் கட்டுரைகளாக வெளியாயின. 10.09.1995 'கல்கி' இதழ் அட்டையில் ஒரு விமானத்தை வரைஞ்சு, அந்த விமானத்தில் நானும் என் மனைவியும் சிங்கப்பூர் போகிற மாதிரி ஃபோட்டோ வெச்சு லே-அவுட் பண்ணியிருந்தாங்க. 'கல்கி' அட்டையில், எங்க ரெண்டு பேரோட ஃபோட்டோ பிரசுரமானது எங்களுக்கு இன்னமும் மீள முடியாத இன்ப அதிர்ச்சி!" எனக் கூறுகிறார் அம்பாசமுத்திரம் பாண்டியன் கிராம வங்கியில் பணியாற்றி வரும் நெல்லை குரலோன் என்கிற பி.ஜி.பி.இசக்கி!


திருநெல்வேலி மாவட்ட ஸ்பெஷல்

"உங்க மனைவி எதுக்கு அந்தப் பிச்சைக்காரானைத் திட்டுறாங்க?''

''அவன் என் மனைவிகிட்டே சாம்பார் எப்படி நல்லா பண்றதுன்னு சொன்னானாம்.''



சாம்பார் டிப்ஸ்!



"ஆஃபிஸ்ல தூங்கற உங்களை எழுப்ப, தனியா ஒரு ஆள் போடணும் போலிருக்கே!''

''அதெல்லாம் வேண்டாம் ஸார்... ஒரு அலாரம் டைம் பீஸ் வாங்கிக் கொடுங்க போதும்...''

"அந்த ஆள் ரொம்ப முன் ஜாக்கிரதைப் பேர்வழி.''

''நிஜமாவா?''

''ஆமாம். கல்யாணத்துக்குப் போனா ஒரு கால் செருப்பை மட்டும்தான் கழட்டி வைப்பாரு.''

- வி.சாரதி டேச்சு





கவிதை

பாடம்

‘வறுமை இருட்டிலும்
என்னால் பிரகாசிக்க முடியும்’
என்றது மின்னல்.
‘சபாஷ்! உன் தன்னம்பிக்கைக்கு
பாராட்டுக்கள்’ என்று
கைதட்டியது இடி!

-பி.ஜானகி

காத்திருப்பு

கடற்கரையில் அமர்ந்திருந்தேன்
காற்றின் கைகோர்த்தபடி...
காற்றுக்கும் எனக்குமிடையே
இருக்கையிட்டு அமர்ந்திருந்தது
என்னைப் பார்த்தபடி...
உன் காதல்!

- எஸ்.கல்யாணி

பொதுப்பணி

ஆளில்லா அடுக்குமாடி குடியிருப்பும்கூட
வெள்ளைப் பூச்சில் பளிச்சிடுகிறது...
தேர்தல்!

- மு.சுந்தர்

நிராசை

விற்காமல்
வெடித்தன
பலூன்காரனின்
ஆசைகள்

- ராசை.கண்மணி ராசா

காலனி!

சொற்களை உதிர்க்கும் உதடுகள்

கார்மேகங்களினூடே
விரையும் மழையையொத்தபடி
பிறிதொன்றைக் குறித்த
சிந்தனையேதுமில்லாமல் உதிர்க்கின்றன
உனது உதடுகள்
சொற்சுமைகளை...
பாதிப்பேதும் நிகழாவண்ணம்
மூடி ஒளித்து வைக்கப் பழகிக்கொண்டேன்
உன் மீதான என் நேயத்தை...
குஞ்சுகளை காக்கும்
தாய்ப்பறவையென.

-ச. கோபிநாத்

அப்போது தெரிவான் கடவுள்

நீரையும் நெருப்பையும்
இருளையும் வெளிச்சத்தையும்
வாழ்தளத்து இரகசியங்களையும்
நீரினுள் மூழ்கியவனின்
நினைப்புக் கணக்காய்...
புறவெளி ஓட்டத்தில்
வெற்றுப் பார்வையோடு
உள்வாங்கி
பெருமனதுடன்
இயல்பாக்கி இருந்து பாரேன்
இயலும் வரையில்...

- மலை ரத்தினசாமி

கதையை மாத்துங்கோ

'அதோ
நிலாவில்
ஒரு பாட்டி வடை சுடுகிறாள்'
நிலவிலும் பெண்களுக்கு
சமையல்தானா?

- இரா.சரவணன்

என் காதலிகூட



'விண்ணைத் தாண்டி வரு
இருக்கிறார் கௌதம் வாசுதேவ்
இருக்கும் கௌதமுடன் ஒரு ச

காதலனும் காதலியும் ஒன்
என்கிற, தொன்றுதொட்டு வரு
எப்படி வந்தது?

''உங்கள் கேள்வியிலேயே
கதாநாயகன், தன்னைப் பிரதிப
களை ஒன்று சேர வைக்கிறா
நடக்கவில்லை; ஆக, காதலை
நிஜ வாழ்க்கையிலும் இருக்கு
அழுத்தமானது என்ற கருத்தை

சிம்பு போல ஒரு இளை
ரொம்ப ரிஸ்க்தானே...?

''ஆமாம்; நாங்கள் ரொம்பவே
சரியான க்ளைமாக்ஸ் என்பதில்
படத்தைத் தயாரித்தோம்; நாங்க
களும்கூட. அதனாலே படம் ஓட
தான். படத்தின் க்ளைமாக்ஸ் ப
குப் பிடிக்கவில்லை; ஆனாலுட
கிறது.

தென் மாவட்டங்களில்
அவர்களாகவே வெட்டிவிடுகி

''படத்தை வெட்டவில்லை
போன்ற உணர்வு ரசிகர்களுக்குத்
என்று கேள்விப்பட்டோம்; அ
நகர்ப்புறங்களில் அந்தப் பிரச்

படத்தின் பிரதிபலிப்பு எப்

''என் அப்பா என்னை வெ
படத்துல த்ரிஷா சொல்லற ட
ஆச்சரியமாகச் சொல்லும் கா
களையே பார்த்துக் கொள்கிற

சிம்புவை இந்தக் கதையில்
இருந்தது உண்மையா?

ன்னா ஸார்..!

படத்தின் வெற்றியால் மிகவும் மகிழ்ச்சியில்
தெலுங்கிலும் படம் ஹிட். ஜாலி மூடில்

று அல்லது ஒன்றாக மரணத்தைத் தழுவுவது
ா மரபை உடைக்கும் துணிச்சல் உங்களுக்கு

இருக்கு. என் படத்தில் சினிமா டைரக்டரான
படி தான் எடுக்கும் படத்தின் முடிவில் காதலர்
ால், அவனுடைய நிஜ வாழ்க்கையில் அது
த்தவரையில் சினிமாவுக்கான அவன் முடிவு,
று நிச்சயமில்லை. நிறைவேறாத காதல்தான்
ம் சொல்லிச் செல்கிறது.''

ஹீரோவுக்கு இம்மாதிரியான க்ளைமாக்ஸ்

ச்சோம்; ஆனாலும் இதுதான்
ாக இருந்தோம். நாங்கள்தான்
ள் படத்தின் விநியோகஸ்தர்
என்றால் நஷ்டம் எங்களுக்குத்
நப் பிடித்திருக்கிறது; சிலருக்
லாருக்கும் படம் பிடித்திருக்

“என் அப்பா என்னை வெறுக்கறதைவிட நீ என்னை வெறுக்கறது பெட்டர்!”

தியேட்டர்களில் க்ளைமேக்ஸ் காட்சிகளை
ளாமே?

டத்தில் சிம்புவும், த்ரிஷாவும் ஒன்று சேர்வது
றும். அத்துடன் படத்தை நிறுத்தி விடுகிறார்கள்
செய்யாதீங்க!'' என்று சொல்லி இருக்கிறோம்;
ல்லை.''

இருக்கு?

தைவிட நீ என்னை வெறுக்கறது பெட்டர்ன்னு
கைத்தான் என் காதலிகூட சொன்னா சார்!- என்று
கள் அதிகம். ஆக, ரசிகர்கள் படத்தில் தங்
் இருக்கிறது'' என்கிறார்கள்.

ாவா நடிக்க வைக்க முதல்ல கொஞ்சம் தயக்கம்



''ஆமாம்! ஆனால், படத்தைத் தயாரித்துள்ள என் நண்பர்களுக்கு சிம்பு மேல ரொம்பவே நம்பிக்கை இருந்தது. ஆனால், ஒரு டைரக்டராக, எனக்கு கேமரா முன்னால தேவைப்பட்டதை அப்படியே நடிப்புல கொடுத்தார் சிம்பு.

இதே படத்தைத் தெலுங்கில் எடுத்திருக்கீங்க; அதிலே காதலர்கள் இணையறா மாதிரி க்ளைமேக்ஸ் வெச்சிருக்கீங்களே! ஏன் இந்த முரண்பாடு?

''தமிழில் நானும், என் நண்பர்களும்தான் புரொடியூசர்ஸ். ஆனால், தெலுங்கில்; புரொடியூசர் வேறு ஒருவர். சந்தோஷமான முடிவைத்தான் தெலுங்கு ஆடியன்ஸ் ஏற்றுக் கொள்வார்கள் என்று அவர் கண்டிப்பாகச் சொல்லிட்டாரு. அவருடைய கருத்துக்கும் நான் முக்கியத்துவம் கொடுக்கணுமில்லையா?''

நீங்க ரொம்ப டென்ஷன் பார்ட்டியா?

''ஸ்கிரிப்ட் எழுதி, ஷூட் பண்ணிப் படத்தை முடிக்கிறவரை ரொம்ப தைரியமாய் இருப்பேன்; படம் முடிந்து ரிலீஸ் ஆகிறவரைக்கும் உள்ளூர ரொம்ப உதறலாகத்தான் இருக்கும். ரிலீசாகி, ரிப்போர்ட் வரும்வரை, கொஞ்ச நாள் யார் கிட்டேயும் பேசாம, தனிமையில் டென்ஷனோட இருப்பேன்.''

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

- கௌதம் வாசுதேவ் மேனன்

23

அஜயன் பாலா


பகல் மீன்கள்



காதல் விபரீதமானது. புத்தன் பித்தனாவான், பித்தன் புத்தனாவான். எத்தனையோ சாம்ராஜ்யங்களை எத்தனையோ மாவீரர்களை மனப்பித்துப் பிடித்து வீழச் செய்த காதல் முன் சூர்யா எம் மாத்திரம்?

சூர்யாவின் மனது தடுமாறியது. விரல்கள் பதட்டத்தில் நடுங்கியது. இத்தனைக்கும் தேன்மொழி அப்படி ஒன்றும் பெரிதாகச் செய்துவிடவில்லை. அவனது அழைப்பை எடுக்கவில்லை. இரண்டு முறையும் துண்டித்தாள் அவ்வளவுதான். நேற்று வரை தன் மேல் அபரிமிதமான காதலில் மயங்கிக் கிடந்தவள், இப்படித் துண்டிக்க வாய்ப்பே இல்லை. அப்படியே அது தன்னைவிட முக்கியமான தருணமானாலும் குறுஞ்செய்தியாவது அனுப்புவாள். அதுதான் அவன் கணக்கு. ஆனால், அந்தக் கணக்கும் கவிழ்ந்தது. பத்து நிமிடம் ஆகியும் அவள் அப்படி எதுவும் அனுப்பவில்லை என்பதுதான் அவனது மன ஜுரத்துக்கு மூல காரணம். பிறகு அவன் மீண்டும் அழைத்தபோது, 'நீங்கள் அழைத்த எண் தற்போது உபயோகத்தில் இல்லை,' 'சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டுள்ளது' யாரோ ஒருபெண் குரல் வழி அறிவிப்புத் தர, அதுதான் சூர்யாவின் மனதுக்குள் முதல்முறையாகப் பயப் பந்துகளை உருட்டி விட்டது. ஏன் எதற்கு அவள் அப்படிச் செய்யவேண்டும்... மனத்தில் ஆயிரம் சில்வண்டுகள் பறந்தன. காதை அடைத்துக்கொண்டான். ஒருவேளை பேட்டரி சார்ஜ் தீர்ந்து போயிருக்கலாம். மனம் புது விடை ஒன்றைக் கண்டுபிடித்த திருப்தியில் ஆசுவாசப்பட்டது.

இச்சமயத்தில் உடனே அருணாச்சலத்துக்கு ஃபோன் செய்ய, அவர் சொன்ன பதில்தான் அவனைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டது. அலுவலக வேலையாக ஒரு விழாவுக்கு



வினோத்துடன்! வினோத்... யார் அந்த வினோத்? ரயில் ஒன்று அலறிக்கொண்டே மண்டைக்குள் ஓடியது.

கோபம், ஆற்றாமை, வெறி... இப்படி பெயர் தெரியாத எதுவோ ஒன்று அவனது மனத்தைப் பாடாய்ப் படுத்தத் துவங்கியது. அவளே சொல்லியிருக்கிறாள், தனக்கும்

அந்த கம்பெனிக்கும் ஏழாம் பொருத்தம் என்று. அப்பா பலமுறை தன்னைப் பொறுப்பேற்கச் சொல்லி வற்புறுத்தியும் தட்டிக் கழித்துவிட்டதாகச் சொன்னாளே... இன்று திடீரென்று எங்கிருந்து வந்தது அக்கறை...? தாங்க முடியவில்லை. மனம் முழுக்கக் கேள்விகள் குடைந்தன.

'அணுஅணுவாகச் சாக முடிவெடுத்த பின் காதல் சரியான வழிதான்.' பழுக்கக் காய்ச்சிய கம்பியாக அறிவுமதியின் புகழ்மிக்க வரிகள் உள்ளத்தை ஊடுருவியது. அவசரமாக ஆங்கிலப் பத்திரிக்கைகளைப் புரட்டினான். மந்திரி வருவதாகச் சொன்னாரே... யோசித்தபடி இன்றைய நிகழ்ச்சிகளின் மீது அவன் கண்கள் பிசாசாக அலைந்தன.

தேன்மொழி மட்டும் நிம்மதியாகவா இருந்தாள். அவள் மனதும் புயலில் சிக்கிய சருகாகச் சுழன்றது. தான் ஃபோனை முழுவதுமாக சுவிட்ச் ஆஃப் செய்திருக்கக் கூடதோ என அவளது மனம் பதைத்தது. வினோத், யார் யாரையோ அழைத்துவந்து அவளுக்குக் கைகுலுக்க வைத்தான். மேலுக்குச் சிரித்தாளே தவிர, அடிக்கடி தன் கைபேசியைப் பார்த்துக்கொண்டாள். சுவிட்ச் ஆஃப் பண்ணியது தவறோ என்று கூட எண்ணினாள். அவமானத்தால் இந் நேரம் தடுமாறுவான். படட்டும். ஒரு பெண்ணை ஏமாற்றித் தந்திரமாக அவளை மயங்க வைத்த பாவத்துக்கான தண்டனையை அவன் அனுபவித்தே தீரவேண்டும். இன்னும் இன்னும் அவன் எக்கச்சக்கமாக அணுஅணுவாகச் சித்ரவதைகளை அனுபவிக்க வேண்டும்.

வினோத், அவசரமாக அவளை உசுப்பினான். அப்போதுதான் தன்னைச் சுற்றிக் கைதட்டல்கள் கேட்பதையும் அனைவரும் எழுந்து நிற்பதையும் அவள் உணர்ந்தாள். வாசலில் வெடிச்சத்தம் கேட்டது - தொடர்ந்து 'வாழ்க' கோஷம் வேறு. கூட்டமாகத் தெரிந்த பல தலைகளுக்கு நடுவே அந்த மந்திரியின் முகம் வருவதையும், உடன் அவருக்குப் பின்னால் அவரது உதவியாளர்கள் ஓடிவருவதையும் பார்த்தாள் .

''வினோத் எனக்கு மயக்கமாக வருகிறது. போகலாமா?''

''மேடம் ப்ச்... என்ன இது... இப்பதான் மினிஸ்டர் வந்துருக்காரு. அப்புறம் கம்பெனிக்குக் கெட்ட பெயராயிடும். கொஞ்சம் வெய்ட் பண்ணுங்க. அவங்க பரிசு கொடுப்பாங்க... அதை வாங்கிக்கிட்டுப் போயிடலாம்.''

''இல்லை ... வினோத் என்னால .... நான் உங்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்.''

''என்ன மேடம் ?''

இவனிடம் சூர்யாவைப் பற்றிச் சொல்லலாமா..? மனத்தில் ஓடிக்கொண்டிருக்கும்போதே வாய் அவன் பெயரை உச்சரித்தது.

''சூர்யான்னு ஒருத்தர் ...''

கைதட்டலும் விசிலும் பறந்



''நம்ம தலைவருக்கு விளையாட்டு ஆர்வம் ஜாஸ்தியா இருக்கும்போதே நினைச்சேன்...''

''என்ன விஷயம்?''

''கட்சி பணத்திலும் ஏகமாப் புகுந்து விளையாடிட்டார்!''

- வைகை ஆறுமுகம்

தது
''மேடம் நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னே என் காதுல விழலை...நீங்க ஆளே சரியில்லை. முகம் மாறியிருக்கு. இருங்க நான் அவங்கக்கிட்டச் சொல்லி, சீக்கிரம் நம்மை அனுப்பச் சொல்லிட்டு வர்றேன்.''

வினோத் எழுந்துகொண்டான் ..

அந்தச்சமயம் பார்த்து அவர்கள் அருகே வந்த டை கட்டிய ஒருவரைப் பார்த்ததும் வினோத்தின் முகம் ஆச்சர்யத்தில் மலர்ந்தது.

அமைச்சரின் நேரடி உதவியாளர் நாச்சிமுத்து. அருணாச்சலத்தின் நண்பர்.

''ஸார், எப்படி இருக்கிங்க. நீங்க பிஸியா இருப்பீங்க. தொந்தரவு பண்ணக் கூடாது, நிகழ்ச்சி முடியட்டும் அப்புறமா பார்க்கலாம்னுதான் நான் வரலை.''

''என்ன, அருணாச்சலம் வரலையா?''

''இல்லை ஸார். இவங்கதான் வந்துருக்காங்க... அவங்க டாட்டர் தேன்மொழி... உங்களுக்குக் தெரிஞ்சுருக்குமே...''

''ம்ம்... கேள்விப்பட்டிருக்கேன் பார்த்ததில்லை...''

தேன்மொழி குழப்பத்தில் இருந்ததால் அவரை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை...''

அந்த அமைச்சரின் உதவியாளர் வினோத்தைத் தனியாக அழைத்துப் போய் ''அந்த காலேஜ் பிரச்னை என்ன ஆச்சு?''

''ஒண்ணும் ஆகலை ஸார் அது அப்படியே சால்வ் ஆயிடுச்சு. நீங்கதான் பக்காவா முடிச்சுத் தந்துட்டீங்களே.''

''அப்பப்பா... அருணாச்சலம் ஃபோன்ல அன்னிக்குக் குழந்தை மாதிரி தேம்பித் தேம்பி அழுதார். அந்தப் பையனோட அம்மா ரொம்ப ஸ்ட்ராங்கா ஸ்டேஷன்ல பேசியிருக்காங்க. பையன் செத்துட்டான்கிற ஆத்திரம்... அப்புறம் காலேஜ் பசங்க வேற.. அவங்க கூடச் சேர்ந்துகிட்டு ஸ்டேஷன்ல ஸார் பொண்ணை அரெஸ்ட் பண்ணச் சொல்லிக் கேட்டுருக்காங்க. நான் எஸ்.பி.கிட்ட ஸ்ட்ரிக்டா சொல்லிட்டேன். அவங்களை சமாளிச்சு அனுப்பி வையுங்கன்னு. ரொம்ப சத்தம் போட்டா ஒருநாள் உள்ள உக்கார வையுங்க சரியாயிடும்னு சொல்லியிருந்தேன். ஓர்க் அவுட் ஆயிருக்கும் போல... நானும் மறந்துட்டேன். அருணாச்சலம் ஸார்தான் ஃபோன் பண்ணி ப்ராப்ளம் சால்வ் ஆயிடுச்சின்னு சொன்னார்.''

உதவியாளர் இப்போது தொலைவில் கூட்டத்தில் அமர்ந்திருக்கும் தேன்மொழியைப் பார்த்து ...

''ஆள் இப்ப நார்மலாயிட்டாங்களா?''

நார்மலாயிட்டாங்க ஸார். பழைய விஷயம் எதுவுமே அவங்களுக்கு ஞாபகம் இல்லை. முதல் மூணுமாசம்தான் பொண்ணைக் கூட்டிக்கிட்டு குமரகம் கோட்



கும்பாபிஷேகமே கிடையாது!

அம்பாசமுத்திரத்துக்கு அருகே இருக்கிறது கீழப்பாவூர் லக்ஷ்மி நரசிம்மர் கோயில். இரண்யனை வதம் பண்ணும் கோலத்தில் காட்சித் தருகிறார் நரசிம்மர். இந்தக் கோயிலுக்கு இதுவரை கும்பாபிஷேகமே நடந்தது கிடையாது.

- என்.கோமதி, நெல்லை

டயம்னு அலைஞ்சார். அப்புறம் ஏதோ ஆசிரமத்துல மூலிகை வைத்தியத்துக் காக ... மெடிட்டேஷன்... யோகா... ப்ராக் டீஸ் பண்ணித் திரும்பப் பழைய ஆளா மாத்திட்டாங்க.''

''பாவம்... ஒரு பையன் சாவுக்கு, தான் காரணமாயிட்டோமேங்கிற அதிர்ச்சியில அப்படி ஆயிருக்கலாம். இதற்குள் ஒருவர் ஓடிவந்து, ''ஸார் மினிஸ்டர் பேசப் போறார்'' என்று சொன்னதும் அவர் மேடை நோக்கி ஓட, வினோத் மீண்டும் தேன்மொழி அருகே வந்தான். மொத்தக் கூட்டமும் அமைச்சரின் பேச்சுக் காகக் கைதட்டிக் கொண்டிருந்தது.



"நான் சொன்னா ஒருத்தனை அடிப்பியா?"
"அடிக்கறேன் மேடம்."

தேன்மொழி இன்னமும் பதட்டத்தில் இருந்தாள். வாசலை அடிக்கடித் திரும்பிப் பார்த்தாள். வினோத் அவள் அருகே வந்து அமர்ந்ததும் ''வினோத், ஐ நீட் யுவர் ஹெல்ப் கேன் யூ ஃபேவர் மீ.''

''சொல்லுங்க மேடம் ''

கைதட்டல் தொடர்ந்து கொண்டிருந்தது.

''நான் சொன்னா ஒருத்தனை அடிப்பியா?''

''அடிக்கறேன் மேடம்.''

அமைச்சரின் பேச்சு அரங்கை அதிர வைத்துக்கொண்டிருந்தது.

''அவன் இன்னும் கொஞ்ச நேரத்துல இங்க வருவான்.''

''சொல்லுங்க மேடம்.''

''அதுக்குமுன்னாடி நீ என் கையைக் கொஞ்சம் பிடி .''

''மேடம், '' வினோத் சுற்றும் முற்றும் பார்த்தான் .

''என் கையைப் பிடி...''

வினோத்தின் கை அவள் மணிக்கட்டைக் கவ்வியது

''இப்ப எடு ...''

வினோத் கையை எடுத்தான் .

''அவன் வந்ததும் நான் சொல்வேன். அப்ப நீ என்னை இப்படிப் பிடிக்கணும்.''

சூர்யா, தன் மொபைலில் சற்றுமுன் தேன்மொழி அனுப்பிய மெசேஜை மூன்றாவது தடவையாகப் படித்தான். விழா நடக்கும் இடத்தைக் கூறி, அவனை உடனே புறப்பட்டு வரும்படி அனுப்பியிருந்தாள். மனத்துக்கு ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. இவ்வளவு நேரமாகத் தன்னை அரித்த அந்த இனம்புரியாத உணர்வு நீங்கி, மகிழ்ச்சி வெளிச்சம் மனதுக்குள் மடை திறந்த வெள்ளமாய்ப் பாய்வதை உணர்ந்தான் . மனம் கசப்பாக இருந்தது. உள்ளுணர்வு போகவேண்டாம் என எச்சரித்தது. ஆனால் காதல் அவனைப் பிடரியில் உந்தித் தள்ளியது

பைக்கை உதைத்தான் .

அமைச்சரின் உரை முடிந்து இறுதி நிகழ்ச்சியாகப் பரிசுகள் வழங்கப்பட, அந்தக் கூட்டத்தின் புதிய நவீன அழகுக்குக் காரணமான குனோபல் இன்டீரியர்ஸின் டைரக்டர் செல்வி தேன்மொழியின் பெயரும் அழைக்கப்பட்டது. தேன்மொழி பரிசை வாங்க மேடைக்கு நடந்தாள்.

(மீன்கள் துள்ளும்...)


காதில் விழுந்தவை

சரத்குமார் இப்போது தி.மு.க.வோடு மிக நெருக்கமாக இருக்கிறார். தனி இயக்கம் நடத்துவதில் உள்ள சிரமங்களையும் சவால்களையும் அனுபவ பூர்வமாக உணர்ந்து கொண்ட சரத், தி.மு.க. ராஜ்யசபா சீட்டு கொடுக்கும்பட்சத்தில் தன் இயக்கத்தை அதனோடு இணைப்பதற்கும் தயங்க மாட்டார் என்று அவருடைய நெருங்கிய நண்பர்கள் சொல்கிறார்கள். விருதுநகரில் காமராஜருக்கு மணி மண்டபம் கட்டி முடிப்பதில் தற்போது மிகுந்த ஆர்வம் காட்டி வரும் சரத், விரைவில் அதிரடியான ஆங்கில அரசியல் பத்திரிகை துவங்கவிருக்கிறார் என்றும் சொல்கிறார்கள்.

ஸ்டாலின் பற்றி பத்திரிகையாளர் சோலை எழுதிய புத்தக வெளியீட்டு விழாவை கலைஞர் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்புச் செய்தது. அந்தச் சமயத்தில் நித்யானந்தா தொடர்பான காட்சிகளை ஒளிபரப்பி மக்களை திசை திருப்பி விட்டது சன் குழுமம் என்பது உடன்பிறப்புகளின் வருத்தம். இது யதேச்சையாக நடந்ததா அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்டதா என்ற குழப்பத்தில் இருக்கிறார்கள் கழக உடன்பிறப்புகள்.

- சஞ்சயன்

தி.மு.க.வில் சரத்!



ஸ்டாலின் பிறந்த நாளின் போது, சென்னையிலும் மற்றும் பல மாவட்டங்களிலும், அன்னதானம், ரத்த தானம், பொதுக்கூட்டங்கள் என்று தி.மு.க. பரபரப்பாக இயங்க, மதுரை நகரம் மட்டும் எந்தவித ஆரவாரமுமின்றி அமைதியாக இருந்ததை மக்கள் கவனிக்கத் தவறவில்லை. வாழ்த்துச் சொல்லும் போஸ்டர், பேனர் எதுவும் கிடையாது. ஸ்டாலினின் உடன்பிறப்பு கோபித்துக் கொள்வாரோ என்ற பயத்தில் கழக உடன்பிறப்புகள் அமைதியாகி விட்டார்கள். தன் தனி சாம்ராஜ்யத்தில் யாருடைய தலையீட்டையும் விரும்பாத அழகிரி, சமீபத்தில் தமது இலாகா தொடர்பான தொழிற்சாலை ஒன்றுக்கு, மதுரை அருகில் அடிக்கல் நாட்டினார். அந்த விழாவுக்கான அரசாங்க விளம்பரத்தில் பிரதமர், சோனியா படங்கள் இடம்பெறாதது குறித்து மதுரை காங்கிரஸ்காரர்கள் கடும் எரிச்சலில் இருக்கிறார்கள்.

வண்ணத்தூரிகை

எத்தனையோ பயந்த சுபாவமுடைய வர்களை நீங்கள் பார்த்திருக்கலாம். ஆனால் கைலாசமய்யரைப் பார்க்காதவரையில் சரி யான பயந்த சுபாவத்தை நீங்கள் பார்த்ததாகச் சொல்ல முடியாது. பயப்படுகிற விஷயத்தில் அவரை மிஞ்சக் கூடியவர் யாருமில்லை. ஒருசமயம், அவர் வீட்டு வாசலில் தேசியத் தொண்டர்கள் 'அச்சமில்லை; அச்சமில்லை' என்று பாடிக்கொண்டு போனார்கள். அந்தப் பயங்கரமான சத்தத்தைக் கேட்டுக் கைலாச மய்யர் பயந்து கட்டிலிலிருந்து கிழே விழுந்து காலை ஒடித்துக்கொண்டார்!

மற்றொரு சமயம், அவர் தமது மேஜை யில் உட்கார்ந்து எழுதப் போனவர், திடீரென்று 'பாம்பு' என்று அலறிப் புடைத் துக்கொண்டு எழுந்திருந்தார். எல்லாரும் கம்பும் கையுமாய் ஓடி வந்து 'எங்கே பாம்பு?' என்று கேட்டார்கள். 'அதோ! மேஜை மேலே!' என் றார். மேஜைமேல் பாம் பைக் காணோம். அப் புறம் கிட்ட நெருங்கிப் பார்த்தபோது, மேஜை மேல் கிடந்த ஒரு துண்டுக் காகிதத்தில் 'பாம்பு' என்று எழுதி இருந்தது தெரிந்தது. இந்த வேலை செய் தது யார் என்று விசாரித் ததில், கைலாசமய்யருடைய ஏழு வயதுப் பையன் மணி விஷமத்துக்காக அப்படி எழுதி வைத்திருந்தான் என்று வெளியாயிற்று. பாம்பை அடிக்க வேலைக்காரன் கொண்டு வந்த தடியைக் கைலாசமய்யர் பிடுங்கிக் கொண்டு பையனை அடிக்கப் போனார். நல்ல வேளை யாக, அந்தச் சமயம் ஜோஷனாரா பீகம் வந்து குறுக்கிட்டதால் பையன் பிழைத் தான்!

ஜோஷனாரா பீகம் என்றதும், சில பேருக்குச் சுவாரஸ்யம் தட்டலாம். ஏதோ இந்தக் கதையில் நவாபுகளும் அவர்களு டைய அந்தப்புரத்து அழகிகளும் வரப் போகிறார்கள் என்று நினைக்கலாம். அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை. கைலாசமய் யருக்கு வடக்கத்தி ஹிந்துஸ்தானி



சங்கீதத்தில் அதிகப் பிரியம். 'பயமில்லாமல் கேட்கக் கூடியது ஹிந்துஸ்தானி சங்கீதந் தான்' என்பார். ரேடியோவில் அவர் அடிக்கடி லக்னௌ ஜோஷனாரா பீகத்தின் சங்கீதத் தைக் கேட்பதுண்டு. ஆனால், வீட்டிலே மற்றவர்களுக்கு - முக்கியமாக அவருடைய மனைவிக்கு - ஜோஷனாரா பீகமும், அவளுடைய சங்கீதமும் கொஞ் சமும் பிடிப்பதில்லை.

எனவே, அவர்கள் வீட்டில் வளர்த்த ஒரு கறுப்புப் பூனைக்கு 'ஜோஷனாரா பீகம்' என்று பெயரிட்டிருந்தார்கள். இந்த ஜோஷ னாரா பீகத்தைக் கண்டால் கைலாசமய் யருக்குக் குலை நடுக்கம்! அச்சமயம் அந்தப் பூனை வந்ததினால்தான் அவருடைய பையன் மண்டை உடையாமல் தப்பிப் பிழைத்தான்.


-'கைலாசமய்யர் காபரா'
கதையிலிருந்து



அமரர் கல்கி

அந்தப் பூனையின் பெயர்... ஜோஷனாரா பீகம்!

நவதிருப்பதி உலா!



மாவட்ட ஸ்பெஷல்

தாமிரபரணி நதிக்கரையின் இருபுறங் களிலுமாக அமைந்துள்ளன, நவதிருப்பதி திருக்கோயில்கள்.

● திருநெல்வேலி - திருச்செந்தூர் சாலையில், 28 கிலோமீட்டர் தூரத்தில் தாமிரபரணியின் வடகரையில் அமைந்துள் ளது ஸ்ரீவைகுண்டம். மூலவர் வைகுன் டநாதன் நின்ற திருக்கோலம். கிழக்குப் பார்த்த திருமுகம். தாயார் வைகுண்டவல்லி. இத்தலத்தில் சூரிய ஒளி ஆண்டுக்கு இருமுறை (சித்திரை 6, ஐப்பசி 6 ஆகிய தினங்களில்), பெருமாளின் பாதக் கமலங் களில் காலையில் படர்கிறது. இதற்காகக் கொடிமரம் சற்றுத் தெற்கே விலகி இருக் கிறது!

● ஸ்ரீவைகுண்டத்திலிருந்து மூன்று கி.மீ. தூரத்தில் நத்தம் எனும் குக்கிராமம். மூலவர் விஜயாசனப்பெருமாள். ஆதிசேஷன் குடைப்பிடிக்க வீற்றிருக்கும் திருக்கோலம். தாயார் வரகுணவல்லி. ஆசன மந்திரம் ஜெபித்து இறைவன் காட்சியளித்த இடம். வீற்றிருக்கும் திருக்கோலத்தில் பரமபத சேவை தந்தருளும் தலம்.


● ஸ்ரீவரகுணமங்கை (நத்தம்)யிலிருந்து கிழக்கே அரை கிலோ மீட்டர் தூரத்தில்

● நம்மாழ்வார்



● பொதுவாக பெருமாளைத் தரிசிக்க பக்தர்கள்தான், திருக்கோயிலை நாடிச் செல்வார்கள். நம்மாழ்வார் பாடும் பாசுரங் களைக் கேட்பதற்காகவே, அவரிருக்கும் இடம் நாடிப் பெருமாள் வந்து தங்கிச் சென்றதாக ஐதீகம். அதனாலே இந்தத் தலம், ஆழ்வார்திருநகரி ஆயிற்று.

● மூலவர் ஆதிநாதன் பொலிந்து நின்ற பிரான். நின்ற திருக்கோலம்.



உள்ளது திருப்புளியங்குடி. இங்கே பெருமாள் ஆதிசேஷன் மீது பன்னிரண்டடி நீளத்தில் பள்ளிகொண்டுள்ளார். கருவறையைச் சுற்றி வரும்போது ஜன்னல் வழியே, சயனப் பெருமாளின் திருப்பாதங்களைத் தரிசிக்கலாம்.

● திருப்புளியங்குடியிலிருந்து அதே சாலையில், ஐந்து கி.மீ. தூரத்தில் உள்ளது பெருங்குளம். மூலவர் வேங்கடவாணன், நின்ற திருக்கோலம். தாயார் அலர்மேலு மங்கை. பெருமாளுக்கு உற்ற நேரத்தில்



✱ பொலிந்து நின்ற பிரான்...
(ஆழ்வார்திருநகரி)

உதவி புரிந்த கருடனை, உத்சவமூர்த்தியுடன் ஏக ஆசனம் அளித்துக் கௌரவித்த திருத்தலம்.

● பெருங்குளத்துக்குக் கிழக்கே அரை கி.மீ. தூரத்தில் உள்ள மங்கலக்குறிச்சி சென்று, வடகால் என்ற வாய்க்கால் கரை வழியாக மேற்கு நோக்கி நான்கு கி.மீ. தூரம் பயணித்தால் திருத்தொலைவில்லி மங்கலம். காட்டுக் கோயில், வீடுகளே

கிழக்குப் பார்த்த திருமுக மண்டலம். தாயார் ஆதிநாதவல்லி, குருகூர்வல்லித் தாயார்களுக்கு தனித்தனி சன்னிதி.

● நம்மாழ்வாருக்குத் தனி சன்னதி. அதன் மேல் மாடத்தில் உள்ளது உறங்காப் புளி. புளியமரம். கோயிலின் தல விருட்சம். இந்தப் புளியமரத்தின் இலைகள் இரவிலும் மூடிக் கொள்வதில்லை. அதனால் உறங்காப் புளி ஆயிற்று.

● நம்மாழ்வார் பதினான்கு ஆண்டுகள் தவம் செய்த புளியமரம். ஏறத்தாழ ஐந்தாயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது எனச் சொல்லப்படுகிறது.

● நாதமுனிகளுக்கு நம்மாழ்வார், நாலாயிர திவ்யப்பிரபந்தம் அருளிய தலம்.

உறங்காப்புளி புளியமரத்தின் இலைகளில் 36 திவ்யதேசத்து எம்பெருமான்களும் அமர்ந்து, நம்மாழ்வார் பாசுரங்கள் கேட்ட பெருமை கொண்டது இத்திருத்தலம்.



* தென்திருப்பேரை பெருமாள்

வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமிகள் கல்கியில் எழுதிய 'கண்ணனைத் தேடி' தொடர் அதே தலைப்பில் புத்தகமாக வெளிவந்துள்ளது. நவதிருப்பதிகள் பற்றிய விரிவான கட்டுரைகள் அதில் உள்ளன. கல்கி அலுவலகத்திலும், உள்ளூர் ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும். விலை ரூ.55.00

கிடையாது. அருகருகே இரு கோயில்கள். ஒன்று இரட்டைத் திருப்தி தெற்கு, மற்றொன்று இரட்டைத் திருப்பதி வடக்கு. பூமிக்கு அதிபதியான இந்திரனுக்கும், நீருக்கு அதிபதியான வருணனுக்கும், காற்றுக்கு அதிபதியான வாயு பகவானுக்கும் திருமால் காட்சியளித்த திருத்தலம்.



● தாமிரபரணி தென்கரையில் திருநெல்வேலியிலிருந்து 35 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது தென்திருப்பேரை. மூலவர் மகர நெடுங்குழைக்காதர். வீற்றிருக்கும் திருக்கோலம். உற்சவர் நிகரில் முகில் வண்ணன். தாயார் குழைக்காதநாச்சியார், திருப்பேரை நாச்சியார்.

● தென்திருப்பேரையிலிருந்து ஆழ்வார் திருநகரி வரும் வழியில், 3 கிலோ மீட்டர் சென்று தெற்கே போகும் ஒரு கிளைப் பாதையில் 2 கிலோ மீட்டர் பயணித்தால் வருவது திருக்கோளூர் திருத்தலம். மதுர கவியாழ்வார் அவதாரத்தலம். நிலையான செல்வம் இருக்குமிடத்தில் அதர்மம் ஆட்சி புரியும். தர்மம் இருக்காது. எனவே செல்வம் ஒருவரிடம் நிலையாக இல்லாமல் சுழன்றுகொண்டே இருக்க வேண்டும் என்பது பெருமாள் கிருபை. தர்மம் நிரந்தரமாகவே இங்கு தங்கிப் பெருமாளை வழிபட்டு வருவதாக ஐதீகம்.

● நவதிருப்பதியில் இறுதியாக ஒன்பதாமிடத்தில் அமைந்துள்ளது ஆழ்வார் திருநகரி. திருநெல்வேலி திருச்செந்தூர் சாலையில் உள்ளது. நம்மாழ்வார் அவதரித்த திருத்தலம். இத்திருத்தலத்தின் உள்ளே நம்மாழ்வாருக்கென தனி சன்னிதி உள்ளது. அவ்வளவு ஏன்? நம்மாழ்வார் அமர்ந்ததால், அந்தப் புளியமரம் திருப்புளியாழ்வார் என்று பெயர் பெற்றது தனிச்சிறப்பு!

வாசகர் யோசனை:

வரதராஜன்,
வீரவநல்லூர்

போன்ல சம்பந்தம் பேசாதீங்க!



''ஹலோ நான் சம்பந்தம் பேசுறேங்க.''

''யாருங்க நீங்க? சம்பந்தம் எல்லாம் போன்லயா பேசுறது.நேரா வீட்டுக்கு வாங்க, பேசலாம்.''

- எஸ்.பொருநை பாலு





''உங்க படத்துல ஹீரோ பக்கா கிராமத்தானா? படத்தோட டைட்டில் என்ன?''

''கோமணன்.''

- சாயம் வெ.ராஜாராமன்

''பக்கத்து வீட்டு மாமியார் - மருமகளுக்கு 'விட்டுக் கொடுக்கற' மனப்பான்மை அதிகமா, எப்படி?''

''சண்டைன்னு வந்திட்டா, 'மானம், மரியாதை, குடும்ப கௌரவம்' எல்லாத்தையும் விட்டுக் கொடுத்திடுவாங்க!''

- வெ.சீதாராமன்



இத்தாலி ஒருங்கிணைவது தொடர்பான போர்கள், இரண்டு உலக மகா யுத்தங்கள் - இப்படிச் சுற்றிலும் ரத்த ஆறு ஓடிய பொழுதிலும் கூட, பல நூற்றாண்டு களாக, இவை எதிலும் மாட்டிக் கொள்ளாத ஒரு நாடு சான் மெரினோ! ஐரோப்பாவின் பெரும்பகுதியைத் தன் வசம் கொண்டு வந்த நெப்போலியன் கூட இந்த நாட்டைத் தொடவில்லை.

உலகின் மிகச்சிறிய குடியரசு சான் மெரினோதான். ஆனால் 1968-ல் நாயுரு சுதந்திரம் பெற்றபோது தனக்குத் தான் அந்தப் பெருமை என்று கூறிக்கொண்டது. எனினும் நாயுருவைச் சுற்றியுள்ள, அது உரிமை கொண்டாடும் நீர்ப்பரப்பின் பகுதியையும் சேர்த்துக் கணக்கிட்டால் நாயுருவின் அறிவிப்பு செல்லாது என்பது விளக்கப்பட்டது.


மிகச் சிறிய குடியரசு மட்டுமல்ல, மிகத் தொன்மையான குடியரசு என்ற பெருமையும் சான் மெரினோவுக்குத்தான். இன்னொரு வியப்பு. அது ஒரு தேசத்துக்குள் அமைந்த மற்றொரு தேசம். ஆம், இத்தாலிக்குள் அமைந்திருப்பது வாடிகன் மட்டுமல்ல, சான் மெரினோவும்தான்.

சான் மெரினோவின் பெயர்க் காரணம் கிறித்தவ மதம் தொடர்பானது. கிறித்தவ மத போதகர் தூய மரினஸ் (அதாவது சான் மெரினோ) தன்னுடைய நண்பர் லியோவுடன் குரோவேசியாவிலிருந்து புறப் பட்டாராம். வழியில் உள்ள நகரங்களில் கட்டடக் கலைஞராகப் பணிபுரிந்தார். கூடவே அவர் கிறிஸ்தவ மதப் பிரச்சாரமும் செய்தார். அதில் அவருக்குப் பலத்த எதிர்ப்பு எழுந்து, அவரைக் கொல்லவும் முயற்சிகள் நடந்தன.

அவற்றிலிருந்து தப்பி, மாண்டே டிடானோ எனும் இடத்தை அடைந்தார். அங்கு தன் கைப்பட சிறு மாதா கோவில் ஒன்றை எழுப்பினார். அந்தப் பகுதிதான் இன்றைய சான் மெரினோ. கல்வெட்டுகளின் செய்திப்படி, கி.பி. 301, செப்டம்பர் 3ம் தேதி சான் மெரினோ குடியரசு உருவாகியுள்ளது. ஆவணப்படிப் பதிவு செய்யப்பட்டுள்ள குடியரசுகளில் மிகமிக மூத்தது சான் மெரினோதான்.

தான் இறக்கும்போது தூய மரினஸ் 'உங்களை அந்த இரு மனிதர்களிடமிருந்தும் விடுவிக்கிறேன்' என்று கூறினாராம். இதற்குப் பல அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன. என்றாலும் பலரும் 'போப் மற்றும் சக்ரவர்த்தி' ஆகிய இருவரைத்தான் அவர் குறிப்பிட்டதாகக் கருதுகின்றனர்.

வாமன தேசங்கள் 10



"நாங்க சண்டையே

அதாவது சான் மெரினோவின் சுதந்திரத் தன்மையை நிலைநிறுத்த முயற்சித்தார் தூய மரினஸ் என்கின்றனர்.

1600-ல் அரசியலமைப்புச் சட்டம் சான் மெரினோவில் உருவானது. உலகின் (தற்போதும் வழக்கில் உள்ள) மிகப் பழமையான அரசியலமைப்புச் சட்டம் இதுதான்.

தொடக்கத்திலிருந்தே சான் மெரினோ மக்கள் தனித்தன்மை கொண்டவர்களாக விளங்கி வந்தனர். உலகின் சிறுசிறு நாடுகளெல்லாம் கூட அடிமைச் சங்கிலியை அணிந்துகொண்ட போதும் சான் மெரினோ தன் சுதந்திரத்தை இழக்கவில்லை.

இதற்கு இரண்டு முக்கியக் காரணங்கள். ஒன்று எளிதில் அடைந்துவிட முடியாத ஒரு பகுதி அது. மற்றொன்று, அங்கு நிலவிய வறுமை. 1797-ல் நெப்போலியனின் ராணுவம் சான் மெரினோவை நோக்கி முன்னேறிய போது 'போச்சு சுதந்திரம்' என்று அனைவரும் கையை உதற, விந்தை நடந்தது. நெப்போலியன் இந்த நாட்டை ஆக்கிரமிக்

ஜி.எஸ்.எஸ்.

சான்மெரினோ



உலகத்தில் நடந்த எந்தச் சண்டைகளாலும் பாதிக்கப்படாத நாடு சான்மெரினோ.

போட மாட்டோம்!”


காதது மட்டுமல்ல, அந்தக் குடியரசின் சுதந்திரத்தை தான் வருங்காலத்திலும் பாதுகாப்பதாக உறுதி மொழி கொடுத்தார். இதற்கு முக்கியக் காரணம் அன்டோனியோ ஒனோஃப்ரி என்பவர்கள் உண்டு. ராணுவ அதிகாரியான இவர் நெப்போலியனின் அன்பைப் பெற்றவர்.


சான் மெரினோ ஒரு கடுகு போன்ற நாடு. சுமார் அறுபது சதுர கிலோமீட்டர் தான் மொத்தப் பரப்பு. மக்கள் தொகை சுமார் முப்பதாயிரம். ஐரோப்பியக் குழு உறுப்பினர்களிலேயே மிக மிகச்சிறிய நாடு சான் மெரினோ. நாலாபுறமும் இத்தாலியால் சூழப்பட்ட ஒரு நாடு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இத்தாலி ஒருங்கிணைக்கப்பட்டபோது, ஒருங்கிணைப்புக்கு ஆதரவாக இருந்ததால் மரணதண்டனை விதிக்கப்பட்ட பலருக்கும் சான் மெரினோ தஞ்சம் அளித்தது. இதன் காரணமாக, காலப்போக்கில் ஒருங்கிணைந்த இத்தாலி, சான் மெரினோவை ஆக்ரமிக்காமல் அதை சுதந்திரமாகவே இருக்கவிட்டது.

இப்படிப் பலவிதங்களிலும் தன் தனித்தன்மையை சான் மெரினோ தக்க வைத்துக்கொள்ள, இதில் மயங்கிய அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன், 'சான் மெரினோவின் கௌரவ குடிமகன்' என்ற பட்டத்தை அந்த நாடு அளித்தபோது அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். 'குடியரசு நெறிமுறைகளை அழகாகப் பின்பற்றி வரும் நாடு' என்று சான்றிதழும் கொடுத்தார்.

ஆனால் சான் மெரினோ சிக்கலில் ஆழ்ந்த சில சரித்திரப் பதிவுகளும் உண்டு.


ஆஸ்திரியாவிற்கு எதிராக போரை அறிவித்தது இத்தாலி. (அதாவது முதலாம் உலகப் போரின் தொடக்கக் கட்டம்). தனக்குள்ளே இருக்கும் சான் மெரினோ தனக்கு ஆதரவளிக்கும் என





இத்தாலி எதிர்பார்க்க, தான் நடுநிலைமை வகிக்கப் போவதாகக் கூறிவிட்டது சான் மெரினோ. இத்தாலிக்குக் கோபம். கூடவே சந்தேகம். 'ஒருவேளை ஆஸ்திரிய நாட்டு உளவாளிக்கு சான் மெரினோ தஞ்சம் அளிக்கிறதோ?'.

எப்படியாவது இத்தாலியை சமாதானப்படுத்த வேண்டும் என்று கருதிய



சான் மெரினோ தனது ராணுவத்தைச் சேர்ந்த சிலரை 'தனிப்பட்ட முறையில்' இத்தாலியின் சார்பில் போரிட அனுமதித்தது. தவிர, செஞ்சிலுவை மருத்துவமனை ஒன்றையும் இத்தாலிக்காக எழுப்பித் தந்தது சான் மெரினோ. (இதைத் தொடர்ந்து சான் மெரினோவிடம் தான் கொண்ட தூதரகத் தொடர்பை ஆஸ்திரியா அறுத்துக்கொண்டது வேறு விஷயம்).

* சான் மெரினோவில் பிறந்த யாராக இருந்தாலும், அவர்கள் இறுதிவரை (வேறு நாட்டுக்குக் குடிபெயர்ந்தாலும்) சான் மெரினோ குடிமகன்தான். அவர்கள் தாங்கள் பிறந்த நாட்டின் தேர்தலில் தாராளமாக வாக்களிக்கலாம்.
* சான் மெரினோவில் பாராளுமன்ற ஜனநாயகம் ஏற்கப்பட்டுள்ளது.
* சான் மெரினோ என்று கலிஃபோர்னியாவில் ஒரு சிறிய பணக்காரப் பகுதி உண்டு. அதோடு இதை இங்கு குழப்பிக்கொள்ள வேண்டாம்.
* மிகச் சிறிய நாடுகள் பட்டியலில் சான் மெரினோவுக்கு 13வது இடம். மிகக் குறைவான மக்கள்தொகை கொண்ட நாடுகளில் இதற்கு 24வது இடம்.
* நாணயம் - யூரோ. முக்கிய மதம் - கிறிஸ்தவம். முக்கியமொழி - இத்தாலிய மொழி.
* சான் மெரினோவின் தபால் தலைகள் மிகவும் பிரபலமானவை. கலைநயமிக்கவை. நாட்டில் எந்த சிறு நிகழ்ச்சி என்றாலும் அதற்காகத் தபால்தலை வெளியிடும் வழக்கம் உண்டு. பாஸ்போர்ட்டை இங்குள்ள சுற்றுலாத் தகவல் மையத்தில் கொடுத்தால், அழகான ஒரு தபால்தலையை ஒட்டித் தருவார்கள்.
* சான் மெரினோவின் தலைநகரை நினைவு கொள்வது மிக மிக எளிது. அதன் பெயரும் சான் மெரினோதான். மலை உச்சியில் அமைந்துள்ள நகரம். சுற்றிலும் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. தலைநகரில் எழுப்பப்பட்டுள்ள மூன்று கோபுரங்களின் மூலம், நாடு முழுவதும் கண்காணிக்கலாம்.
* சான் மெரினோவில் விமான நிலையம் கிடையாது. ரயில்வே நிலையமும் கிடையாது. இங்கு வந்ததற்கு அடையாளமாக பலரும் வாங்கிச் செல்வது ஆயுதங்களை! கடைகளில் பலவிதமான வாள்களிலிருந்து துப்பாக்கிகள் வரை விற்கிறார்கள்.
* உலகிலேயே மிக நீண்ட சராசரி ஆயுள் கொண்ட மனிதர்களைக் கொண்ட நாடு தான்தான் என்கிறது சான் மெரினோ. இங்கு வசிப்பவர்களின் சராசரி ஆயுள் எண்பத்திரண்டு வருடங்கள்.

(அடுத்த வாரம் - இருண்ட கண்டத்தின் மிகச் சிறிய நாடு)



''தன்னடக்கத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் ஸ்டாலின், 'புத்தகம் நல்ல முறையில் அமைந்திருக்கிறது. மக்கள் கருத்து என்னவென்று பார்க்க வேண்டும்' என்றுதான் சொன்னார்.''

ஸ்டாலினையொத்த தலைவர்கள் பலர் தமிழகத்தில் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து ஸ்டாலின் எப்படி மாறுபடுகிறார்?

''இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் நான் ஸ்டாலினை முதலில் சந்தித்தேன். அவர் அடிப்படையில் தொண்டராகவும், களத்தில் போராளியாகவும் இருந்து, பலமுறை சிறை சென்று அரசியலில் வளர்ந்தவர். அவரையொத்த தலைவர்கள் தந்தையின் நிழலில் இருப்பவர்கள். ஸ்டாலின் இன்றைக்கும் கையையும், பையையும் சுத்தமாக வைத்துள்ளார். எவரையும் எடுத்தெறிந்து பேசுவதில்லை. அரசியலிலும், தனி வாழ்க்கையிலும் அவர் பெறும் அனுபவங்கள், அவரை மேலும் மேலும் பக்குவப்படுத்துகின்றன. முப்பது ஆண்டுகளாக அவரது செயல்பாடுகளைக் கூர்ந்து கவனித்துவருகிறேன். பெருமைமிகு தந்தைக்கு மகனாக இருப்பது ஒரு விஸிட்டிங் கார்டே தவிர, எந்தத் துறையாக இருப்பினும் ஒருவரது உழைப்பும், சாதனைகளும் மட்டுமே முன்னேற்றத்தைக்

"ஸ்டாலினுக்கு நான் உதவவில்லை!"

'ஸ்டாலின் - மூத்த பத்திரிகையாளர் பார்வையில்' என்ற தமது நூலை, பத்திரிகையாளர்களைக் கொண்டே வெளியிட்ட சோலையைச் சந்தித்தோம்.

''படித்-'தேன்''' என்று ஒரே வார்த்தையில் புத்தகத்தைப் பற்றிய தம் கருத்தைச் சொல்லியிருக்கிறார் முதல்வர். **ஸ்டாலினின் ரீஆக்ஷன் என்ன?**

கொண்டுவரும். அரசியலில் ஸ்டாலின் இதற்கு நல்ல உதாரணம்.''

இந்தப் புத்தகத்தை எழுதியதன் மூலம், நடுநிலையாளர்கள் மத்தியில் ஸ்டாலினின் இமேஜை உயர்த்த உதவியிருக்கிறீர்களா?''

''ஒருவரது இமேஜை தனிப்பட்டவர்களாலோ, பத்திரிகைகளாலோ, விளம்பரங்களாலோ உருவாக்க முடியாது. இன்னமும் சொல்லப் போனால், தனக்கு கட்-அவுட் பேனர் வைக்கக்கூடாது என்பதில் ஸ்டாலின் தற்போது மிக உறுதியாக இருக்கிறார். செயற்கையாக உருவாக்கப்படும் புகழ்ச் சித்திரம் (இமேஜ்) மழைக் காலத்துக் காளான்; நிலைத்து நிற்காது. தொண்டு, பணிவு, உழைப்பு, பக்குவம் ஆகியவையே இமேஜை நிலைத்து நிற்கவைக்கும்; வளர்க்கும். அத்தகைய இமேஜ் ஸ்டாலினுக்கு உருவாகி வருவதை நடுநிலையாளர்கள் உணர்ந்திருக்கிறார்கள். நான் புத்தகம் எழுதி இதற்கு உதவ வேண்டியதில்லை.''

மற்றவர்களிடமிருந்து ஸ்டாலினை முன்னிறுத்தும் ஒரு யுக்திதானே இந்த நூல்?

''என்னுடைய நூல் என்பது ஓராண்டு கால உழைப்பு. 'ஏன் அதை எழுதினேன்?' என்பதற்கு விரிவான விளக்கம் முன்னுரையில் சொல்லியிருக்கிறேன். பள்ளிப் பருவத்திலிருந்தே அரசியலில் ஆர்வம் காட்டி, ஸ்டாலின் எப்படி வளர்ந்து வந்திருக்கிறார் என்பதைப் பட்டியலிட்டிருக்கிறேன். எனவே ஸ்டாலினைப் பெருமைப்படுத்துவதோ, பிறரைக் குறைத்து மதிப்பிடுவதோ எனது வேலை அல்ல. மிசா சிறையில் அவரோடு இருந்தவர்கள் மிக விரைவாக எம்.எல்.ஏ, எம்.பி., அமைச்சர் என்று ஆன நிலையில் எம்.எல்.ஏ., ஆவதற்கு ஸ்டாலின் பதின்மூன்று ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாகி விட்டது. எம்.எல்.ஏ ஆன பிறகும் உடனடியாக அமைச்சர் ஆக முடியவில்லை. அதிலும் காத்திருப்புத்தான். கட்சியில் பார்த்தால் பல்லாண்டு உழைப்புக்குப் பிறகே இளைஞரணி செயலாளர். கலைஞர் மகன் என்பதால் நியாயமாக அவருக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளும் தள்ளிக்கொண்டே போயின. இன்று தி.மு.க.வில் ஸ்டா



"ஸ்டாலின், தவறு செய்தால் சுட்டிக்காட்டுவேன்!"



* புத்தக வெளியீட்டு விழா...

"ஸ்டாலின், கலைஞரின் மகன் என்பதால் நியாயமாக அவருக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்புகள் தள்ளிப் போயின!"

லினுக்கு நிகரான, அவரது வயதையொத்த தலைவர்கள் யாரும் இல்லை. அவருக்கு ஈடாக இனி யாரும் உருவாகப்போவதில்லை.''

ஸ்டாலினைப் பற்றி புத்தகம் எழுதியதன் மூலம், உங்கள் நடுநிலைமை கேள்விக்குறியாக்கப்பட்டிருக்கிறதா?

''புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய 'இந்து' ராம் 'நடுநிலையோடு உண்மைகளை எழுதும் துணிச்சல் கொண்ட இடதுசாரிக் கண்ணோட்டம் உடைய பத்திரிகையாளர்' என்று என்னைப் பாராட்டினார். எனவே அந்த விமர்சனத்தைத் தக்கவைத்துக்கொள்வேன். எதிர்காலத்தில் ஸ்டாலின் தவறு செய்தால் சுட்டிக்காட்டத் தயங்க மாட்டேன். ஆனால் அப்படியொரு வாய்ப்பை ஸ்டாலின் கொடுக்க மாட்டார்.''

துணை முதல்வர் பொறுப்புக்கு வந்தவுடன் இப்படி ஒரு நூலை, நடுநிலைப் பத்திரிகையாளர்களைக்கொண்டு வெளியிடச் செய்ததன் நோக்கம் என்ன? இதனால் நடுநிலைமை பாதிக்கப்படாதா?

''புத்தகத்தை எழுதிய நான் தி.மு.க.வைச் சேர்ந்தவன் அல்ல. வெளியிட்ட விகடன் குழுமம் தேசிய இயக்கப் பின்னணியைக் கொண்டது. அரசியல் களத்துக்குத் தகுதியான ஒரு நல்ல மனிதரை, தமிழகம் அடையாளம் காட்டியுள்ளதை, பேனா உலகம் அங்கீகரித்துள்ளது என்பதைத்தான் அன்று கலந்துகொண்ட பத்திரிகை உலக ஜாம்பவான்களின் வாழ்த்துகள் சொல்கின்றன. தங்களுடைய நடுநிலைத் தன்மையை அடகு வைத்துவிட்டு விழாவில் கலந்துகொள்ளவேண்டிய அவசியம் அவர்களில் யாருக்கும் இல்லை.''

- ப்ரியன்

படங்கள்: **ராஜன்**

தனரேகைப் பெருமாள்!

மேலத் திருவேங்கடநாத புரம், கீழத் திருவேங்கடநாதபுரம் என்று அருகருகே இரண்டு ஊர்கள். மேலத்திருவேங்கடநாத புரத்தில் மூலவர் திருவேங்கட முடையார். உற்சவர் சீனிவாசப் பெருமாள். தாயார் அலர்மேல் மங்கை. தலவிருட்சம் மூங்கில். வடவேங்கடத்துக்கு நேர்ந்து கொண்டு, அவ்வேண்டுதலை இங்கு நிறைவேற்றலாம். ஆனால், இங்கு நேர்ந்து கொண்டால், அதனை இந்தக் கோயிலில்தான் நிறைவேற்றவேண்டும்!



அடுத்துள்ளது கீழத்திருவேங்கடநாதபுரம், ஸ்ரீவரத ராஜப் பெருமாள் கோயில்! இங்கு வீற்றிருக்கும் பெருமாள் மற்றும் தேவியர்கள் பிருகுமுனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவர்களாம்!

- மூலவர் வரதராஜப் பெருமாள். வலது புறம் ஸ்ரீதேவி. இடதுபுறம் பூதேவி. மூலவர் வரதராஜப் பெருமாளின் வலக்கரங்களில் ஒன்றில் சக்கரம். மற்றொன்றில் அபயஹஸ்த தனரேகை! இடக்கரங் களில் ஒன்றில் சங்கு, மற்றொன்றில் அபயஹஸ்த தனரேகை!

பொதுவாகவே பெருமாள், படியளக்கும் பெரு மாள் ஆவார். சாதாரண பெருமாளையே பக்தர்கள் சும்மா விட்டு வைக்கமாட்டார்கள். அதிலும் இவர், தனரேகைப் பெருமாள் ஆயிற்றே! பக்தர்கள் தாங்கள் கொண்டு வந்திருக்கும் ஒரு நாணயத்தைப் பட்டரிடம் கொடுத்து, பெருமாளின் தனரேகைத் திருக்கரத்தில் வைத்து எடுத்து, வாங்கிச் செல்கிறார்கள். அதனை வீட்டில் பணப்பெட்டியில் வைத்துப் பாதுகாத்தால் பணம் வந்து குவியும் என்பது அவர்களின் நம்பிக்கை!

வாசகர் யோசனை:
வி.ஆர்.கிருஷ்ணன், சென்னை



"எங்களுக்குத் தமிழ்நாட்டில் இருக்க விருப்பமில்லை. கேரளாவோடு மறுபடியும் இணைத்துவிடுங்கள்'' என்கிற குரல் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. நெல்லை மாவட்டத்தின் மேற்கு எல்லையில் இருக்கும் செங்கோட்டையில். இந்த ஊரில் பிறந்தவர்கள்தான் பிரபல கணிதமேதை எஸ்.எஸ்.பிள்ளையும், சுதந்திர போராட்டத் தியாகி வாஞ்சிநாதனும்! சுதந்திரத்துக்கு முன்பு செங்கோட்டை கேரளாவோடு இணைந்திருந்த பகுதி. அப்போதே அதற்குப் பேரூராட்சி அந்தஸ்து. "இப்போதும் பேரூராட்சி அந்தஸ்தோடுதான் இருக்கு. ஆனால் சாதாரண ஊராட்சி அளவுக்குத்தான் அரசாங்கம் எங்களை நடத்துது'' என்கிறார் ஜனார்த்தனன். தமிழாசிரியர் பணியாற்றி ஓய்வு பெற்றவர், மொழி பெயர்ப்பாளர் இவர்.

''சி.சுப்ரமணியம் நிதியமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டோட மலபார் பகுதியை கேரளாவுக்குக் கொடுத்துவிட்டு, கேரளாவோட இருந்த செங்கோட்டையைத் தமிழ்நாட்டோட இணைச்சுட்டாங்க. இது நடந்தது 1956-ல். திருவாங்கூர் சமஸ்தானத்தோட இணைஞ்சிருந்தப்ப, ஸ்ரீமூலம் திருநாள் என்கிற மன்னர், 'செங்கோட்டை பூமி செழிப்பா இருந்தாதான் கேரளா செழிப்பா இருக்கும்'னு சொல்வார். ஏன்னா, செங்கோட்டை அப்போ கேரளாவோட நெற்களஞ்சியம். செங்கோட்டைப் பகுதியில இருக்கிற இருபது குளங்களும் நிறைஞ்சுடுச்சுன்னா, இருபதாவது குளத்திலிருக்கற புளியமரத்தோட கிளையைத் தண்ணீர் தொடுமாம். செங்கோட்டையிலிருந்து யாராவது திருவாங்கூர் போனா, 'தண்ணி கிளையைத் தொட்டுச்சா'ன்னு கேட்பாராம் மன்னர். அவ்வளவு செழிப்பா இருந்த பாரம்பரிய பூமி இது'' என்று நிறுத்தியவரிடம் ''இப்ப என்ன குறை?'' என்று கேட்டால், ''செங்கோட்டைக்கு வர இருந்த அத்



* ஜனார்த்தனன்

"கேரளாவோடு



தனைத் திட்டங்களையும் வேற ஊருக் குக் கொண்டு போயிடுறாங்க. மதுரை யாதவர் காலேஜ் செங்கோட்டைக்குத்தான் வந்திருக்கணும். சுதந்திரத்துக்கு முன்னாடியே இங்க ஃபாரஸ்ட் ஆஃபீஸ் இருந்துச்சு. அதைத் தூக்கிட்டாங்க. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தோட டிப்போ இருந் துச்சு. இப்போ அதுவும் இல்லை. இங்க இருக்கற அரசாங்க ட்ரஷரி இயங்குதா இல்லையான்னே தெரியலை. பேருக்குத் தான் இது பேரூராட்சி. ஆனா... அதுக்கான வளர்ச்சித் திட்டங் கள் ஒண்ணுமில்லை.

சாலைகள் கண்றாவியாக் கிடக்கு. உலக கணிதமேதை எஸ்.எஸ்.பிள்ளை, சுதந்திரப் போராட்டத் தியாகி வாஞ்சிநாதன் வீடு எல்லாம் பாழடைஞ்சுக் கிடக்கு. இருபது குளங்களும் தூர் வாராமக் கிடக்கு. இப்படியே விட்டா, விவசாயத்துக்குப் பயன்படாமப் போயிடும் போல இருக்கு. இதெல்லாம் கேரளாவோடு நாங்க இணைஞ்சிருந்தப்ப ரொம்ப நல்லாவே இருந்துச்சு'' என்கிறார் ஜனார்த்தனன். பல குரல்கள் அவரை வழி மொழிய, அதிருப்தி யில் அதிர்கிறது செங்கோட்டை!

போறோம்!”

வாசகர் யோசனை: **மணி, தென்காசி**



தொடரும் அவமானம்

இந்திய ஹாக்கி அணிக்கு அது முதல் ஆட்டம். 2010 உலகக்கோப்பையின் முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான மோதல். மைதானத்தில் நெருக்கமான கூட்டம். ஞாயிற்றுகிழமை என்பதால் உலகக்கோப்பையால் விளைந்த ஆர்வத்தில் அந்த ஆட்டத்தைப் பலகோடி ரசிகர்கள் தொலைக்காட்சி வழியே பார்த்தார்கள். அதிசயமாக இந்திய அணி அன்று மிக அற்புதமாக ஆடி, 4-1 என்கிற கணக்கில் பாகிஸ்தானை வென்றது. 'அடடா, இந்திய ஹாக்கியை இத்தனை நாளாகத் தவறவிட்டோமே' என்றுதான் அந்த ஆட்டத்தைப் பார்த்த அத்தனை பேரும் எண்ணி வருந்தினார்கள். நாள் போகப்போக சாயம் வெளுக்க ஆரம்பித்தது.

இந்தியாவுடனான ஆட்டத்துக்கு முன்னால் இங்கிலாந்து அணி 14 கோல்களை அடித்தது. அதில் எட்டு பேர் பங்களிப்பு இருந்தது. ஒருவரையே நம்பி ஒரு அணி இருக்கக்கூடாது என்பதற்கான பாடம் அது. எந்தவொரு ஆஸ்திரேலிய வீரரும் 100 மீட்டர் தூரத்தை 10.10 நொடியில் கடந்துவிடுவார். அதே வேகம் மைதானத்திலும் எதிரொலிக்கும். ஒவ்வொரு ஐரோப்பிய அணியும் குறைந்தது ஐம்பது பேர் கொண்ட வீரர் குழுவை எப்போதும் தயாராக வைத்திருக்கிறது. ஒருவர் மோசம் என்றால் அவரைப் பின்னால் தள்ளப் பலர் தயார். இப்படித்தான் மற்ற அணிகள் ஆட்டத்தில் ஓர் ஒழுங்கைக் கடைப்பிடிக்கிறார்கள்.

இந்திய அணியின் தரம் பெரிய அணிகளுடன் ஆடும்போதுதான் வெட்டவெளிச்சமானது. 'என்ன இவ்வளவு மோசமாக ஆடுகிறார்கள்?'. என்று ரசிகர்கள் முகம் சுளித்தார்கள். பெனால்டி கார்னர் விற்பன்னர் சந்தீப் சிங் மிகவும் சொதப்பினார். அவருடைய தடுப்பாட்டமும் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை. இந்திய அணியில் குழு பலம் என்பதே இல்லை. இந்திய ஹாக்கியின் பொற்காலத்தில் இந்தியாவில் தரமான இருபத்தைந்து அணிகள் இருந்தன.

ஆனால் இன்று எட்டு அணிகள்கூடத் தேறுவது கடினம். காயம் ஏற்பட்ட தீபக் தக்கூரை மூன்று ஆட்டங்களில் ஆடவைத்தார் பயிற்சியாளர் பிராசா. அதைப் பேட்டியில் வெளிப்படையாகவும் சொன்னார். ஆறுபேர் கொண்ட இந்தியத் தேர்வுக்குழு தீபக் தக்கூரை எப்படி உலகப் போட்டிக்குத் தேர்வு செய்தது? 'இந்திய அணியில் யாருக்கும், யாரிடமும் நட்பே இல்லை. சென்ற வருடம் நடந்த அஷ்லான் ஷா போட்டியின் போது ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவேயில்லை. இப்படி இருந்தால் மைதானத்தில் எப்படி இவர்கள் ஒற்றுமையாக விளையாட முடியும்' என்று கேட்கிறார் இந்திய அணியின் முன்னாள் கேப்டன் பர்கத் சிங்.

சென்ற உலகக்கோப்பையை வென்ற ஜெர்மனி இந்தத் தடவை பல புதிய வீரர்களைக் களத்தில் இறக்கியிருக்கிறது. ஆனால் கடந்த நான்கு வருடங்களில், இந்திய அணியில் நுழைந்த ஒரே புதிய வீரர் திவாகர் ராம் மட்டுமே. 1980-ல் ஒலிம்பிக்கில் தங்கம் வாங்கியதுதான் இந்திய அணியின் பெரிய சாதனை. கடந்த முப்பது வருடங்களாகவே தடுமாறிக்கொண்டிருக்கிறது. இப்போது இந்திய அணி உலகத் தரவரிசைப்பட்டியலில் பன்னிரண்டாவது இடத்தில் உள்ளது. அதை முன்னேற்றிக் காட்டுவார் என்கிற நம்பிக்கையில் ஸ்பெயினைச் சேர்ந்த பிராசா இந்திய அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். ஆனால் அவரிடம் ஒரு தலைவனுக்குரிய குணங்கள் இல்லாதது இப்போது தெரிகிறது.

2006 ஏசியன் கேம்ஸில் நாம் ஒரு பதக்கம்கூட பெறவில்லை. பீஜிங் ஒலிம்பிக்ஸிலோ தகுதிகூடப் பெற இல்லை. இந்த உலகக்கோப்பையில் நிலைமை இன்னும் படுமோசம். அடுத்ததாக, காமன்வெல்த் மற்றும் ஏசியன் கேம்ஸ் என இரு முக்கியப் போட்டிகள் உள்ளன. அங்கேயும் இதே கூச்சல்கள், குழப்பங்கள் இருக்குமா என்று தெரியவில்லை. ஆனால் ஒரு தேசம் முப்பது ஆண்டுகளாகத் தன் தேசிய விளையாட்டில் பின்தங்கியிருப்பது பெருத்த அவமானம். ○



• ச.ந.கண்ணன் •

த்ரீ இன் ஒன்... ட்ரீ!



வேம்பு, அத்தி, வில்வ மரம் என மூன்றும் ஓரிடத்தில் ஒரே மரத்தில் இருப்பதுதான் பெரிய அதிசயம். தென் திருப்புவனம் அருள்மிகு புஷ்பவனநாதர் சமேத அருள்தரும் பூந்தேவி அம்பாள் திருக்கோயிலில்தான் இந்த அதிசய மரம் உள்ளது. கீழ் பாகத்தில் வேம்பு. வேப்ப இலைகள் கொத்துக் கொத்தாக. நடுவில் அத்தி. அங்கே அத்தி இலைகள். முக்கால் பகுதிக்கு மேலே வில்வம். வில்வக் கிளைகளும், இலைகளும், கனிகளுமாகக் குலுங்கிக் கொண்டிருக்கிறது இந்த மரம். ஸோ, த்ரீ இன் ஒன்... ட்ரீ!

வாசகர் யோசனை:

எஸ்.பாமாவதி, நெல்லை.



நியூஸ் ஏந்தி பவன்!



பாளையங்கோட்டை, க்ளாரிந்தா ஆலய வளாகத்தில் ஆஷ் துரை கல்லறை அருகே உள்ளது ஹென்றி பவர் கல்லறை. இவர்தான் பைபிளை மூல மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர்.

வாசகர் யோசனை:

பி.ஜி.பி. இசக்கி, நெல்லை

ஹென்றி பவர் கல்லறை!

கப்பல் வடிவ தியேட்டர்!



நெல்லை மாநகரின் பழைமையான சென்ட்ரல் தியேட்டர் அறுபது வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்டது. வெளியே இருந்து பார்க்கும்போது கப்பல் வடிவத்தில் காட்சி தருகிறது. முதல் வகுப்பு மட்டும் சூப்பர் சோபா வசதி. முதல் வகுப்பு கீழேயும், இதர வகுப்புகள் மேலேயும் கொண்ட வித்தியாசமான அமைப்பு. குழந்தைகளுடன் சினிமா பார்க்க வருவோர் சிரமப்பட வேண்டியதில்லை. ஆடும் தொட்டில்கள் ஆங்காங்கு உண்டு. இத்தனைப் பழைமையான இந்தத் தியேட்டர் கடந்த இரண்டு மாதங்களாக இயங்கவில்லை.

வாசகர் யோசனை: **சண்முக சுப்ரமணியம், ஆதம்பாககம்.**

பள்ளிவாசல் மாதிரியே முகப்புத் தோற்றம். இந்துக் கோயில் மாதிரியே இருக்கு. இரண்டே இரண்டு உயர்ந்த மினார் தவிர வேறு ஏதும் அடையாளம் இல்லே, வெளியே இருந்து பார்க்கும் போது. முகையதீன் ஆண்டவர் வந்து தொழுத இடத்தைப் பள்ளிவாசலாகக் கட்டியிருக்காங்க. அவர் காலடித் தடம் கூட இங்கே இருக்கு. மார்ச் மாதம் பிறை பதினேழு அன்றைக்குக் கந்தூரி. அப்ப ஒரு அரை மணி நேரம் மட்டும், முகையதீன் ஆண்டவர் காலடித் தடத்தைப் பார்க்க அனுமதி உண்டு. 1674ல் கட்டப்பட்ட விபூதி வழங்கும் பள்ளிவாசல் இது!

விபூதி பள்ளிவாசல்!

வாசகர் யோசனை: **சொ. பொன்னுசாமி, ஸ்ரீவைகுண்டம்**



அமுதநிலை அருள்பவள்!

சுதா சேஷய்யன்

ஸ்ரீ லலிதா

நான்காம் பாகம்

22

எப்போது பௌதிக ஆகாசத்தைப் பார்த்தாலும் நமக்கு ஞாபகம் வரவேண்டியது பராகாசமே. அந்தப் பராகாசத்தை எங்கே வழிபடலாம்...? தகராகாசத்திலேயே, உள்முகமாகத் திரும்பி வழிபடலாம்.

இவ்வாறு பலவிதமான ஆகாசங்களை சிருஷ்டித்து, அவற்றுள் உறைபவள் **வியத் பிரஸூ**.

முகுந்தா - மூவா முகுந்தர்க்கு இளையவளே என்று அபிராமி பட்டர் பாடியிருக்கிறாரே - அவளுக்கே **முகுந்தா** என்று ஒரு பெயர். **விஷ்ணு ரூபிணி**யாக, **கோப்த்ரீ**யாக இருக்கக்கூடியவள் என்பதனால் மட்டும் அல்ல... முக்தியைத் தரக் கூடியவள் என்பதனாலேயும் அவளுக்கு **முகுந்தா** என்று பெயர்.

முக்தி நிலயா - முக்தியைத் தனது அதிஷ்டானமாகக் கொண்டு வாசம் செய்பவள்.

மூல விக்ரஹ ரூபிணி - மூலம் என்றால் ஆதாரம். ஆதார விக்ரஹமாக இருக்கக்கூடியவள். இதற்கு என்ன அர்த்தம் என்றால், **ராஜராஜேஸ்வரித்** தாயாக இருக்கக்கூடியவள் என்று அர்த்தம்.

ராஜராஜேஸ்வரித் திருமேனிதான் உலகத்தை சிருஷ்டி செய்வதற்காக முதன் முதலில் வந்த திருமேனி. நிர்க்குணமான பிரம்மம் இருக்கும்போது, அந்த நிர்க்குணத்திலேயிருந்து கொஞ்சம் வெளியிலே வந்து, **ராஜராஜேஸ்வரி**யாக அம்பாள் உருவம் எடுத்தாள். அதிலிருந்துதான் சிருஷ்டி ஆரம்பித்தது என்பதால், அதுவே மூலவிக்ரஹம்.

விக்ரஹமே - ஸ்வரூபமே இல்லாத நிலை பிரம்மம். பிரம்மம் ஸ்வரூபத்தை எடுத்துக் கொள்கிறபோது விக்ரஹம் ஆகிறது. ஆதி ஸ்வரூபம், முதன்முதலில் உருவான விக்ரஹம் **ஸ்ரீ ராஜராஜேஸ்வரி**.

நினைக்கும் இடத்தில் இருப்பவள்

பாவக்ஞா - பாவங்களால் ஆராதிக்கப்படக்கூடியவள். எந்த **பாவ**மாக இருந்தாலும், அதனால் ப்ரீதி அடைகிறவள் அம்பிகை. **பாவ**த்தோடு ஆராதிப்பது என்றால் ஆழ்ந்த உணர்வோடு ஆராதிப்பது. பாடுகிறபோது, '**பாவ**த்தோடு பாடினார்' என்று சொல்கிறோம் அல்லவா? அந்த உள்ளார்ந்த உணர்ச்சி முக்கியம். அப்படிப் பட்ட **பாவ**த்தோடு ஆராதிக்கப்படுபவள்.

இந்தத் திருநாமத்துக்கு நிறைய **பாஷ்யம்** (விளக்கம்) இருக்கிறது. எந்த **பாவ**த்தோடு நாம் ஆராதித்தாலும் அம்பாள் அதை ஏற்றுக்கொள்ளக்கூடியவள் என்கிற அடிப்படையே பிரதானம். அம்பாள் இங்கேதான் இருக்கிறாள் என்று நினைத்தாலும் இங்கேதான் இருப்பாள். வேறு இடத்தில் இருக்கும் **பாவனை**யில் **பாவங்**களுக்கும் அதிகாரி அவளேதான்!

பவரோகக்னீ - பவரோகத்துக்கு அக்னியாக இருக்கக்கூடியவள் - பிறவிப் பிணிக்கு அக்னியாக இருந்து அதைப் போக்கடிக்கக்


ஸ்ரீ ஒப்பில்லாநாயகி
திருநெடுங்களம்

கூடியவள்

பவசக்ரப்ரவர்த்தினீ - பவ சக்ரம் என்பது, பிறப்பு - இறப்பு என மாறி மாறி நிகழும் சுழற்சியைக் குறிக்கும். இந்தச் சக்கரத்தை நடத்துவித்து, புனரபி ஜனனம், புனரபி மரணம் என்ற சுழற்சியில் நம்மைக் கிடத்துபவள். இந்த சுழற்சி இடையறாது நடந்துகொண்டே இருக்க வேண்டுமல்லவா? அதை அம்பாள்தான் நடத்துகிறாள். அதனால்தான் அபிராமி பட்டர் பாடுகிறபோது **'ததியுறு மத்தில் சுழலும் என் ஆவி'** என்று பாடினார்! மத்து தயிரைக் கடைகிறபோது, முன்னும் பின்னும் சுழன்று சுழன்று அல்லாடுகிறதே, அதைப் போல் மனிதன் பிறப்பு - இறப்புச் சுழற்சியில் சிக்கிச் சுழல்கிறான். 'அம்மா! நீதான் சுழற்றுவிக்கிறாய்!' என்கிறார் அபிராமி பட்டர்.

சந்தஸ்ஸாரா - சந்தங்களின் ஸாரமாக இருக்கக்கூடியவள். உபநிஷத்துகளின் ஸாரமாகத் திகழ்பவள்.

சாஸ்திரஸாரா - ஸர்வ சாஸ்திரங்களின் ஸாரமாக இருக்கக்கூடியவள்.

மந்த்ரஸாரா - மந்திரங்களின் சாற்றுப் பொருள் உட்கிடக்கையான, ஸாரமான அம்சம் அம்பிகையே

பொங்கு புகழ் உடையவள்

உதாரகீர்த்தி - அம்பாளுடைய கீர்த்தி, புகழ் - எவ்வளவு என்றால், ரொம்பப் பெரியது! உதாரம் என்றாலே பெரியது. அதனால்தான் உதார குணம் என்போம் - பெரிய மனது படைத்தவர்களாக இருந்தால் தானே பிறருக்குக் கொடுக்கத் தோன்றும்! அம்பிகையின் புகழ் மிகப் பெரிது! எல்லாவற்றையும் தாண்டி நிற்கிறது!

உத்தாமவைபவா - அம்பாளின் பிரபாவம், வைபவம் எவ்வளவு மேலானது. அப்படியே எழுந்து, பொங்கி, வழியக் கூடிய அளவுக்குக் கீர்த்தி, புகழ், வைபவம் படைத்தவள்!

வர்ணரூபிணீ - எல்லா வர்ணங்களின் ரூபமாகவும் இருப்பவள். வர்ணம் என்ற சொல்லுக்கு நிறைய அர்த்தங்கள். அக்ஷரங்களுக்கே வர்ணம் என்று ஒரு பெயர். **அக்ஷர ரூபிணீ**யாக அம்பாள் இருக்கிறாள். பீஜாக்ஷரங்களின் வடிவம் அவள். அக்ஷரங்களின் தொகுப்பான வார்த்தைகளுக்கும் வர்ணம் என்று பெயர். காவியங்களுக்கும் வர்ணம் என்றே பெயர். உருவங்களுக்கும் வர்ணம் என்றே பெயர். அவற்றை வகைப் பிரித்தால், அந்த வகைகளுக்கும் வர்ணம் என்றுதான் பெயர்! ஆக, அனைத்தாகவும் அம்பாளே இருக்கிறாள்.

மெய்யமுத ஊற்று

ஜன்ம ம்ருத்யுஜரா தப்த ஜன விச்ராந்தி தாயினீ - ஜனனத்தினாலேயும், மரணத்தினாலேயும், அவற்றுக்கு இடையே இருக்கக்கூடிய மூப்பினாலேயும் வாடிப் போய், அக்னியாகத் தகிக்கும் அந்த மூன்று நிலைகளினாலும் துன்புறுகிறார்களே... அவர்களுக்கு விச்ராந்தியை - நிம்மதியைத் தரக்கூடியவள் அம்பாள். பிறப்பினால் வரக்கூடிய துன்பம்; மூப்பினால் வரக்கூடிய துன்பம்; மரணத்தால் நேரக்கூடிய துன்பம் - இந்தத் துன்பங்களையெல்லாம் தீர்த்து வைத்து, இதிலிருந்து

> **"பாற்கடல் அமுதத்திலிருந்து என்ன கிடைத்துவிடப் போகிறது..?"**



வெளியே கொண்டு போய் நிம்மதியைத் தரக்கூடியவள்.

மூப்பிலும், பிறப்பு இறப்பின் சுழற்சியிலும் ஆழ்ந்து கிடக்கக்கூடிய மக்களுக்கு, அந்தச் சுழற்சியை ஏற்படுத்துபவளும் அவள்தான்; அதிலிருந்து விடுதலை அளிப்பவளும் அவள்தான்.

இதனால்தான் ஆசார்யர் பாடுகிறார்: 'பாற்கடலில் கிடைத்த அமுதத்தின் மீது இந்த தேவர்களெல்லாம் அவ்வளவு ஆசை வைத்தார்களே... அதிலிருந்து என்ன கிடைத்துவிடப் போகிறது! யௌவனம் கிடைக்கும்; மூப்பு வராது; மரணம் வராது -சரி. ஆனால், ஊழிப் பிரளய காலம் வந்தது. அப்போது, மூப்பு மரணமின்றி யௌவனமாக இருந்த தேவர்களெல்லாம் கர்வத்தோடு இருக்கிறார்கள். மற்ற படைப்புகள் அனைத்தும் போய் பரமாத்மாவிடம் ஒடுங்கின. தேவர்களுக்கு என்ன ஆயிற்று...? அமுதம் உண்ட குபேரன் என்ன ஆனான்? தனனாக (செல்வந்தனாக) இருக்கக்கூடிய குபேரன் நிதனனாக - ஒன்றுமில்லாமல் - போய்விட்டான்! மற்றவர்களை நாசப்படுத்தக்கூடிய யமன், தானே நாசத்துக்குள் வீழ்ந்து போனான்! இந்திரனோ, இல்லாமலே போய் விட்டான்! அவன் எங்கே போனான் என்றே தெரியவில்லை. இந்திராதிப் பட்டாளமே காணாமல் போய்விட்டது! அப்படி ஒரு பட்டாளம் உண்டா என்றால், இந்திரன் என்பது ஒரு பதவிக் காலம்தான். அதில் யார் அமர்கிறார்களோ அவர்கள் பதவிக் காலம் முடிந்ததும் இறங்கி வந்துவிட வேண்டியதுதான். வேறு ஒரு இந்திரன் வந்துவிடுவான். சில இந்திரர்கள் தங்கள் பதவிக்காலம் முடியும் முன்னரே பொத்தென்று கீழே விழுந்து விடுவர்! கீழேயும் முழுசாக விழாமல், மேலேயும் இல்லாமல், பண்ணிய பாவத்துக்கு ஏற்ப நட்சத்திரங்களாக இருப்பவர்களும் உண்டு! திரும்பவும் நல்லது செய்து அவர்கள் உயர வேண்டும்!

ஆக, இந்திரப் பதவி என்பது ஒரு குறியீடுதான். ஊழிப் பிரளய காலத்தில் இந்த இந்திராதிப் பட்டாளமே காணாமல் போய்விட்டது எனில், அவர்கள் பாற்கடல் அமுதம் சாப்பிட்டதிலே என்ன பிரயோஜனம்?!

ஆனால், அம்பாளுடைய அமுத தாரையை அனுபவித்து விட்டால், மூப்பு (ஜரை) இல்லை; மரணம் (ம்ருத்யு) இல்லை; பிறப்பு (ஜன்மம்) இல்லை! ''அவள் திருவடியிலேயே இருக்கக்கூடிய சிரஞ்சீவித்துவம்தான் வேண்டுமே தவிர சாதாரண பாற்கடல் அமுதம் அல்ல!'' என்கிறார் ஆதிசங்கரர்.

(வளரும்)



ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே...

இசையமைப்பாளர் பரத்வாஜ்

''எல்லோருக்குமே பிறந்த மண்ணின் பெருமையைப் பேசும்போது மனசு முழுக்க சந்தோஷப் பூக்கள் பூக்கும். நான் பிறந்த ரவணசமுத்திரம் திருநெல்வேலி மாவட்டத்துல இருக்குற ரொம்ப அழகான ஊர். சுற்றிலும் இருந்த மேற்குத் தொடர்ச்சி மலைகளின் இயற்கை அழகு, மனசைக் குளிப்பாட்டும் - குற்றாலம், ஆன்மிகம் மணக்கும் பாபநாசம்ன்னு எழிலான இடங்கள் ஏராளம். படைப்பாளிக்கு, அதிஅற்புதமான படைப்புகள் உருவாக இயற்கையின் அழகு ரொம்பவே தூண்டுதலாக இருக்கும். சிறு வயது முதலே நான் பார்த்து ரசித்த, களித்த இயற்கைக் காட்சிகள் எனக்கு இசை ஆர்வத்தையும், தமிழ் மக்களின் ரசனைக்கு ஏற்ப இசையமைக்கும் திறனையும் கொடுத்திருக்குன்னுதான் சொல்லணும்'' என்று 'ஞாபகம் வருதே ஞாபகம் வருதே' ஸ்டைலில் பேசுகிறார் இசையமைப்பாளர் பரத்வாஜ்.



''கர்நாடகச் சங்கீதத்தில் பல கீர்த்தனைகளை இயற்றிய ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், நாதஸ்வர வித்வான் காருகுறிச்சி அருணாச்சலம்... என ஜாம்பவான்கள் பிறந்த மண்ணில் நானும் பிறந்துள்ளேன் என்பது, எனது இசை வாழ்க்கைக்கு ஓர் உந்துதல்'' என்றவர் இப்போதிருக்கும் தம் ஊர் குறித்தும் பேசுகிறார்.

''ரவணசமுத்திரம், இன்றளவும் மாறவே இல்லை. வசதி வாய்ப்புகள் பல பெருகி விட்டாலும் அந்த மண்ணுக்கே உரிய நிறம், தன்மை மாறாமல் இருப்பது என்னை ரொம்பவே வியக்க வைக்கிறது. மாதம் ஒருமுறையாவது என் ஊருக்குச் சென்று வருவதை இன்றளவும் பழக்கத்தில் வைத்துள்ளேன். என் அம்மாவையும், என் மண்ணையும் அடிக்கடி சென்று பார்த்துவிட்டு வருவதில் அலாதி சந்தோஷம்'' என்கிற பரத்வாஜின் கண்களில் ஊர்ப் பாசம் மின்னலிடுகிறது!

– நளினி சம்பத்குமார்

வாசகர் யோசனை :

செல்லம்மாள், ஆழ்வார்க்குறிச்சி



தீவு தியரி

தென்பாண்டி மண்டலம் வறண்ட தீவாகுமா?

● ராஜிராதா, பெங்களூரு

? இன்றைய திருமணமான இளைஞர்களிடையே தற்கொலைகள் அதிகமாகி வருகின்றனவே?

! "திருமணமான இளைஞர்" என்று அடிக்கோடிட அவசியமில்லை. பொதுவாகவே, வாழ்வின் சவால்களை எதிர்கொள்கிற துணிவற்ற சவலைத்தனம் இன்று அதிகரித்து வருகிறது. மனோதிடம் நீர்த்துப் போய்க்கொண்டிருப்பதை, தற்கொலைகள் எடுத்துக் காட்டி எச்சரிக்கின்றன. காரணங்களை அரசு ஆராய்ந்து, அவற்றை நீக்க, தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

● பா.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? புதிய சட்டப் பேரவை திறப்பு விழா அழைப்பிதழை ஜெயலலிதாவிடம் ஸ்டாலினே நேரில் கொடுக்காமல் பொதுத் துறை செயலாளர் மூலம் கொடுத்தது சரியா?

! ஒருசிலருக்கு அவரே நேரில் சென்று கொடுத்துள்ளதால், முந்நாள் முதல்வர் ஜெயலலிதாவைத் தவிர்த்தது சரியல்லதான். ஆனால், ஜெயலலிதா அவரை கௌரவமளித்து வரவேற்றிருப்பாரா என்பதும் சந்தேகத்துக்குரியதே. அத்தகைய சுமுகமான சூழ்நிலை தமிழகத்தில் நிலவாதிருப்பது இங்கு ஜனநாயக மரபுகளுக்குப் பின்னடைவு.

● பா.அசோக், பிள்ளையார்குளம்

? நித்யானந்தா போல பலர் இதற்கு முன்னரும் நடந்துகொண்டார்கள் என்பது இந்துமதத்தில் உள்ள குறையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. வேறு எந்த மதத்திலும் இதுபோன்று நடப்பதாக மீடியா வெளியிடுவதில்லையே?

! இந்து மதத்திலோ வேறு எந்த மதத்திலோ குறைபாடுகள் எதுவும் இல்லை. மதத்தைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றப் பார்க்கும்



* மகிழ்ச்சிகர மாற்றம்



* உடைத்துச் சொல்லும் உண்மை



* அழைப்பும் அழகும்

சிலரிடம்தான் குறை. இத்தகையவர்கள் வேறு பல மதங்களிலும் உண்டு. அவர்களுடைய லீலைகள் இங்கேயும், உலகளாவியும் அம்பலமானதும் உண்டு.

● **கு.ப.இரகுநாதன், சென்னை-56** ❑

? நித்யானந்தா செய்த தவறை விட, அவரைப் பற்றிய செய்திகளை வெளியிடும் முயற்சியில் பல முறைகேடுகளில் ஈடுபடுகிற மீடியாவின் தவறு அதிகமில்லையா? அதை ஒடுக்க சட்டம் வருமா?

! போலிச் சாமியார்களையும் சரி, சரியும் மீடியா பத்திரிகை தர்மத்தையும் சரி, சட்டம் கொண்டு சீர்திருத்திவிட முடியாது. முறைகேடாகச் சம்பாதிக்க எண்ணும் இந்த இருபிரிவினரையும் பொது மக்கள் இனம் கண்டு நிராகரிக்கக் கற்றுக் கொண்டாக வேண்டும். அது ஒன்று மட்டுமே சமுதாயச் சீர்கேட்டைத் தவிர்க்கும்.

● **வி.ஜி.சத்தியநாராயணன்,**
சென்னை-61

? பணி நேரத்தில் அலுவலர்கள் கிரிக்கெட் காமெண்ட்ரி கேட்டால், பணி நீக்கம் செய்யலாம் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதே?

! ஏற்கக்கூடிய தீர்ப்புதான். ஆனால், நாம் கியூவில் காத்திருக்க, இடைவிடாது வம்பு காமெண்ட்ரி அளித்தபடி தங்கள் பணிகளைத் தப்புத் தப்பாகவும், தாமதமாகவும் செய்யும் ஊழியர்களை என்ன செய்வதாம்?

● **ஜி.மஞ்சரி, கிருஷ்ணகிரி**

? மக்கள் நலத் திட்டங்களை அறிவிக்கும் தலைவர்கள், அவற்றுக்குத் தங்கள் பெயரையே சூட்டிக் கொள்கின்றனரே?

! தங்கள் சொந்த சொத்திலிருந்து ஊருக்கு அள்ளித்தருவதாக ஒரு மாயையை ஏற்படுத்துவதற்குத்தான்!

● **என்.காளிதாஸ், சிதம்பரம்**

? கடந்த ஏழு ஆண்டுகளில், வழிபாட்டுத் தலங்களில் எண்ணூறு பேர் நெரிசலில் பலியானது பற்றி...?

! அரசின் அலட்சியமே காரணம். மக்கள் தொகை பெருகிவருகிறது. பல வழிபாட்டுத் தலங்கள் வர்த்தகமயமாகி வருகின்றன. கூட்டங்கள் அளவுக்கதிகமாகக் கூடிய தருணங்கள் எவை என்பது அனைவருக்கும் தெரியும். திட்டமிடலும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்படாவிட்டால் இத்தகைய விபத்துகள் அதிகரிக்கும்.

● **ஏ.எஸ்.யோகானந்தம்,**
ஔவையார்பாளையம் ★

? டீசல் விலை உயர்வை மட்டுமாவது ரத்து செய்யுங்கள் என்று முதல்வர் மத்திய அரசுக்கு எழுதியுள்ளாரே - பெட்ரோல்

உபயோகிப்பாளர்கள் பற்றி அவருக்கு அக்கறை இல்லையா?

! பெட்ரோல் பயன்படுத்தறவங்க எல்லாம் மேட்டுக்குடி என்கிற தவறான எண்ணம் அவருக்கும் வேறு பல அரசியல்வாதிகளுக்கும் இருக்கு. ஒட்டுமொத்தமாக நோக்க, கார்களை விட அதிக பெட்ரோல் பயன்படுத்துவது இரு சக்கர வாகனங்கள்தான். மேலும், சொகுசு கார்கள்ல பவனி வரும் அரசு அதிகாரிகள், அமைச்சர்கள், அரசியல்வாதிகள் எல்லோருடைய செலவையும் ஏற்கறது, வரி செலுத்தும் சாமானியனே!

□ ரூ. 150 பரிசு பெறுபவர்: கு.ப.இரகுநாதன், சென்னை-56

* ரூ. 75 பரிசு பெறுபவர்: ஏ.எஸ். யோகானந்தம், ஔவையார்பாளையம்.

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

? "தென்பாண்டி மண்டலத்தையே தண்ணீர் இல்லாத வறண்ட தீவாக மாற்றும் மறைமுகத் திட்டத்தின் முக்கியமான அத்தியாயம்தான் முல்லைப் பெரியாறு விஷயத்தில் நடந்துகொண்டிருக்கிறது" என்று வைகோ சொல்கிறாரே?

! அவர் கூறுவதில் உண்மையில்லாமல் போகவில்லை. ஆனால், இவ்விஷயத்தில் கட்சி மாறுபாடுகளைக் கடந்த ஒற்றுமை தேவை. இவர்கள் ஒருவரையொருவர் அலட்சியம் செய்தும் மோதிக்கொண்டும் இருந்தால், கேரளத்துக்குத்தான் கொண்டாட்டம்.

* நிராகரிப்பே தீர்வு



● ஜி.ஜெயபாலன், மதுரை

? தி.மு.க. அரசு, மக்களைப் பார்த்து, 'குடி! குடி!' என்கிறது. ஆனால், நானோ, 'படி! படி!' என்கிறேன்..." என ராமதாஸ் சொல்கிறாரே...?

! கள் இறக்குவோரை ஆதரித்துவிட்டு ராமதாஸ், "படி!படி!" என்று சொன்னால் எப்படி ஏற்பது? "நல்லா நடி! நடி! நாங்க நம்பமாட்டோம்..." என்று சொல்லத் தோன்றுகிறது!

● எம்.அசோக்ராஜா,அரவக்குறிச்சிப்பட்டி

? "பல மாவட்டங்கள் நாக்ஸலைட், மாவோயிஸ்ட்டுகள் கட்டுப்பாட்டில்தான் உள்ளன" என்று சுஷ்மா ஸ்வராஜ் சொல்கிறாரே?

! 2050-ல் இந்தியாவைக் கைப்பற்றி ஆட்சி அமைக்க மாவோயிஸ்ட் வகுத்துள்ள திட்டத்தை மத்திய அரசு நையாண்டி செய்து அலட்சியப்படுத்துவது ஆபத்தாகும். சுஷ்மா கூறுவதைக் கவனத்தோடு ஏற்று, உறுதியான எதிர் நடவடிக்கை எடுப்பது அவசியம். அதில் துப்பாக்கி முனையுடன் சமூக நலனும் இணைந்திருக்கவேண்டும்.

● உஷா சுதர்ஷன், திருச்செங்கோடு

? தியாகி வைத்தியநாத அய்யர் சிலை பராமரிப்பின்றி இருப்பதை தினமணி சுட்டிக்காட்டித்தான் அரசு சரிசெய்ய வேண்டுமா? முன்பே செய்திருக்கலாம் அல்லவா?

! சுட்டிக்காட்டிய பிறகும் ஏராள விஷயங்கள் சீர்செய்யப்படாமல் தொடர்கின்றன என்பதைப் பார்க்க, தினமணியின் ஒலிக்கு, இவ்விஷயத்திலேனும் அரசு செவிசாய்த்து இயங்கியதை வரவேற்று மகிழுங்கள்!

திருச்சியில் வீட்டு வசதித் திட்டத்தைத் துவக்கி வைத்து விட்டு, இரவு 10.40-க்கு விமானத்தில் ஏறிய முதல்வர் கருணாநிதி 12 மணியளவில் சென்னை வந்து சேர்ந்தார். வீட்டுக்குப் போய் அவசரக் கோப்புகளைப் பார்த்து முடித்தபின், பொதுப் பணித்துறை செயலாளர் ராமசுந்தரத்துக்கு செல் ஃபோனில் தொடர்பு கொண்டார். 'ஸ்விட்ச் ஆஃப்' என்று வந்தது. உடனடியாக வீட்டுத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள, தூக்கத்திலிருந்து பதறி எழுந்த செயலாளரிடம், ''அப்புறம் அந்த வள்ளுவர் கோட்டச் சிற்பம் என்னவாயிற்று? நான் சொன்னபடி டெரகோட்டா கலைஞர்கள் அதைச் சரிசெய்துவிட்டார்களா?'' என்று விசாரிக்க, ''ஆமாம் ஸார்... காலையில் ரெடியாயிடும்; நீங்க வந்து பார்க்கலாம்'' என்று சொன்னார் செயலாளர். முதல்வர் விசாரித்த சிற்பங்கள், புதிய தலைமைச் செயலக மற்றும் சட்டமன்ற கட்டடத்தின் நுழைவாயிலின் இருபக்கச் சுவர்களில் செதுக்கப்பட்டிருப்பவைதான். ''நாளும் பொழுதும் முதல்வருக்குப் புதிய தலைமைச் செயலகம் பற்றிய சிந்தனை. பளீர், பளீரெனப் புதுப்புது யோசனைகளை அவர் சொல்லும்போது நாங்கள் பிரமித்துப் போகிறோம். உதாரணமாக நுழைவு வாயிலில் இரு பக்கச் சுவர்களும் வெறுமனே இருப்பதாகத்தான் ஆர்க்கிடெக்ட் வரைபடம் சொன்னது. ஆனால், முதல்வரோ, 'அது ஏன் வெறும் சுவராக இருக்க வேண்டும்? தமிழகத்தின் பழைமையையும் புதுமையையும் சொல்லும்விதமாக டெரகோட்டா சிற்பங்களைப் பதிக்கலாமே' என்றார். ஒரு பக்கம் திருவாரூர் தேர் (வள்ளுவர் கோட்டம்) டைடல் பார்க், மறுபக்கம் வள்ளுவர் சிலை, தஞ்சைக் கோயில் ஆகியவை இன்று அந்தச் சுவர்களை அலங்கரிக்கின்றன. தேர்ச் சிற்பம் சரியாக அமையாததால் சில திருத்தங்களைச் சொன்னார். அதைத்தான் அன்று இரவு விசாரித்தார்'' என்கிறார் ராமசுந்தரம்.

'தலைமைச் செயலகத்தை மாற்ற வேண்டும். சட்டப் பேரவையை நவீனப்படுத்த வேண்டும்' என்று ஜெயலலிதா முதல்வராக இருந்த காலத்தில் யோசனைகள் பரிசீலிக்கப்பட்டன. ஆனால், சரியான இடம் தேர்வாகவில்லை; செயல்வடிவம் பெறவில்லை.

2007-ல் மே மாதம், தமது ஐம்பதாண்டு கால சட்டப் பேரவைப் பணியைப் பாராட்டி நடந்த கூட்டத்தில், முதல்வர் கருணாநிதி, 'சட்டமன்றத்தை உள்ளடக்கிய



நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான்!

– கங்கிராட்ஸ் கலைஞர்!



புதிய தலைமைச் செயலக வளாகம் அண்ணாசாலை ஓமந்தூரார் வளாகத்தில் கட்டப்படும்' என்று அறிவித்தார். சொன்ன கையோடு விறுவிறுவென்று வேலைகள் துவங்கின. ஜெர்மன் நிறுவனமான ஜி.எம்.பி. இன்டர்நேஷனல் கொடுத்த கட்டுமான வரைபடம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஈஸ்ட் கோஸ்ட் கட்டுமான நிறுவனத்துக்கு 425 கோடி மதிப்பீட்டில், திட்டம் செயல் வடிவம் பெற வழங்கப்பட்டது. மொத்தம் இரண்டு பிளாக்குகள். இப்போது தயாராக இருக்கும் முதல் பிளாக் கான்டிராக்ட்-15 மாதங்களில் முடிக்கப்பட்டிருக்கிறது. இதில் நான்கு பிரிவுகள். எல்லாம் வட்டவடிவக் கட்டுமானம். முதல் பிரிவு பொதுமக்கள் அரங்கு; அடுத்தது சட்டப் பேரவை; மூன்றாவது முதல்வர் அமரும் பிரிவு; நான்காவதாக கூட்ட அரங்கு, நூலகம். இவை தவிர அமைச்சர்கள், அலுவலகங்கள், உள்துறை, நிதி, சட்டம் ஆகிய துறைகளுக்கான அலுவலகங்களும் இங்கே இருக்கும். இரண்டாவது பிளாக் கட்டிட வேலை இன்னமும் துவங்கப்படவில்லை.

இங்குள்ள சட்டமன்றக் கட்டுமானத்தின் சிறப்பம்சம் அதன் மேற்கூரைதான். கோபுர வடிவம் கொண்ட இந்தக் கூரை நூறு அடி உயரமும் நூற்றியிருபது அடி சுற்றளவும் கொண்டது. இதன் எடை என்னூறு டன். தரைத் தளத்தில் உள்ள சட்டப்

இனி இது வரலாறு...

* பதினாறாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டையில், 1910-ம் ஆண்டுதான் சட்டப் பேரவை அமைக்கப்பட்டது.
* பேரவையின் முதலாம் தளத்தைத் தாங்கி நிற்கும் பிரம்மாண்ட கறுப்புத் தூண்களின் எண்ணிக்கை 20.
* 1920-ல் நீதிக் கட்சியின் சார்பாக முதலாவது முதல் அமைச்சராக இங்கே பொறுப்பேற்றவர் சுப்பராயலு செட்டியார்.
* பேரவைத் தலைவரின் கலைமிகு ஆசனத்தை அன்பளிப்பாக வழங்கியவர் கவர்னர் வெலிங்டன் பிரபு.
* சுதந்திர இந்தியாவில் பேரவையில் முதல் உரை நிகழ்த்தும் வாய்ப்பைப் பெற்றவர் அப்போதைய முதல்வராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்.

✱ பதினேழு முதல்வர்களைக் கண்டிருக்கிறது இந்த சட்டப் பேரவை.

✱ இந்த நூற்றாண்டுக் காலத்தில் இடையிடையே சில காலம் பேரவை, ராஜாஜி ஹால், கலைவாணர் அரங்கம், பல்கலைக் கழக செனட் ஹால் ஆகிய இடங்களிலும் கூடியிருக்கிறது.

✱ வாக்காளர் பட்டியலில் மகளிரைச் சேர்ப்பது, ஆதிதிராவிடர்களை பறையர், பஞ்சமர் என்று சொல்லக்கூடாது, தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானம், இடஒதுக்கீடு, பெண்களுக்குச் சொத்துரிமை என்று இந்த நூறு வருஷ காலத்தில் பல முக்கிய தீர்மானங்களைப் பேரவை கண்டிருக்கிறது.

✱ 'பாரதியார் பாடல்களைத் தடை செய்யக் கூடாது' என்று சத்தியமூர்த்தி ஆற்றிய உரையும் குறிப்பிடத்தக்கது.

பேரவை உள்புறத்தில் இருந்து, நேரடியாக, மேலே கோபுரத்தின் உச்சியைக் காண முடியும். இடையில் எந்தக் கட்டுமானமும் இல்லாமல் காலி இடம். கடல் பக்கம் இந்தக் கூரை அமைக்கப்படுவதால் உப்புக் காற்றால் எந்தப் பாதிப்பும் வரக்கூடாது என்ற நோக்கத்தில் லேட்டஸ்ட் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.



✱ திருவாரூர் • டைடல் பார்க்

திறப்பு விழாவுக்குத் தற்காலிகமாக தோட்டா தரணி மேற்கூரை செட்டிங் போட்டிருக்கிறார். ''நகரின் மையமான இடத்தில் தலைமைச் செயலகம் அமைத்தால் எதிர்காலத்தில் மீண்டும் இட நெருக்கடி ஏற்படுமே?'' என்று கேட்டதற்கு, ''இந்த வளாகம் அடுத்த நூறு ஆண்டுகளுக்கான தேவையைக் கணக்கில் கொண்டது. கோட்டை போல் அல்லாமல் இங்கு மூன்று பக்கம் சாலைகள் பல நுழைவுகள் அமைக்க முடியும்'' என்றார் ஓர் அதிகாரி. முதலில் வளாகத்தைச் சுற்றிப் பதினைந்து அடி சுற்றுச் சுவர் அமைப்பதாக இருந்தார்களாம். ''இவ்வளவு அழகான கட்டடத்தை சாலையில் செல்பவர்களும் பார்க்க வேண்டாமா? இரும்பு கிரில் போடுங்கள்'' என்று முதல்வர் சொல்லியிருக்கிறார். பழைய சட்டப் பேரவையில் உள்ள பத்து தலைவர்களின் படங்களைப் போலவே புதிய வளாகத்துக்குப் படங்களை வைக்கச் சொல்லியிருக்கிறார். ''என் அறை எப்படி அமைக்கப்படுகிறதோ அதே போல எதிர்க்கட்சித் தலைவர் அறையும் அமைய வேண்டும்'' என்றும் முதல்வர் சொல்லியிருக்கிறார் என்கிறார் மற்றொரு அதிகாரி.

வளாகத்தைச் சுற்றி உள்ள சாலைகளில் கடைகள் இருக்கக் கூடாது என்றும், லாட்ஜுகள், மேன்ஷன்கள் காலி செய்யப்பட வேண்டுமென்றும், காவல் துறை கெடுபிடி செய்வதாக, பல லாட்ஜ் உரிமையாளர்கள் மற்றும் கடைக்காரர்கள் புகார் செய்வதாகச் செய்திகள்.

''திறப்பு விழாவுக்குப் பிரதமர், சோனியா வருவதால் பாதுகாப்புக் காரணமாக இரண்டு நாள் கடைகளை மூடச் சொல்கிறோம். அவ்வளவுதான்'' என்கிறார் போக்குவரத்துக் காவல் அதிகாரி.

தமது அலுவலகம் செல்ல, பெரியார் சிலை நுழைவாயிலைப் பயன்படுத்துவார் முதல்வர். வெளியே போகும்போது, அண்ணா சிலை நுழைவாயில் வழியாகச் செல்வாராம். எல்லாப் பணிகளும் முடிந்த பின், இந்தப் பகுதி எப்படிப்பட்ட மாற்றங்களுடன் இருக்கும் என்பதை நினைத்தால் பிரமிப்பாகத்தான் இருக்கிறது.

– ப்ரியன்; படங்கள் : **ராஜன்**

டாக்டர்.பி.ஆனந்தன்

10

மாண்புமிகு மனம்

'மகாகனம் பொருந்திய' மாப் பிஹேவியர்!



தனி மனிதனின் மனோநிலைக்கும், ஒரு கூட்டத்தின் மனோநிலைக்கும் நிறையவே வித்தியாசங்கள் இருக்கின்றன. ஒரு கூட்டத்தின் மனோநிலையையும் அதன் விளைவாய் ஏற்படும் அந்தக் கூட்டத்தின் நடவடிக்கையையும் சமூக உளவியலில், 'மாப் பிஹேவியர்' என்கிறார்கள்.

பெரிய பாலத்தின் மேலிருந்து இரண்டு நண்பர்கள் கீழே பார்த்துக் கொண்டு ஏதோ சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அதன் வழியாக பைக்கில் சென்ற மேலும் இரண்டு நண்பர்கள், அவர்களைக் கண்டதும் இறங்கி பரஸ்பரம் குசலம் விசாரித்து விட்டு, நான்குபேரும் பாலத்தின் கீழே பார்த்துச் சுவாரஸ்ய பேச்சைத் தொடர்ந்தனர். அதைக் கவனித்துக் கொண்டு மெதுவாக மாட்டு வண்டியில் வந்துகொண்டிருந்த மனிதரும் உடன் பயணம் செய்த நான்கு பெண்களும் ஆர்வமாக வந்து, பாலத்தின் கீழே எட்டிப் பார்க்க, இப்படியாக ஒருவரைப் பார்த்து அடுத்தவர் என ஐம்பதுக்கும் மேற்பட்ட மனிதர்கள் பாலத்தின் மேலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'என்னடா இது வம்பா போச்சு' என அந்த நான்கு நண்பர்களும் மெதுவாகக் கூட்டத்தைவிட்டு ஒதுங்கி ரோட்டுக்கு வந்தனர். யாருமே அந்த நாலு பேரைக் கண்டுகொள்ளவில்லை. மாறாகக் கூட்டத்தைப் பார்த்து ரோட்டில் வருவோர் போவோரெல்லாம் பாலத்தின் கீழே எட்டிப் பார்க்க ஆரம்பித்தனர்.

'ஓஹோ! கூட்டம்கூட நாம காரணமில்

லையா? வேறு ஏதோ மேட்டர் போல, என மீண்டும் அந்த நான்கு பேரும் ஆர்வமாய் விழுந்தடித்து ஓடிப்போய் எட்டிப் பார்த்து, பக்கத்தில் உள்ள பெரியவரிடம் மீண்டும் 'என்ன ஸார்?,' எனக் கேட்க, 'அதான் தம்பி அரைமணி நேரமா ஒருத்தர் மாத்தி ஒருத்தர் கேட்டுக்கிட்டிருக்கோம்' என்று புலம்பிக்கொண்டே பெரியவர் மட்டும் சைக்கிளை எடுத்துத் தள்ளிக்கொண்டு போக, ஒட்டுமொத்தக் கூட்டமும் ஒன்றன் பின் ஒன்றாகக் கலைந்தது. கடைசியாக அந்த நான்கு பேர் மட்டும் இருந்தனர்.

''என்னடா நடந்துச்சு இப்ப'' - என்றான் ஒரு நண்பன். ''அதான்டா நானும் கேட்கறேன். தனியா வந்து நாங்க ரெண்டு பேரும் 'தம்' அடிச்சுக்கிட்டிருந்ததைப் பார்த்து நீங்க ரெண்டு பேரும் வந்தீங்க. அவனோட சிகரெட் தவறி விழுந்துட்டதுன்னு நாங்க எட்டிப் பார்த்துக்கிட்டுருந்தப்ப சும்மா கலாய்ச்சுக்கிட்டுருந்தீங்க. அதுக்குள்ள என்னடானா ஒரு பெரிய கும்பலே கூடிட்டானுங்க. நானே கொஞ்ச நேரம் ஆடிப் போயிட்டேன்'' - எனச் சொல்லிவிட்டு நான்கு பேரும் பைக்குகளில் சர்ரென்று கிளம்பினார்கள்!

மாப் பிஹேவியர் என்பது ஏறக்குறைய மந்தை மனப்பான்மைதான். இது சமூகத்தின் எல்லாப் பக்கங்களிலும் ஊடுருவி இருக்கிறது.

என்ன? ஏன்? எதற்கு? என்றெல்லாம் தர்க்க ரீதியான சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காமல், 'அவர்கள் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நானும் பார்த்தேன்!' அவ்வளவுதான். இதைத்தான் 'கூட்டத்தில் தனிமனிதன் தொலைந்து போகிறான்' என்றார் ஓர் உளவியல் மருத்துவர்.

ஒரு மதத்தைச் சார்ந்தவர் மற்றொரு மதத்தினரின் வழிபாட்டு தலத்தை மதித்து, பயபக்தியுடன்தான் நடந்து போவார். அதே மனிதர் ஆயிரம் பேருடன் ஊர்வலமாகச் செல்கிறபோது, மாற்று மத தலத்தின்மீது கல் எறியத் தயங்கமாட்டார். ஒரே மனிதன் தனியாக இருக்கையில் ஒரு மாதிரியாகவும், கூட்டத்துடன் சேரும்போது வேறு மாதிரியாகவும் நடந்து கொள்வதும்தான் மாப் பிஹேவ்யர்.

பக்கத்து வீட்டுப் பையனும், சொந்தக்காரப் பிள்ளைகளும் என்ஜினியரிங் படிக்கிறார்கள் என்பதற்காக, ப்ளஸ் டூவில் ஃபெயில் ஆன தன் மகனையும், மறுதேர் வெழுத வைத்துக் கஷ்டப்பட்டு சில லட்சங்களைக் கொடுத்துப் படிக்க வைக்கும் பெற்றோர்களையும், சினிமாக்களில் கல்லூரிகளைப் பார்த்து ஆசையோடு போன நம் இளைஞன், தனியார் பொறியியல் கல்லூரிகள் சிறைச் சாலைகளைப் போல இருப்பதை உணர்கிறான். நான்கு வருட முடிவில் நாற்பது பேப்பர் அரியர்ஸுடன் வெளியேறி B.E (incomplete) எனச் சொல்லி இரவு நேர BPO-க்களில்



அமெரிக்ககாரனிடம் திட்டு வாங்கிவிட்டு வாழ்க்கையை ஓட்டுவதையும் பார்க்கையில், மந்தை மனப்பான்மையில் சமூகமே சிக்கியிருப்பது புலனாகிறது.

ஏன்? எதற்கு? என யோசிக்காமல் நம் தகுதி, திறமை பற்றி ஆராயாமல் எல்லோரும் செய்கிறார்கள் என்பதற்காகச் செய்யும் 'கூட்டத்தில் கோயிந்தா' போடும் மனப்பான்மைதான் மந்தை மனப்பான்மை.

சமூகத்தின் எல்லாத் தளங்களிலும் அது இருக்கிறது. இங்கே தனிமனிதனின் சிந்தனைகளுக்கு வேலை இல்லை. பல தனிமனிதர்களின் சிந்தனைகள் குவிந்து ஒட்டு மொத்தத்திலிருந்து உணர்ச்சிகள் மட்டும் மேலோங்கி, எல்லோருடைய பகுத்தறிவும் திறனும் மழுங்கடிக்கப்பட்டு 'மாப் பிஹேவியராக' வெளிப்படுகிறது.

கட்சிகளின் பெயரால், ஜாதியின் பெயரால், இனத்தின் பெயரால், நடிகனின் பெயரால், உலகில் நடக்கும் கலவரங்கள் யாவுமே இந்த மந்தை நடவடிக்கைதான். உண்மையில் ஒவ்வொருவனுக்கும் தனிப்பட்ட முறையில் எந்தக் காழ்ப்புணர்ச்சியோ, கோபமோ, சிந்தனையோ இருக்காது! உணர்ச்சிகளும் நடவடிக்கைகளும் கூட்டத்தினுடையதாகும். சமயங்களில் சுய ஆதாயத்துக்காக, தலைவன் என்ற பெயரில் வலம் வரும் சமூக விரோத மனப்பான்மை (Anti-social Behaviour) கொண்ட ஒரு 'புத்திசாலி(!)'கூட, இப்படி மந்தை நடவடிக்கையை உசுப்பேற்றிவிட முடியும்.

எத்தனை தமிழ் சினிமாக்களில் நாம் இதைப் பார்த்திருக்கிறோம்!

(விவாதிப்போம்...)

15.000 கலைச்சொற்கள்!

இலக்கிய செயல்பாட்டால் ஏர்வாடி கிராமத்தைப் பிரபலப்படுத்திய ஏர்வாடி எஸ். ராதாகிருஷ்ணன், இவர் முப்பத்தேழு ஆண்டுகளாக 'கவிதை உறவு' என்ற இலக்கிய அமைப்பையும் - இதழையும் நடத்திவருகிறார். இவர் உருவாக்கிய வங்கிகளுக்கான பயன்பாட்டுக்கான பதினைந்தாயிரம் கலைச்சொற்கள் கொண்ட அகராதியை, எம்.ஜி.ஆர். அந்தக் காலத்திலேயே வெளியிட்டது சிறப்பு. தமிழ் வளர்ச்சித்துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசை இரண்டு முறை பெற்றவர். ''இப்படித்தான் நாம் பிறந்த மண்ணைக் கௌரவிக்க வேண்டும்,'' என்கிறார் ஏர்வாடி எஸ்.ராதாகிருஷ்ணன்.



● எஸ்.ராதாகிருஷ்ணன்



நெல்லைக்குத் தொல்லை தரும் விஷயங்கள் என்னென்ன? மாயனூர் யூனியன் கவுன்சிலரும் அ.தி.மு.க. வின் மாவட்ட இளைஞரணி துணைத் தலைவருமான கல்லூர் வேலாயுதத்தைச் சந்தித்தோம்.

"நெல்லையோட பெரிய தலைவலியே சாலைப் போக்குவரத்துதான். மதுரை, கோவை, திருச்சி போன்ற மாநகராட்சிகளைப் போல அகலமான சாலை வசதிகள் இல்லாதது பெருங்குறை. எஸ்.என். ஹை ரோட்டை விட்டா வேறெந்த ரோட்டுக்கும் இங்கு பெருசா பராமரிப்பே கிடையாது. கோபாலசமுத்திரத்திலேர்ந்து சங்கரன்கோயில் வரைக்குமான ரிங்ரோடு திட்டம் 1989-ல தி.மு.க. ஆட்சிக் காலத்துலயே கொண்டு வந்தாங்க. பிறகு அந்தத் திட்டமும் அதோ கதிதான். தாமிரபரணி ரெண்டு கரையிலுமே சர்வீஸ் ரோடோடுகூடிய சாலை வசதித் திட்டம் இருக்குன்னு சொன்னாங்க, சொல்லிக்கிட்டே இருக்காங்க... அந்தத் திட்டம் இருக்கா இல்ல அதுவும் போயிடுச்சான்னு தெரியலை.

நவகைலாயம், நவதிருப்பதியை இணைச்சு கலாசாரப் பேருந்துன்னு ஒண்ணு விடணும்.

தாமிரபரணியிலேர்ந்து கேரளாவுக்கு மணல் கடத்தல் நாளுக்கு நாள் அதிகமாகிட்டே போகுது. ஒரு நாளைக்கு பத்தாயிரம் யூனிட் மணல் கடத்துறாங்க. இதனால தாமிரபரணிலேர்ந்து குடிதண்ணீர் சப்ளை ரொம்ப கம்மியாயிடுச்சு. உறை கிணறுகள் பாதிக்கப்பட்டு, கொஞ்சமா கிடைக்கற குடி தண்ணீர்லயும் அதிகமான அசுத்தம் கலக்க ஆரம்பிச்சாச்சு.



✱ மேயர் ஏ.எல்.சுப்ரமணியம்

மணல் அள்ளக்கூடாதுன்னு ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. மாலைராஜாவே போராட்டம் பண்ணுனார். யார் கேட்குறா? இப்படியே போனா, இன்னும் பதினைஞ்சு வருஷத்துல தாமிரபரணியும் காவிரி மாதிரி காஞ்சு போனாலும் ஆச்சர்யப்படுறதுக்கில்லை.

அறுநூறு கோடி ரூபாய் செலவு பண்ணி பாதாளச் சாக்கடை திட்டம் கொண்டு வந்தாங்க. ஆனாலும், மேலப்பாளையம், நத்தம், வெள்ளக் கோயில் பகுதிகள்ல ரோட்டு மேலதான் சாக்கடை ஓடுது. இந்தச் சுகாதாரக் கேட்டினாலே மேலப்பாளையம் கடையநல்லூர் பகுதிகள்லதான் தமிழ்நாட்டுலேயே சிக்குன் குனியாவால் அதிகம் பேர் பாதிக்கப்பட்டாங்க. தனியார்

நெல்லையின் தொல்லைகள்!

பேப்பர் மில்லுக்கு தாமிரபரணி தண்ணீரை மிகவும் குறைஞ்ச விலைக்குக் கொடுத்திருக்காங்க. ஒரு நாளைக்கு ஐந்தாயிரம் லிட்டர் தண்ணீர் எடுக்கற அந்த ஆலைக்கு, ஆயிரம் லிட்டருக்கு ஐம்பது பைசான்னு விலை நிர்ணயம் பண்ணியிருக்காங்க. இது எந்த அடிப்படையில பண்ணினாங்கன்னு புரியமாட்டேங்குது.



❋ கல்லூர் வேலாயுதம்

கரூர், புகழூர் காகித ஆலை, ஆண்டொன்றுக்கு எண்ணூறு கோடி ரூபாய் அரசாங்கத்துக்கு லாபம் தருது. அரசாங்கம் நினைச்சா தாமிரபரணி நதிக் கரையில நாலு காகித ஆலைகளை அமைக்கலாம். இதனால இந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பாவது கிடைக்கும்'' என்கிறார்.

பதிலளிக்கிறார் மேயர்:
ஏ.எல்.சுப்ரமணியம் (தி.மு.க.)

''தாமிரபரணியில மணல் அள்ளறது உண்மைதான். ஆனால், மாநகராட்சி எல்லைக்குள்ள நாங்க அதை அனுமதிக்கறது இல்லை. அதேபோல சாலை வசதிகள், மாநகராட்சி எல்லைக்குள்ள தரமாவே இருக்கு. எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதியில எங்களால ஒண்ணும் பண்ண முடியாது. அதை பொதுப்பணித்துறைதான் கவனிக்கணும். பாதாளச் சாக்கடைத் திட்டம் இப்போதான் அமலுக்கு வந்திருக்கு. போகப்போக அந்தப் பிரச்னையும் முடிவுக்கு வரும். சுய உதவிக் குழுக்கள்கிட்டேயே மாநகராட்சியின் துப்புரவுப் பணியைக் கொடுத்திருக்கோம். அதனால இப்போ ஒவ்வொரு புதன்கிழமையும் க்ளீனிங் வேலை நடக்குது. குடி தண்ணீருக்காக பாபநாசம் டேம்லேர்ந்து குழாய் மூலமாக நகரத்துக்குள்ள தண்ணீர் சப்ளைக்கு நூறு கோடி ரூபாய்க்குத் திட்டம் போடப்பட்டு இரண்டு கோடி ரூபாய் முதலீடு ஆராய்ச்சிப் பணிக்காக செய்யப்பட்டிருக்கு. ஒருங்கிணைந்த வீடு கட்டும் திட்டம் மூலமா இருபது கோடி ரூபாய் செலவுல குடிசை வீட்டில வசிக்கும் இரண்டாயிரத்து எழுநூறு பேருக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தர இருக்கோம். மாநகராட்சியில, எட்டு இடத்துல, நாற்பது லட்சம் ரூபாய் செலவுல சமுதாயக்கூடம் கட்டிக்கிட்டு வர்றோம்'' என்கிறார் மேயர்.

வாசகர் யோசனை:
களந்தை சங்கரன், தென்காசி

நனவாகும

நாங்குனேரி 'சிறப்புப் பொருளாதார மண்டலம்' தென் தமிழகத்தின் கனவுத் திட்டம். முரசொலி மாறன் மத்திய அமைச்சராக இருந்தபோது, இத் திட்டத்துக்குக் கலைஞர் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டது. வேலைகள் நடைபெறத் துவங்கிய சமயத்தில், அதன் அடிப்படை கட்டுமானப் பொறுப்பை ஏற்றிருந்த அமெரிக்க நிறுவனம் ஏனோ விலகிக்கொண்டது. அதன் பின் அடுத்து வந்த அ.தி.மு.க. ஆட்சி, அந்தத் திட்டத்தை மாற்றாந் தாய் உள்ளத்தோடு பாராமுகம் காட்ட, திட்டம் கிடப்பில் போடப்பட்டது. தற்போது அதன் அடிப்படை கட்டுமானப் பொறுப் பேற்றிருக்கிறது ஏ.எம்.ஆர்.எல். என்ற தனியார் நிறுவனம். அதன் செயல் அதிகாரி சிவபிரகாஷ், "இன்னும் ஐந்து ஆண்டுகளில் நாங்குனேரி சிறப்புப் பொருளாதார மண்டலம் செயல்படத் துவங்கும்" என்று தெரிவித்திருக்கிறார், மறுபடியும் தென்னகவாசிகளின் கண்களில் டைடல்பார்க் கனவு துளிர்விட ஆரம்பித்திருக்கிறது. சில மாணவர்களின் கனவுகள் இதோ...

* ஹரி பாஸ்கர்





சுடலைமுத்து, பி.டெக்., பார்மசூட்டிகல்ஸ் என்ஜினியரிங் அண்ட் டெக்னாலஜி, மூன்றாமாண்டு, தேர்க்கன்குளம்:

"எங்க ஊர்லேந்து இருபது கி.மீ. தூரம்தாங்க நாங்குனேரி. அடிக்கல் நாட்டினப்போ அப்ப நானு ஸ்கூல் பாய். அந்தப் பக்கமா பஸ்சுல தாண்டி போகும்போது, எனக்குள்ளே ஒரு கனவு வரும். நாம காலேஜ் படிச்சு சாஃப்ட்வேர் என்ஜினியரா ஆகி, டிப்டாப்பா ட்ரெஸ் பண்ணிகிட்டு, அந்த டைடல் பார்க் உள்ளே வேலைக்குப் போய்ட்டு வர்ற மாதிரி. என்னோட ஸ்டாப்புல நான் எறங்கும் போது அந்தக் கனவும் கலைஞ்சு போயிடும். அந்தக் கனவு நனவாகுமா? என்பதுதான் என் போன்ற தென் மாவட்டத்தில் படித்த, படித்துக் கொண்டிருக்கிற இளைஞர்கள் முன் தோன்றி நிற்கும் கேள்வி. என்னோட படிப்புக்கு ஏத்த வேலைக்குன்னு அந்த டைடல் பார்க்குல 250 ஏக்கர் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா சமீபத்துல ஒரு செய்தி படிச்சேன். ஆனா இதுவரைக்கும் எந்தக் கம்பெனியும் இன்னும் டைடல் பார்க் உள்ளே கால் பதிக்கலை, எப்போ வரும் அந்தக் கம்பெனிங்க?"



இசக்கிராஜ், பி.டெக்., பெட்ரோ கெமிக்கல் என்ஜினியரிங், மூன்றாம் ஆண்டு, பாளையங்கோட்டை:

"தென் மாவட்டங்களில்


தொழில்னு பார்த்தா, பீடி சுத்துறது. தீப்பெட்டி கட்டுறது. பட்டாசு தயாரிக்கறது இதுதாங்க. இது எல்லாமே குடிசைத் தொழில் மாதிரி. எங்க வீட்ல என்னோட தாத்தா காலத்துலேருந்து பீடி சுத்தறதுதான் வேலை. என் அம்மா இப்பவும் பீடி சுத்தறாங்க. அப்பா கார் ஸீட் லைனிங் ஒர்க்ஸ் பண்றாரு. ஒரே பையன் நானு. ரொம்ப சிரமப்பட்டுத்தான் என்னைப் படிக்கவைக்கிறாங்க. நான் படிச்ச படிப்புக்கு எங்க மாவட்டத்துலேயே வேலை கிடைச்சா, நான் வேற மாநிலத்துக்குப் போகமாட்டேன். வேலைக்காக வெளி நாட்டுக்கும் போக மாட்டேன். நாங்குனேரி டைடல் பார்க் எங்க மாவட்ட படித்த இளைஞர்களுக்கு நல்ல வழியைக் காட்டட்டும்.''

பெரிய கம்பெனிகள் ஆரம்பிக்கவே ரொம்ப தயங்குறாங்க. அது ஏன்னு தெரியலை. நாங்குனேரி டைடல் பார்க் வந்து, அந்த அவப் பெயரைத் துடைத்து எறியும்னு நெனைச்சிருந்தோம். ஆனா, அதுவும் நடக்கலை. கம்பிவேலி பிடிச்சுப் போட்டதோட சரி. எந்தவொரு பெரிய கம்பெனியும் உள்ளே துவங்கலை. சின்ன கம்பெனியும் எட்டிப் பார்க்கலை. அந்த இரண்டாயிரத்து ஐந்நூறு ஏக்கர்ல, நெறைய கம்பெனிங்க வந்துடுச்சினா,


* சுடலை முத்து


* இசக்கிராஜ்





நாங்குநேரி டைடல்பார்க்?

ஹரி பாஸ்கர், பி.டெக்., பயோ டெக்னாலஜி, மூன்றாமாண்டு, கோச்சடை

''தென் மாவட்டங்கள்ல பல்லாயிரக் கணக்கான இளைஞர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை கிடைச்சுடும். சீக்கிரமே வந்துட்டா, அதுல நானும் ஒரு நபரா இருப்பேன்!'' தமிழக அரசு பெரிய பெரிய தொழில் நகரம் அமைப்பதில் காட்டும் அக்கறையை சிறு மற்றும் குறுந் தொழில்களிலும் காட்டுமா? இவைதான் தமிழகத்தின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு பெற்றவை என்பதை அரசு நினைவு கூர்ந்தால், நாட்டு மக்களுக்கு நலமுண்டு!

வாசகர் யோசனை: **நெல்லைக் குரலோன்**

வட்டமேஜை



அப்போ: அல்வா...அருவா... இப்போ: அழகா... அறிவா...

'தேன்குரல் தியாகராஜன்' கட்டுரை, ஒரு கச்சேரி பார்த்து ரசித்ததுபோல இருந்தது.

-ஆண்டியப்பன், தூத்துக்குடி

அரசியல்வாதிகள் மக்களை வெச்சு காமெடி பண்ணிக்கிட்டிருப்பதைப் பட்டவர்த்தனமாக உணர்த்தியிருக்கிறீர்கள் கருத்துப் படத்தின் மூலம்.

-எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

'இருட்டுக்கடை அல்வா' பற்றிய செய்திகள், அல்வாவில் சேர்க்கப்பட்ட முந்திரி போல் கூடுதல் சுவை அளித்தன.

- எஸ்.ராமசாமி, ஈரோடு

'ஆதிச்சநல்லூர் அதிசயம்!' கட்டுரை பல அரிய தகவல்களைத் தந்தது.

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

அசட்டையாக, அசால்ட்டாக விஷயங்களை அளிக்காமல், வாசகர்களின் உள்ளங்களை வேலி போட்டுக் கட்டிவைக்கும் வகையில் சிறப்பிதழ் அமைந்திருந்தது.

- பா.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

'கல்கி நெல்லை ஸ்பெஷல் - 1' திக்குமுக்காட வைத்தது பலே பலே.

- தஞ்சை ஹேமலதா, வெண்டையம்பட்டி

தலையங்கம் அருமை. நம் இந்தியக் கடன் சுமை ஏறுவிகிதத்தையும் விலைவாசி ஏறுமுகதத்தையும் விவரித்திருந்தது உண்மை.

- பி.மீனாகணபதி, திருநெல்வேலி டவுன்

சச்சின் கையால் பெறப் போகும் உலகக் கோப்பை மூலம் 'கல்கி' ரசிகர்களின் கனவு கண்டிப்பாக நனவாகும். **- உமாமோகன்தாஸ், திண்டுக்கல்**

வட்டமேஜை கடிதங்களை 'கல்கி' ஆன்லைனில் படித்தபோது கட்டுரையை மட்டுமின்றி, கதைகளையும் இனி படிக்க வேண்டும் என்கிற ஆர்வத்தைத் தூண்டியது. 'கலப்பை' சிறுகதை எழுதிய செண்பகக்கண்ணனுக்குப் பாராட்டுக்கள்! **- தர்மபதி, சென்னை.**

ஈ-மெயில் போஸ்ட்

நெல்லை என்றாலே 'அல்வா' அடுத்து 'அருவா' என்பதை மாற்றி நெல்லை என்றாலே 'அழகா' அடுத்து 'அறிவா' என வியப்படையச் செய்தது 'கல்கி'.

- எம்.தியாகராஜன், திருநெல்வேலி

திருநெல்வேலி சிறப்பிதழ் படித்தேன். கடையத்தில் பாரதி அடிக்கடி வந்து அமரும் கிருஷ்ணன் கோயில் பற்றி குறிப்பிடவில்லையே? **- விமலா ரமணி**

கார்த்திகாவின் கவிதைகள் இவ்வார 'கல்கி'க்கு அணிவிக்கப்பட்ட கவின்மிகு மகுடம்!

- அ.முரளீதரன், மதுரை-3.



நன்றி... நன்றி... நன்றி...

திருநெல்வேலி மாவட்டச் சிறப்பிதழ்களைச் சிறப்பாகத் தயாரிக்க ஆலோசனை வழங்கி கடிதங்கள் குவிந்தன. தேர்ச்சியான தகவல்கள், படங்கள், நம்பகத்தன்மையான விவரங்கள்... என அசத்திய வாசகர்களின் பட்டியல் இது. உங்கள் உதவியால்தான் இந்த இதழ்களைச் சிறப்பாகத் தயாரிக்க முடிந்தது. உங்களுக்கு ஒரு சபாஷ் - சல்யூட்!

(ஆர்.)

● அனிதா ராமச்சந்திரன், பெங்களூர் ● அதிலட்சுமி, பாளையங்கோட்டை ● ஸ்.வரதராஜன், வீரவநல்லூர் ● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி ● மொகமது சையத், திண்டுக்கல், ● பி.இசக்கிமுத்து, திருநெல்வேலி டவுன் ● சூபிரம்மநாயகம், சங்கரன்கோவில் ● ஷண்முக சுந்தரம், மேலகரம் ● ஆர்.அனந்தராமகிருஷ்ணன், திருநெல்வேலி ஜங்ஷன், ● டி.கணபதி, திருநெல்வேலி-7 ● பி.ஜி.பி.இசக்கி, அகஸ்தியர்பட்டி ● ஜி.சுவாமிநாதன், திருநெல்வேலி-1 ● பே.ராஜேந்திரன், பாளையங்கோட்டை, ● பி.கோவிந்தராஜன், திருநெல்வேலி-11, ● கோ.அய்யனார், பாளையங்கோட்டை, ● ஆர்.மீனலதா, மும்பை, ● எஸ்.ஆழ்வார், திருநெல்வேலி-1, ● கோ.பூதலிங்கம், திருநெல்வேலி-7, ● கு.முத்துசுவாமி, பாளையங் கோட்டை, ● பி.ஜானகி, திருநெல்வேலி, ● வடிவேல் சுப்பிரமணியன், இராதாபுரம், நெல்லை-11, ● தனரேகா மகாபூஷணம், திருநெல்வேலி-1, ● இராம.கண்ணன், திருநெல்வேலி-2, ● லலிதா லட்சுமணன், சென்னை-90, ● க.பரமசிவன், மதுரை-10, ● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி, ● கே.ஜி.எஸ்.கோவிந்தன், கிருஷ்ணாபுரம், ● எஸ்.ஆதிநமிளகி, வீரசிகாமணி, ● வி.திலகம், காஞ்சிபுரம், ● இரா.கணேசன், சேலம், ● சண்முக சுப்பிரமணியன், சென்னை-88, ● கு.கணேசன், மறைமலைநகர், ● ஆர்.மகா தேவன், திருநெல்வேலி டவுன், ● வி.தாணுமூர்த்தி, செம்பூர், மும்பை, ● எல்.மகராஜ் பிள்ளை, கொல்கத்தா, ● எம்.விஜயலட்சுமி, மும்பை-76, ● கே.எஸ். பாண்டியன், பெங்களூர்-47, ● மு.கண்ணாயிரம், திருநெல்வேலி டவுன், ● பி.இசக்கி பாண்டியன், திருநெல்வேலி, ● ஆர்.சந்திரா, மதுரை-2, ● பா.சீனிவாசன், காகிதபுரம், கரூர், ● எல்.மாறன், மேல்பட்டி, ● அம்மணி தீத்தாரப்பன், திருச்சி-21, ● மா.முடிராஜ், கோமதி முத்துபுரம், ● எஸ்.ஏஞ்சலினா, தூத்துக்குடி.

(மற்ற வாசகர்கள் விவரம் அடுத்த வாரம்)

திருநெல்வேலி மாவட்டச் செய்திகள்

கதிர்பாரதி. ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு


"விஷம் போல் ஏறும் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்நிலையில், மத்திய அரசு அவ்வப்போது போடும் சில உத்தரவுகளால், உற்பத்தி கூடுதலாக இருந்தாலும் சர்க்கரை, பருப்பு ஆகியவற்றின் விலைகள் உயர்கின்றன. இதுபோன்ற ஓர் உத்தரவால், இறங்கி வரும் பருப்பு விலை மீண்டும் ஏற்றத்தைச் சந்திக்கும்'' என்று எச்சரிக்கிறார் மதுரை பருப்பு உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் சங்கத் தலைவர் வெற்றிச்செல்வன்.

''பருப்பு வகைகளின் உற்பத்தி நமது தேவைக்கு ஏற்றபடி இல்லை. சென்ற வருடம் விளைச்சல் குறைவு. இறக்குமதி செய்தும், துவரை கிலோ ரூ.95க்கும், பயத்தம் பருப்பு ரூ.90க்கும் விற்றன. ஆனால், இந்த வருடம் விளைச்சல் பரவாயில்லை. சந்தையில் கூடுதல் வரத்தால் துவரை 62 ரூபாய்க்கும், பாசிப் பருப்பு 77 ரூபாய்க்கும் விற்கின்றன. இந்நிலையில், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்த பருப்பை உள்நாட்டில் விநியோகிக்காமல், தரத்தை சிறிது மேம்படுத்தி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்று சமீபத்தில் ஓர் உத்தரவைப் போட்டிருக்கிறது மத்திய அரசு. தான்ஸானியா, கனடா, பர்மா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து நாம் பருப்பை இறக்குமதி செய்கிறோம். அவை பொது விநியோகத் திட்டத்துக்கு, மிகவும் பயன்படுகிறது. ஆனால், இப்படிப்பட்ட உத்தரவை மத்திய அரசு இப்பொழுது பிறப்பித்ததின் மூலம், சில தனிப்பட்ட தொழில் குழுமங்கள் கோடிக்கணக்கில் பணம் சுருட்ட வழிபிறந்துள்ளது. உள்நாட்டு உற்பத்தியும் வெளிநாட்டு இறக்குமதியும், கலந்து விநியோகித்தால்தான் விலை கட்டுப்பாட்டில் இருக்கும். மேலும், இந்த இறக்குமதி அனுமதியைப் பயன்படுத்தி, ருசி குறைந்த பருப்பை இறக்குமதி செய்துவிட்டு, அதே அளவுக்கு, நமது நாட்டு ருசி மிகுந்த பருப்பை வெளிநாட்டுக்கு அனுப்பி விடுவார்கள். இதற்கு யூக வணிகம் கைகொடுக்கிறது. மொத்தத்தில் சில தனிப்பட்டவர்கள் கொள்ளையடிப்பதற்காக 120 கோடி மக்களைப் பிழிகிறது'' என்கிறார் வெற்றிச் செல்வன்.

இது எந்த அளவுக்குச் சரி? என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினர் டி.கே. ரங்கராஜனைக் கேட்டோம்.

''வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தம், சார்க் நாடுகளுடனான ஒப்பந்தங்களின் அடிப்படையில் நமது பல அத்தியாவசிய உணவுப் பொருட்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யவேண்டிய கட்டாயத்தில் இந்தியா இருக்கிறது. இந்த அடிப்படையில் அரிசி, சர்க்கரை, பருப்பு, பஞ்சு ஆகியவற்றின் ஏற்றுமதியை அனுமதித்து பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் கொள்ளை லாபம் அடிக்க அனுமதிக்கிறது மத்திய அரசு. உற்பத்தி கூடுதலாக இருந்தும், உள்நாட்டுச் சந்தையில் விலைவாசி ஏற்றத்துக்கு இதன் மூலம் வழிவகுக்கப்பட்டிருக்கிறது. உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் ஆகியவற்றின் மோசமான விளைவுகளை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்'' என்கிறார் ரங்கராஜன்.

- ஸ்ரீநி



✱ டி.கே. ரங்கராஜன்



✱ வெற்றிச்செல்வன்

வேகாத பருப்பு!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 - 11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.